# மனித குலத்தின் காலண்டர்

## தலைப்பிறையைக் கண்ணால் கண்டு மாதத்தை ஆரம்பிப்பதால் நிகழும் பிரச்சினைகளுக்கு சந்திரமாதக் கணக்கீட்டு முறையில் தீர்வு


தொகுப்பு

**ஆய்வுக்குழு**

ஹிஜ்ரா கமிட்டி ஆஃப் இந்தியா



வெளியீடு

**HIJRA COMMITTEE OF INDIA**

**ஹிஜ்ரா கமிட்டி ஆஃப் இந்தியா**

# MANITHAKULATHIN CALENDAR - Tamil


- Compiled by:
  **Research Team**
  HIJRA COMMITTEE OF INDIA
- Subject:
  **Method of Moon Observation**
  **& Problems in Moonsighting**
- First Edition:
  Shawwal1430 Hijri (October 2009)
- Pages:
  168
- Number of Copies:
  3000
- Price:
  As a Donation Rs: 100/-
- Type Setting and Design by:
  **SAFA Graphics,** Madurai. Cell: 93440-96221.
- Published by:
  **HIJRA COMMITTEE OF INDIA**
  State Office: 160/101 North Main Road, Eruvadi, Tirunelveli Dt.
  Tamil Nadu, India. Pin: 627 103. Ph: 04637-241200.
  Fax: 00914637241127. Email: hijriindia@gmail.com
  H.O. 7/858B, AWH building, S.M. Street,673 001
  Kozhikode - 673 001. Kerala, India. Tel: 0495-2724007
  email: hijraindia@rediffmail.com


## கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

Our websites WWW.lunarcalendar.in hijracalendar.in hijracalendar.com


© **HIJRA COMMITTEE OF INDIA**
All rights reserved. No part of this publication may be reproduced or transmitted in any form or any information storage or retrieval system, without permission in writing from HIJRA COMMITTEE OF INDIA.

இதை மறுபதிப்பு செய்ய விரும்பும் அன்பர்கள் ஹிஜ்ரா கமிட்டி ஆஃப் இந்தியா நிறுவனத்திடம் எழுத்துப்பூர்வமாக அனுமதி பெற்றுக் கொண்டு வெளியிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஹிஜ்ரா கமிட்டி ஆஃப் இந்தியா

# பதிப்புரை

*புகழனைத்தும் ஏக இறைவனுக்கே!*

*நிலாவைக் காட்டி குழந்தைகளுக்கு சோறு ஊட்டிய நம் தாய் மார்கள் அது ஏன் படைக்கப்பட்டுள்ளது என திருக்குர்ஆன் கூறியுள்ளதை அன்றே நமக்குச் சொல்லிக் கொடுத்திருந்தால் இன்று சமுதாயம் இவ்வளவு சீரழிந்திருக்காது.*

*நிலாச் சோறு உண்பதற்கு நிலாவைப் பயன்படுத்தாமல் அதுதான் காலண்டர் என்பதை இனிமேலாவது உலகத்திற்கு உரத்த குரலில் ஒலிப்போம். இன்ஷா அல்லாஹ்!*

*பூமியில் ஏதாவது ஓர் இடத்தில் பிறை பிறந்துவிட்டால், பிறை பிறந்த அந்த நாளுக்கு அடுத்த நாளை முதல் தேதி எனக் கணக்கிட வேண்டும். அந்த நாளிலிருந்து மாதத்தை ஆரம்பிக்க வேண்டும். இந்தக் கணக்கின் அடிப்படையில் செயல்படு வதற்கு திருக்குர்ஆனோ நபிவழியோ தடையாய் இல்லை.*

*உலகத்தில் சதா இரண்டு தேதி இரண்டு கிழமைகள் இருப்பது யதார்த்தம். இரண்டு கிழமைகளுக்கும் பிறை எப்படி தேதியை அறிவிக்கிறது என்பதை இந்நூல் விளக்குகிறது.*

*சந்திர மாதத்தின் ஆரம்பத்தை அறிந்து கொள்வதற்கு தெளிவான அறிவின் துணையை நாடுவதை திருக்குர்ஆனோ நபிவழியோ தடைசெய்யவில்லை. மாறாக அங்கீகரிக்கின்றன.*

*சந்திரக் காலண்டர் நோன்பு நோற்பதற்கும், பெருநாள் கொண்டாடுவதற்கும், ஹஜ் செய்வதற்கும் மட்டும் உரித்தானது அல்ல. மாறாக அது மவாகீத்து லின்னாஸ் - உலக மக்களின் காலண்டர் ஆகும். பெருநாள் கொண்டாடுவதில் ஊருக்கு ஊர் உள்ள ஒற்றுமையை விட உலக மக்களின் ஒற்றுமைதான் கருத்தில் கொள்ளப்படவேண்டும். இதற்கு சந்திரக் காலண்டர் தெளிவான தீர்வைத் தருகிறது.*

*எந்த நாளில் மாதத்தை ஆரம்பித்து நோன்பு நோற்பது, பெரு நாள் கொண்டாடுவது என்பதை மக்கள் தாங்களாகவோ, டவுன் காஜிக்கள் அரசின் தூண்டுதலாலோ, தலைவர்கள் தங்களின் சுயவிருப்பத்திற்கோ தீர்மானித்துக் கொள்வதும், அதை மக்களின் மீது திணிப்பதும் மார்க்கம் அல்ல. வானங்கள் மற்றும் பூமியைப் படைத்த நாளிலிருந்தே இறைவன் அதைத் தீர்மானித்தே வைத்துள்ளான். இதைத்தான் கத்ர் என்றும்*

இறைவன் குறிப்பிடுகிறான். இதை அறிந்து இதன்படி செயல் படுவது இறைநம்பிக்கையாளர்களின் கடமையாகும்; இது தான் நிலையான மார்க்கமாகும்.

பிறையைக் கண்ணால் கண்டுதான் மாதத்தை ஆரம்பித்து வணக்கவழிபாடுகள் செய்யவேண்டும் என்ற கோட்பாட்டை 1400 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் அது சரியாகவே இருக்கிறது என யாராலும் நிரூபிக்க முடியவில்லை. அது சந்தேகத்திற்கு இடமானதாய் மாறியும் இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில் திருக்குர்ஆன் மற்றும் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் அறிவின் துணையோடு ஒரு கோட்பாடு முன்வைக்கப்பட்டால் அது ஏன்? எதற்கு? எப்படி? என்ன என்பன குறித்து சிறிதும் யோசிக்காமல் தமக்கே உரிய பாணியில் இப்படி எல்லாம் முற்கால அறிஞர்கள் சொல்லவில்லையே எனவே புறக்கனிப்போம் என குரல் கொடுப்பது ஒன்றும் சிம்மக் குரல் ஆகிவிடாது. உண்மையில் இது சீரழிப்பதற்குத்தான் வழிவகுக்கும். இப்படிப்பட்ட நிலையிலிருந்து இறைவன் நம்மைக் காப்பானாக!

வானஇயற்பியல் (Astro Physics) அறியாத உம்மீ சமுதாயத்திற்கு சந்திரனின் கணக்கு தெரியாது என அன்று கூறிய நபி(ஸல்), வானஇயற்பியல் அறிந்து சந்திரக் கணக்கைத் தெரிந்துள்ள இன்றைய சமுதாயம் அதைச் செயல்படுத்தக் கூடாது என்ற கட்டுப்பாட்டை விதிக்கவில்லை.

வானஇயற்பியல் கல்வி நமக்குத் தேவையில்லை என முழங்கும் நம்மவர்களுக்கு பிறை எந்தத் திசையில் உதிக்கிறது என்பதில் கூட சந்தேகம். சிலர் சொல்கிறார்கள், அது மேற்கே உதிக் கிறதாம்! பார்ப்பதிலும் கூட பல குழப்பங்கள். மக்ரிப்பிற்குப் பின்பு மறையும் பிறையைப் பார்த்துவிட்டு இதுதான் நாளைய பிறை எனத் தப்புக் கணக்குப் போடுகிறார்கள். உண்மையில் அது நாம் பார்க்கும் அந்த நாளுக்கே உரிய பிறை என நபி(ஸல்) கூறியதை அறியாதிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளுக்கு தக்க ஆதாரங்களுடன் தெளிவான தீர்வுகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு **ஹிஜ்ரா கமிட்டி ஆஃப் இந்தியா**
ஹிஜ்ரி 29.10.1430 சனிக்கிழமை
(17.10.2009)

# அணிந்துரை

*புகழனைத்தும் ஏக இறைவனுக்கே!*

*மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். நற்செய்தி கூறுவோராகவும், 'அச்சுறுத்தி' எச்சரிப்பவராகவும் தூதர்களை அல்லாஹ் அனுப்பினான். அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுக்கு வேதத்தையும் சத்தியத்துடன் அருளினான். எனினும் அவ்வேதம் கொடுக்கப்பெற்றவர்கள் தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும் தங்களுக்கு இடையே உண்டான பொறாமையால் மாறுபட்டார்கள். எனினும், அவர்கள் மாறுபட்ட உண்மையின்பால் நம்பிக்கையாளருக்குத் தன் அருளால் அல்லாஹ் நேர்வழிகாட்டினான். இவ்வாறே, அல்லாஹ், தான் நாடியோரை நேர்வழியில் நடத்துகிறான்.*

***திருக்குர்ஆன் 2:213***

*மனிதர்களிடம் தெளிவான சிந்தனை தோன்றியப் பின்னரே கருத்து வேறுபாடுகள் வெடித்தன; இதை மேற்கண்ட வசனம் நமக்குச் சொல்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏகத்துவப் பிரச்சாரத்தை உத்வேகத்துடன் நாம் தொடங்கினோம். இணைவைப்புக் கலாச்சாரத்தை இனங்காட்டினோம். நாம் ஒட்டி உறவாடியவர்கள் இதை ஜீரணிக்காமல் நம்மை விரட்டி யடித்தனர்; சமுதாயத்தில் பல பிளவுகளை ஏற்படுத்தினர்.*

*பிறை குறித்து தெளிவான திருக்குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும், உண்மை நிலைகளையும் சிலகாலமாக நாம் எடுத்து வைத்து வருகிறோம். நாம் ஒட்டி உறவாடியவர்கள் நம்மை வெறுக்கிறார்கள். இணைவைப்பாளர் அன்று நம்முடன் நடந்து கொண்டதுபோலவே இன்று இவர்களும் நம்முடன் நடந்துகொள்கிறார்; அர்த்தமற்ற விமர்சனங்களை அள்ளித் தெளிக்கிறார்கள்; சுயவெறுப்பு விருப்புக்கு இதை களமாக அமைக்கிறார்கள்; சத்தியத்தை ஏற்க மறுக்கிறார்கள். தம் சகோதரர்களை இவர்கள் வெறுப்பது ஆச்சரியமாக உள்ளது.*

*எந்நிலையிலும் உறுதியாக நின்று இறைவன் நாடும் வரை சத்தியத்தை எடுத்துரைப்போம். இவர்களும் நம் சகோதரர் களே! தற்போது இல்லாவிட்டாலும் பிற்காலத்தில் நம் சகோதரர்களுக்கு நிச்சயமாக சத்தியம் புலப்படும்; சத்தியத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை இன்னும் மிச்சம் இருக்கிறது. அந்த நம்பிக்கையுடன் தான் ஹிஜ்ரா கமிட்டி ஆஃப் இந்தியா இப்பணியைத் தொடர்ந்து செய்துவருகிறது.*

பொதுவாக நம் தவறைத் நாமே தேடிப்பார்த்து, உணர வேண்டும்; வருந்த வேண்டும்; திருந்த வேண்டும்.

இறைவன் மட்டுமே குறையே இல்லாதவன். மனிதர்கள் அனைவரும் தவறிழைக்கக்கூடியவர்களே! மக்களில் சிறந்தவர் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் இதில் விதிவிலக்கு அல்ல. ஆயினும் தவறு எனத் தெரிந்ததும் அதற்கான பரிகாரத்தைத் தேடிக்கொள்பவர்களே சிறந்தவர்கள். சான்றாக,

பத்ருப்போர்க் கைதிகளை எப்படி நடத்திக் கொள்வது என ஆலோசித்து ஈட்டுத்தொகை பெற்றுக் கொண்டு விடுவிப்பது என்ற முடிவுக்கு நபி(ஸல்) வந்தார்கள். அதைத் தவறு என அல்லாஹ் உணர்த்தியபோது நபி(ஸல்) அவர்களும் அபூ பக்கர்(ரலி) அவர்களும் அதற்காக அழுதார்கள்; பாவ மன்னிப்புக் கோரினார்கள். “இப்படிப்பட்ட பண்பு நம்மில் ஏன் காணாமல் போனது” என நம் உள்ளத்தைக் கேட்போம்.

உண்மையில் நாம் செய்வதை நம் உள்ளம் அறியும். நம் உள்ளத்தில் உதித்தோடுவது நமக்குப் புரியும். மனிதன் தன்னை அறியாத நிலையில் இல்லை. சத்தியம் இதுதான் என்பது நமக்குத் தெரிந்துவிட்டால் அதை உள்வாங்கும் பக்குவம் நமக்கு வேண்டும். நம்மை விஞ்சுதல் இம்மையில் கூடாது என்ற சிந்தனையே நமக்கு முதல் எதிரி. சத்தியத்தை தவறாது நாமும் கடைபிடிப்போம்; பிறரையும் கடைபிடிக்கத் தூண்டுவோம். மறுமைக்கு நன்மை சேர்க்கும் நன்னோக்கத்தில் நாம் இதைச் செய்வோம்.

வல்ல அல்லாஹ் நம் சகோதர உள்ளங்களை ஒன்றிணைத்து, பெருமை, பொறாமை, பகைமை, வஞ்சகம், கோபம், குரோதம், பழிதீர்க்கும் எண்ணம் முதலிய தீய பண்புகளை வேரறுத்து நற்பண்புளை அளிப்பானாக! பிறை விஷயத்தில் தெளிவான ஞானத்தை நமக்கு வழங்குவானாக! உலகம் முழுவதும் ஒரே நாளில் மாதத்தை ஆரம்பித்து நோன்பு நோற்கவும் பெரு நாட்கள் கொண்டாடவும் வழிவகுப்பானாக! இந்த அரும்பணிக்காக உழைக்கும் உள்ளங்களுக்கு உரிய கூலியை வழங்குவானாக என உள்ளார்ந்து பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்

**கே.எஸ். ரஹ்மத்துல்லாஹ் இம்தாதீ**
அழைப்பாளர்,
இஸ்லாமிய வழிகாட்டு மற்றும் அழைப்பு மையம்,
அல் கோபர், சவூதி அரபியா.

# பொருளடக்கம்...

## முதல் பகுதி

1. மனிதகுலத்தின் காலண்டர்.................................................. 9
2. காலண்டரின் உபயோகம்..................................................... 9
3. அன்றாட காரியங்களைத் திட்டமிடுதல்........................... 10
4. சூரியக் காலண்டரின் குறைபாடுகள்................................. 11
5. சூரியக் காலண்டர் எனக் குறிப்பிடலாமா?........................ 11
6. இதர காலண்டரின் குறைகள்.............................................. 13
7. சரியான காலண்டர் எது?...................................................... 14
8. முன்னோர்களும் காலண்டரைப் பின்பற்றியுள்ளார்கள்.. 15
9. சந்திரக் காலண்டர்................................................................ 17
10. உலகத் தேதிக் கோடு (International Dateline)......... 18
11. உலகத் தேதிக் கோட்டை நிர்ணயித்தது யார்?................ 18
12. உலகத் தேதிக்கோடு குறித்து திருக்குர்ஆன்................. 19
13. வானஇயற்பியல் – Astro physics பற்றி திருக்குர்ஆன்... 21
14. நபி(ஸல்) அவர்களின் காலத்திலும் சந்திரக் கணக்குப் பார்க்கப்பட்டுவந்தது.......................... 24
15. ஒருபோதும் கணக்கில் முரண்பாடு இருக்காது............... 29
16. பிறையைக் கண்ணால் காண்பதன் நோக்கம்.................. 30
17. வானஇயற்பியல் – Astro physics கல்வி அவசியமா?........ 33
18. வானஇயற்பியல் கணக்கை திருக்குர்ஆன் எதிர்க்கிறதா?............................................... 34
19. அவர்களிடம் சில கேள்விகள்................................................ 38
20. சந்திரன் என்றாவது காணாமல் போகுமா?....................... 40
21. சட்டங்களை உள்ளார்ந்து புரிதல் வேண்டும்.................... 43
22. நபி(ஸல்) கணக்கின் அடிப்படையில் செயல்பட்ட நிகழ்வுகள்........................................................... 50
23. குரைப் சம்பவம் ஒரு பார்வை.................................................. 52
24. இக்திலாஃபுல் மதாலிஃ தத்தம் பகுதி............................... 55
25. ரூஃயத் என்றால் என்ன?..................................................... 57
26. அமாவாசை – Newmoo ே என்றால் என்ன?.................. 62

27. தேய் பிறையிலிருந்து வளர்பிறையாக மாறுதல்............... 62
28. ஹிஜ்ரா காலண்டரின் வரலாறு............................................ 64
29. கணக்கை வலியுறுத்தும் ஹதீஸ்கள்.................................. 65
30. நாளின் ஆரம்பம்................................................................... 68
31. நாளின் ஆரம்பத்திற்கு நாம் கூறும் ஆதாரங்கள்............ 74
32. லைலாஹ் என்றால் என்ன?.................................................. 81
33. எந்த நாள் அரஃபா?.............................................................. 84
34. விசிபிலிட்டி கிரிட்டீரியா – கணக்கின்
மூலம் பார்க்கிற முறைகள்.................................................... 88
35. விஞ்ஞான யுகத்தில் இத்தா தேவையா ?.......................... 91
36. சந்திரக் காலண்டரின் கணக்கீடு........................................ 93
37. மாதத்தை எவ்வாறு கணக்கிடுதல்?.................................. 100
38. பிறைபிறந்துவிட்டால் மாதத்தை எவ்வாறு ஆரம்பிப்பது? 108
39. தவறும் தலைவர்களும் தடுமாறும் மக்களும்.................... 111

## இரண்டாம் பகுதி

40. 1428 முதல் 1523 வரையிலான காலண்டர்
41. அட்டவணையும் அதைக் கையாளும் முறையும்............... 118
42. சந்திரக் காலண்டர் அட்டவணை......................................... 120

# மனிதகுலத்தின் காலண்டர்

**கா**லண்டர் ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் பொதுவானது. அது முறையானதாய் இருந்தால்தான் மனிதனால் சரியாக இயங்க முடியும்; அவனால் பணிகளையும் திட்டமிட்டு நடத்தமுடியும். மொழிவாரியாகவும் இனவாரியாகவும் காலண்டர்கள் இன்று அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் மிகச்சரியான காலண்டர் எது என்பதை நாம் அறியவேண்டும். எதாவது ஒரு காலண்டரைப் பின்பற்றினால் போதாதா என்பது சரியான நிலைப்பாடு அல்ல. ஏனெனில் பல்வேறான குழப்பங்கள் உண்டாகிவிடும். வரலாறுகள் திரிக்கப்படும்; காரியங்களை சரியான காலத்தில் திட்டமிட்டு நடத்த முடியாது. பதிவுகளை முறைப்படுத்தவும் பத்திரப்படுத்தவும் இயலாது. கொடுக்கல்வாங்கலில் முறைகேடுகள் ஏற்படும். எனவே, குழப்பங்களைத் தவிர்க்க மிகச்சரியான காலண்டர் அத்தியாவசியம். எனவே மொழி, இனம், தேசம், மதம், கொள்கை முதலிய எல்லாவற்றையும் தாண்டி மிகச்சரியான காலண்டரின் பால் மனித சமுதாயம் அடியெடுத்து வைத்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

## காலண்டரின் உபயோகம்

எந்தக் காலத்தில் நாம் என்ன செய்தோம்? நம்முடைய முன்னோர்கள் எப்போது என்னென்ன செய்தார்கள்? நாம் எந்தக் காலத்தில் இப்போது வாழ்கிறோம் என்பது போன்ற செய்திகளை காலண்டரின் வாயிலாகத்தான் பதிவு செய்து வைக்க முடியும். இனி எந்தக் காலத்தில் நாம் என்னென்ன செய்யவேண்டும் என்பவற்றைத் திட்டமிடுவதற்கும் இந்தக் காலண்டரின் துணை மிகவும் அவசியமாகிறது.

குறிப்பிட்ட ஒரு நாளில் நீங்கள் சென்னையிலிருந்து டெல்லி செல்வதற்காக இரயிலிலோ, விமானத்திலோ டிக்கட் முன்பதிவு செய்ய வேண்டும். ஆனால் உங்களிடம் காலண்டர் இல்லை. எந்த நாளை எப்படிக் குறிப்பிடுவீர்கள்? அது யாருக்குப் புரியும்? இது ஒரு சின்னப் பிரச்சினை; ஒரு தனி நபர் பிரச்சினையாகக் கூட இருக்கலாம். ஆனால் ஒரு நாட்டின் பிரச்சினைகள், அரசாங்க நடவடிக்கைகள், ஒரு பெரும் கம்பெனியின் பிரச்சினைகள் இதற்கெல்லாம் காலண்டர் தேதி இல்லாமல் எவ்வாறு நடத்தமுடியும்? சுருங்கச் சொன்னால் காலண்டரின் உபயோகம் கணக்கில் அடங்காதது.

*இன்று உலகில் பயன்படுத்தப்படும் மின்னணு சாதனங்கள், விண்கலன்கள், கம்ப்யூட்டர் சாதனங்கள் போன்ற பல சாதனங்கள் காலண்டருடன் இணைந்தே செயல்படுகின்றன.*

*காலண்டர் இல்லாத மனிதனின் வாழ்க்கை கால் பங்கு வாழ்க்கையாகவும், சரியான காலண்டர் இல்லாத வாழ்க்கை அரைகுறை வாழ்க்கையாகவும்தான் இருக்கும். காலண்டரின் உபயோகமின்றி மனிதனால் முழுமையாக இயங்கமுடியாது. காலண்டரின் உபயோகம் குறித்த பரந்த கண்ணோட்டத்தில் நாம் இருக்கவேண்டும். எனவேதான் வானங்கள் மற்றும் பூமியைப் படைத்த நாளிலிருந்தே இறைவன் காலண்டரையும் ஏற்படுத்திவிட்டான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.* ***(காண்க: திருக்குர்ஆன் 9:36,37)***

## அன்றாட காரியங்களைத் திட்டமிடுதல்

*கடன் கொடுக்கல் வாங்கல், வியாபாரக் கொடுக்கல் வாங்கல், பிறப்பு இறப்பு பதிவு செய்தல், பணிகளைத் திட்டமிடுதல், அரசாங்க நடவடிக்கைகள், போர் போன்ற தேசப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடுதல், பெண்களின் மாத விலக்கு மற்றும் கர்ப்ப காலங்களைக் கணக்கிடுதல், பயண நாள்களைத் திட்டமிடுதல், ஹஜ் போன்ற வணக்க வழி பாடுகளை மேற்கொள்ளுதல், சொத்து வாங்குதல் விற்றல், கம்ப்யூட்டர் இயக்கம், மின்னணு இயந்திரங்களின் இயக்கம், விமானங்கள், கப்பல்கள், இரயில்கள் டிக்கட் பதிவு செய்தல் விவசாயம் செய்தல் இவை தொடர்பான கணக்குகளை பார்த்தல், சரி செய்தல் உள்ளிட்ட வாழ்க்கையில் நிகழும் சகல காரியங்களையும் காலண்டரின் துணை இருந்தால்தான் சரியாகச் செய்யமுடியும். காலண்டர் இல்லை என்றால் எந்தக் காலத்தில் என்ன நடந்தது? எப்போது என்ன செய்யவேண்டும் என்பதைக்கூட மனிதனால் அறிந்துகொள்ள முடியாது.*

*காலண்டர் இல்லை என்றால் நபி(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் எனப்படும் ஹதீஸ்களைப் பதிவு செய்து வைக்கப்பட்டது உண்மைதான் என உறுதி செய்யமுடியாது. காலண்டர் இல்லை என்றால் ஹதீஸ் அறிவிப்பாளர்கள் வாழ்ந்த காலத்தையும் அவர்கள் தொடர்பான வரலாற்றுச் செய்திகளையும் எவ்வாறு ஏற்கமுடியும்? காலண்டர் இல்லை என்றால் மனித சமுதாயத்திற்கு ஹதீஸ்கள் முறையாகக் கிடைக்காமல்கூட போயிருக்கலாம்.*

## சூரியக் காலண்டரின் குறைபாடுகள்

சூரியக் காலண்டர், மக்கள் இதை ஆங்கிலக் காலண்டர், கிர்கோரியன் காலண்டர், கிருத்துவக் காலண்டர் என பல பெயர்களில் அழைக்கிறார்கள். இன்று பரவலாக மக்கள் இந்தக் காலண்டரைத்தான் பின்பற்றிவருகிறார்கள். இந்தக் காலண்டர் சரியாக இருக்கிறதா? இதில் உள்ள பிரச்சினை கள் என்ன என்பதை பொதுவாக யாரும் சிந்திப்பதில்லை. உண்மையில் இந்தக் காலண்டர் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய தகுதியற்றதாய் இருக்கிறது.

## சூரியக் காலண்டர் எனக் குறிப்பிடலாமா ?

பூமி சூரியனை ஒருமுறை சுற்றி வருவதற்கு ஆகும் கால அளவைக் கணக்கிட்டு ஏற்படுத்தப்பட்டதுதான் கிரிகோரியன் காலண்டர் ஆகும். சூரியன் ஒரு மையப்பொருள் ஆகும். பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனைச் சுற்றிவருகிறது. தற்போது பூமி தன்னைத்தானே ஒரு முறை சுற்றிவருவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் சுமார் 24 மணி நேரம் எனக் கணிக்கப்படுகிறது.

பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனை ஒருமுறை சுற்றிவருவதற்கு தற்போது உள்ள 24 மணிநேரக் கணக்கின்படி 365.2421 நாள்கள் ஆகின்றன. தற்போது இந்த 6 மணி நேரத்தை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை கிரிகோரிய காலண்டரின் பிப்ரவரி மாதத்தில் 29 நாள்கள் என ஒரு நாளை அதிகமாக்கிக் கணக்கைச் நிவர்த்தி செய்கிறார்கள்.

சூரியக் காலண்டரில் இருக்கும் குறையைகளை அதைப் பின் பற்றும் மக்கள் கசப்பாக இருப்பினும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் மாற்றத்திற்குத்தான் தயாராக இல்லை. சூரியக் காலண்டரில் மாதங்களின் நாள்கள் 28,29,30,31 ஆகிய நான்கு நிலைகளைக் கொண்டதாய் இருக்கின்றன. கடந்த கி.பி. 2000 ஆண்டில் பிப்ரவரி மாதத்தின் நாள்களை 30 ஆக அமைக்க வேண்டும் அவ்வாறு செய்தால்தான் நாள்களின் எண்ணிக்கை சரியாகும் என்றார்கள். ஆனால் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் அப்படியே விட்டுவிட்டார்கள். உலகில் ஒரு நாள் காணாமலேயே போய்விடும் என்ற சர்ச்சை எழுந்தது. இதற்கு உலகம் முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. எனவே இதை பின்னர் சரிசெய்து கொள்ளலாம் என ஒத்திபோட்டு விட்டனர்.

சூரியக் காலண்டர் இவ்வாறு குறைபாடு உள்ளதாய் இருப்ப தால் இதை அங்கீகரிக்கமுடியாது. எனவே, கூடின நாள்களை சரிசெய்யாமல் போகும் அதே வேளையில் தற்போது ஒவ்வோர் ஆண்டின் துவக்கத்திலும் அந்த ஆண்டில் ஏற்பட்ட தவறுகளை சிலநொடிகள் நாள் ஆரம்பிப்பதைத் தாமதப்படுத்தி சரி செய்து வருகிறார்கள்.

இந்தக் காலண்டரை காமன் எரா **(CE)** என அழைக்கிறார்கள். உண்மையில் இது கிரிஸ்டியன் எரா **(CE)** - ஒரு கிருத்துவக் காலண்டராகும். இது கிருத்துவக் காலண்டர் என்பதை அறியாமலேயே மக்கள் பின்பற்றிவருவதுதான் வேடிக்கை. முஸ்லிம்கள் இதை கவனத்தில் கொண்டாக வேண்டும்.

மேலும் இது சீசனை (காலநிலைகளை) மையமாகவைத்து அமைக்கப்பட்ட காலண்டராகும். சீசனல் காலண்டர் என்றும் இதை அழைக்கிறார்கள். இந்த காலண்டர் இல்லாவிட்டால் மழைக்காலம், பனிக்காலம், கோடைக்காலம் போன்ற சீசன் களை சரியாகக் கணக்கிட்டு அறியமுடியாது. எனவே இந்தக் காலண்டரும் அவசியமானதுதான் என வாதிடுகிறார்கள்.

சீசனை அறிவதற்காக ஒரு காலண்டர் அவசியமற்றது என்பதை விளங்கவேண்டும். அவர்களின் கூற்றுப்படியே வைத்துக் கொண்டாலும் உலகின் எல்லாப்பகுதியும் சம காலத்தில் ஒரேமாதிரியான சீகனைக் கொண்டதாக அமைந்திருக்க வில்லை. உலகின் ஒரு பகுதி குளிர் காலம் என்றால் இன்னொரு பகுதி வெயில் காலமாக இருக்கும். எனவே சீசனல் காலண்டர் என்ற அடிப்படையிலும் இதை உலகத்திற்கு பொதுவான காலண்டர் என எடுத்துக் கொள்ளமுடியாது. சீசன்களை அறிந்து கொள்ள வசதியாக நட்சத்திரங்களை இறைவன் படைத்துள்ளான். அவற்றின் தோற்றம் மற்றும் மறைதலை வைத்து சீசன்களை அறியமுடியும்.

பூமியின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்ட இந்தக் காலண்டரை வானஇயற்பியல் ஆய்வாளர்கள் தவிர மற்றவர்கள் சரியா தவறா என்பதைக்கூட கணக்கிடமுடியாது.

சூரியனை அடிப்படையாக வைத்து ஒரு நாளைத்தான் கணக் கிட முடியுமே தவிர ஒரு மாதத்தைக் கணக்கிட முடியாது. எனவே, இப்போது நமக்கு ஒரு சரியான காலண்டர் தேவை; அதைத் தேடும் கடமை நமக்கு இருக்கிறது. எனவே, நாம் ஒரு சரியான காலண்டரை நோக்கிச் செல்வோம்.

# இதர காலண்டரின் குறைகள்

*சூரியக் காலண்டர் மட்டுமல்ல சந்திர காலண்டர் தவிர மற்ற எல்லாக் காலண்டர்களும் குறையுடையதாகவே இருக்கின்றன. சந்திரக் காலண்டரிலும் தங்கள் இஷ்டத்திற்கு மாற்றியமைக்கப் பட்ட காலண்டர்கள் இருக்கின்றன. அவை முறையானதல்ல.*

*உதாரணத்திற்கு, யூதர்கள் பயன்படுத்தும் சந்திர காலண்டரை எடுத்துக் கொள்ளலாம்.*

## Classification of Years in the Hebrew Calendar

| | Deficicient | Regular | Complete |
|---|---|---|---|
| Ordinary year | 353 | 354 | 355 |
| Leap year | 383 | 384 | 385 |

## Months of the Hebrew Calendar

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Tishri | 30 | 7. | Nisan | 30 |
| 2. | Heshvan | 29* | 8. | Iyer | 29 |
| 3. | Kislev | 30** | 9. | Sivan | 30 |
| 4. | Tevet | 29 | 10. | Tammuz | 29 |
| 5. | Shevat | 30 | 11. | Av | 30 |
| 6. | Adar | 29*** | 12. | Elul | 29 |

* In a complete year, Heshvan has 30 days.

** Ina deficient year, Kislev has 29 days.

*** In aleap year Adar I has 30 days: it is followed by Adar II with 29 days

HCI

## Terminology of hebrew Calendar

Deficient *(Haser)* month: comprising 29 days.

Full *(male)* month: a month comprising 30 days.

Ordinary year: ayear comprising 12 months, with a total of 353, 354 or 355 days.

Leap year: a year comprising 13 months with a total of 383, 384 or 385 days.

For Calendarical calculation, the beging at 6.00PM, with is designated 0 hrs. Calendarical calculations are refer to the meridian of Jerusalem 2 hrs 21 minites east of greenwich.

Ref: http://astro.nmsu.edu/~lhuber/leaphist.html

மேலே கூறப்பட்டுள்ள காலண்டர் முறை யூதர்கள் பின்பற்றும் சந்திரக் காலண்டர் முறையாகும். இஸ்லாம் தடுத்த எல்லா அம்சங்களும் பொருந்திய ஒரு காலண்டராகும். இவர்களும் மாலை 6 மணியிலிருந்து நாளை கணக்கிடுகிறார்கள். அவர்கள் ஜெருசலத்தை கிப்லாவாக ஆக்கியுள்ளார்கள்.

**நாம் இந்நூலில் எடுத்துவைத்துள்ள சந்திரக் காலண்டர் முற்றிலும் யூதர்களுக்கு எதிரானதும் திருக்குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையிலும் இருக்கிறது.**

சந்திரன் பூமியைச் சுற்றுவதால் ஏற்படும் படித்தரங்களை வைத்து மனிதர்களுக்கு காலண்டரை அல்லாஹ் அமைத்துக் கொடுத் துள்ளான். அந்தக் காலண்டரை அப்படியே பின்பற்றி னால் மட்டுமே சரியான காலண்டரை நாம் அடையமுடியும்.

## சரியான காலண்டர் எது ?

காலண்டர் என்ற பெயர் பெற்றுவிட்டதால் எல்லாக் காலண்டரையும் சரியான காலண்டர்தான் என ஏற்றுக் கொள்ளமுடியாது. காலண்டர் என்றால் அதை அன்றாட வாழ்க்கையில் மக்கள் பின்பற்றி வரும்போது அதில் தவறுகள் நிகழ்ந்துள்ளதா என்பதை சரிபார்க்கும் வகையில் அமைந் திருக்க வேண்டும். இப்படி ஒரு காலண்டர் குறித்துத்தான் இறைவன் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்.

வானங்களையும், பூமியையும் படைத்த நாளிலிருந்தே அல்லாஹ்விடம் அவனுடைய பதிவேட்டில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். அவற்றில் நான்கு தடுக்கப் பட்டவை. அதுவே நிலையான மார்க்கம். எனவே, அந்த மாதங்களில் உங்களுக்கு நீங்களே அநீதி இழைத்துக் கொள்ளா தீர்கள். இணைவைப்போர் உங்களுடன் எல்லா முறைகளிலும் போரிடுவதுபோல் நீங்களும் அவர்களுடன் எல்லா முறை களிலும் போரிடுங்கள். பயபக்தியுடையோருடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**திருக்குர்ஆன் 9:36**

மேற்கண்ட வசனத்தின் மூலம் உலகத்தைப் படைத்தபோதே இந்த உலகத்தில் வரவிருக்கும் ஆண்டுகளில் எந்தெந்த மாதங்களில் 29 நாள்கள் என்றும், எந்தெந்த மாதங்களில் 30 நாள்கள் என்றும் அல்லாஹ் முடிவு செய்துவிட்டான். 12 மாதங்களில் நான்கு மாதங்களை உலகத்தை படைத்தபோதே

தடுக்கப்பட்டதாய் இறைவன் ஆக்கியுள்ளது இதற்கு ஒரு சான்றாகும்.

**அந்நஸீவு** - மாற்றுதல் - நிராகரிப்பையே அதிகப்படுத்துகிறது. இதன் மூலம் இறைமறுப்பாளர்களே வழி கெடுக்கப்படு கின்றனர். ஏனெனில், அல்லாஹ் தடுத்ததின் எண்ணிக்கையைப் பூர்த்தியாக்குவதற்காகவும், அல்லாஹ் தடுத்ததை விட்டுவிடு வதற்காகவும் ஓர் ஆண்டில் அதை ஆகுமாக்கிக் கொள் கின்றனர். மற்றோர் ஆண்டில் அதை தடுத்துக் கொள்கின்றனர். இன்னும் இறைமறுப்பாளர் கூட்டத்தை அல்லாஹ் நேர்வழி நடத்த மாட்டான். **திருக்குர்ஆன் 9:37**

பனிரெண்டு மாதங்களைக் கொண்டதுதான் காலண்டர் என்ற செய்தியை மேற்கண்ட வசனம் கூறுகிறது. ஆண்டுக்கு 12 முறை பூமியைச் சுற்றிவரும் சந்திரனை அடிப்படையாகக் கொண்டதாய் அந்தக் காலண்டர் இருக்க வேண்டும். பூமி சூரியனை ஒருமுறை சுற்றிவருவதைக் கணக்கிட்டு அந்த நாள்களை மாதங்களாகப் பிரித்துள்ள காலண்டர் அல்ல என்பதைப் பின்வரும் இறைவசனம் கூறுகிறது.

பிறைகள் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். "அவை மக்களுக்குக் காலம் காட்டி **(Calendar)** ஆகவும், ஹஜ்ஜின் காலத்தை அறிவிப்பவையாகவும் இருக்கின்றன" என (தூதரே) கூறும். வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் பின்புறமாக வருவதில் புண்ணியமில்லை. மாறாக, இறைவனுக்கு அஞ்சுபவனே புண்ணியவான். எனவே, வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் வாசல்கள் வழியாகவே வாருங்கள்! இன்னும், நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சுங்கள்!

**திருக்குர்ஆன் 2:189**

சந்திரன் படைக்கப்பட்டிருப்பதன் நோக்கத்தை இவ்வசனம் நமக்கு உணர்த்துகிறது. காலண்டர் சந்திரனை அடிப்படை யாகக் கொண்டுதான் இருக்கவேண்டும் என நமக்கு இறைவன் அறிவிக்கிறான். ஏனெனில் சந்திரக் காலண்டர் மட்டுமே குறையற்றது.

## முன்னோர்களும் காலண்டரைப் பின்பற்றினார்கள்

நமக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த சமுதாயங் களும் காலண்டரைப் பின்பற்றினார்கள் என்பதும் நபி(ஸல்)

அவர்களின் காலத்தில் வாழ்ந்த மக்களும் காலண்டரைப் பின்பற்றினார்கள் என்பதை பின் வரும் வசனங்கள் மற்றும் ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.

இணைவைப்பாளர்களை விட (இவ்வுலக) வாழ்க்கையில் (யூதர்கிளில் சிலர்) பேராசை கொண்டிருப்பதை (தூதரே) காண்பீர். அவர்களில் ஒவ்வொருவரும் ஓராயிரம் ஆண்டுகள் வாழவேண்டும் என விரும்புகிறார்கள். அப்படியே அவர்களுக்கு வயது நீட்டிக்கப்பட்டாலும், அவர்களை அவனுடைய தண்டனையிலிருந்து அது விலக்கிவிடாது.

**திருக்குர்ஆன் 2:96**

இறைநம்பிக்கையாளர்களே! குறிப்பிட்ட தவணைவரை உங்களுக்குள் கடன் கொடுத்து வாங்கினால் அதை எழுதிக் கொள்ளுங்கள். **திருக்குர்ஆன் 2:282**

“அவ்வாறாயின் அது நாற்பது ஆண்டுகள்வரை அவர்களுக்குத் தடுக்கப்பட்டுவிட்டது. (அதுவரை) பூமியில் தட்டழிவர். எனவே, இத்தீய கூட்டத்தார் குறித்து கவலையுறாதீர்” என (இறைவன்) கூறினான். **திருக்குர்ஆன் 5:26**

“நீங்கள் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு (விருத்தியான) விவசாயம் செய்வீர்கள். பிறகு நீங்கள் அறுவடை செய்வதில், நீங்கள் உண்பதற்கான ஒரு சிறிய அளவைத் தவிர, அதனை அதற்குரிய கதிர்களிலேயே விட்டுவையுங்கள்.

**திருக்குர்ஆன் 12:47**

அவர்கள் தங்களின் குகையில் முன்னூறு ஆண்டுகளுடன், ஒன்பதை அதிகமாக்கி (309 ஆண்டுகள்) தங்கினார்கள்.

**திருக்குர்ஆன் 18:25**

தண்டனையை அவர்கள் அவசரமாகத் தேடுகிறார்கள். தன் வாக்குறுதிக்கு அல்லாஹ் மாறுசெய்ய மாட்டான். இன்னும், உம் இரட்சகனிடம் ஒரு நாள் என்பது, நீங்கள் கணக்கிடுகிற ஆயிரம் ஆண்டுகளைப் போன்றது. **திருக்குர்ஆன் 22:47**

“நீர் என்னிடம் எட்டு ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்னும் நிபந்தனையின் பேரில் என்னுடைய இந்த இரண்டு பெண்களில் ஒருவரை உமக்கு மணமுடித்துக் கொடுக்க நிச்சயமாக நான் விரும்புகிறேன். நீர் அதைப் பத்தாக (ஆண்டுகளாக) பூர்த்திசெய்தால்… அது உம்முடைய விருப்பமே. நான் உமக்குச் சிரமத்தைக் கொடுக்க விரும்பவில்லை.

*இறைவன் நாடினால் என்னை நல்லவர்களில் காண்பீர்" என அவர் (ஷுஐப் மூஸாவிடம்) கூறினார்.* **திருக்குர்ஆன் 28:27**

*நூஹை அவரின் சமூகத் தாரிடம் நிச்சயமாக அனுப்பினோம். அவர்களுக்கிடையில் அவர் ஆயிரத்திற்கு ஐம்பது ஆண்டுகள் குறைவாகத் தங்கியிருந்தார். அவர்கள் அக்கிரமக்காரர்களாய் இருந்ததால் அவர்களைப் பிரளயம் பிடித்தது.*

**திருக்குர்ஆன் 29:14**

*வானத்திலிருந்து பூமிவரையிலுள்ள காரியத்தை அவனே நிர்வகிக்கிறான். பின்னர், ஒரு நாள் அது அவனிடமே மேலே ஏறிச்செல்லும். அதன் அளவு நீங்கள் கணக்கிடக்கூடிய ஆயிரம் ஆண்டுகளாகும்.* **திருக்குர்ஆன் 32:5**

*கண்ணியமிக்க நாள் ஆயிரம் மாதங்களை விட மிகச் சிறந்ததாகும்.* **திருக்குர்ஆன் 97:3**

*(அடிமைப் பெண்ணாயிருந்த) பரீரா என்னிடம் வந்து, 'என்னுடைய எஜமானர்கள் ஆண்டிற்கு ஓர் ஊக்கியா வீதம் ஒன்பது ஊக்கியாக்கள் செலுத்திய பின் என்னை விடுதலை செய்து விடுவதாக எழுதித் தந்துள்ளனர்; அதற்கு நீங்கள் உதவ வேண்டும்! என்றார்...* **அறிவித்தவர்: ஆயிஷா(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, எண்: 2168**

## சந்திரக் காலண்டர்

*பூமியை சந்திரன் சுற்றிவருவதால் மாதத்திற்கு 29 அல்லது 30 நாள்கள் வருகின்றன. இதுவே சந்திரக் காலண்டரின் விதி யாகும். பூமியைச் சந்திரன் சுற்றி வருவதற்கு ஆகும் கால அளவு 29 அல்லது 30 நாள்களாகும். இதுதான் ஒரு மாதமாகும். பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வரும் காலத்திற்குள் சந்திரன் பனிரெண்டு முறை பூமியைச் சுற்றிவிடும். எனவேதான் சந்திர ஆண்டு 354/355 நாள்களைக் கொண்டதாய் இருக்கிறது. இது தற்போதைய தவறான சூரிய காலண்டரை விட 11 நாள்கள் வித்தியாசப்படுகிறது.*

*மேலும் நோன்பு ஹஜ் போன்ற இஸ்லாமிய மார்க்கத்தின் வணக்க வழிபாடுகள் வெயில் மழை குளிர் போன்ற எல்லாக் காலத்திலும் நடைபெறவேண்டும். இதற்காக அல்லாஹ் ஏற்படுத்திய விதியாகும்.*

போர் நடவடிக்கைகள் எல்லாக் கால நிலையிலும் ஏற்பட்டால் அவர்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்படும் எனவே அவர்கள் விரும்பும் காலகட்டத்தில் போர்கள் நடத்திட யூதர்கள் திட்டமிட்டார்கள். நபி(ஸல்) அவர்களின் காலகட்டத்திற்கு முன்னதாகவே இது போன்ற நாள்களைக் கூட்டிக் குறைக்கும் மாதங்கள் மாற்றும் காலண்டர்களை ஏற்படுத்தினர். இதனால் தான் அல்லாஹ் உலகத்தைப் படைக்கும்போதே மாதங்களின் எண்ணிக்கையைக் கூறிவிட்டு அதில் முழுமையாக போர் தடைசெய்யப்பட்ட மாதங்கள் நான்கு எனவும் கூறிவிட்டான்.

அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள அந்த எண்ணிக்கைக்கு மாற்றமாக மாதங்களைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்பதே நம் கடமையாகும். இதற்காகத்தான் கணக்கு அல்லாத கால கட்டங்களில் பிறையின் மன்ஸில்களை கண்ணால் பார்த்து அதன் மன்ஸில்கள் என்ன தேதியைக் காட்டுகிறதோ அதன் அடிப்படையில் உங்கள் நாள்களின் தேதியை அமைத்துக் கொள்ளுங்கள் என நபி(ஸல்) தெளிவுபடுத்தினார்கள்.

## உலகத் தேதிக் கோடு (International Dateline)

நாள் உலகத்திற்கு எப்போது ஆரம்பிக்கிறது? எப்போது முடிகிறது? நாள் எந்த இடத்தில் ஆரம்பித்து எந்த இடத்தில் முடிகிறது என்பதையும் ஒரு நாளின் அளவு கோல் என்ன என்பதையும் அறிந்தால்தான் நம்மால் தேதியைப் பிரித்து அறியமுடியும். நாள் ஆரம்பிக்கும் எல்லையைத்தான் உலகத் தேதிக் கோடு என நாம் அழைக்கிறோம். உலகத் தேதிக்கோடு (International Dateline) பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது. இங்கிருந்துதான் உலகத்திற்கு நாள் ஆரம்பிக்கிறது. இந்தத் தேதிக் கோட்டிற்கு கிழக்கு திசையில் உள்ளவர்கள் பிந்தைய தேதி 30 வியாழக்கிழமையிலும் மேற்கு திசையில் உள்ளவர்கள் முந்தைய தேதி 1 வெள்ளிக்கிழமையிலும் இருப்பார்கள்.

## உலகத் தேதிக் கோட்டை நிர்ணயித்தது யார்?

உலகத் தேதிக் கோட்டை மனிதன் சுயமாக தன் இஷ்டத்திற்கு அமைத்துக் கொள்ளவில்லை. அதற்குத் தகுந்த இடத்தை இறைவன் அளித்துள்ளான். இறைவன் அளித்துள்ள அந்த இடத்தில்தான் உலக தேதிக் கோடு அமைக்கப்பட்டுள்ளது. தேதிக்கோட்டிலிருந்து பார்க்கும்போது அங்கு யதார்த்தமாக கிழக்கு திசையில் உள்ளவர்கள் வியாழக் கிழமையில் லுஹர்

தொழுகையைத் தொழுகிறார்கள். மேற்கு திசையில் உள்ள வர்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையைத் தொழு கிறார்கள். இன்னும் தெளிவாகச் சொல்வ தென்றால் முஸ்லிம்களின் இந்தத் தொழுகையை மையமாக வைத்துத் தான் உலகத் தேதிக்கோட்டை உலகம் இன்று தெளிவாகப் புரிந்து கெள்ளமுடிகிறது.

## உலகத் தேதிக்கோடு குறித்து திருக்குர்ஆன்

உலகத் தேதிக்கோடு குறித்து திருக்குர்ஆன் பேசுகிறது.

*இரண்டு கிழக்கு திசைகளுக்கும் இரட் சகன்; இரண்டு மேற்கு திசைகளுக்கும் இரட்சகன்.* **திருக்குர்ஆன் 55:17**

தேதிக்கோட்டுக்கு கிழக்கே இருப்பவர்களுக்கு ஒரு கிழக்கு ஒரு மேற்கு; அவ்வாறே தேதிக்கோட்டுக்கு மேற்கே இருப்பவர் களுக்கு ஒரு கிழக்கு ஒரு மேற்கு என்பதைத்தான் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. இதற்கு விளக்கமாக மற்றோர் இடத்தில் இடம்பெற்றிருப்பதைக் காண்போம்.

*துல்கர்னைன் பற்றியும் அவர்கள் உம்மிடம் வினவுகிறார்கள். “அவரின் வரலாற்றில் சிறியதை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்” எனக் கூறும்!*

*நிச்சயமாக பூமியில் அவருக்கு வசதிகளை அளித்தோம். இன்னும், ஒவ்வொரு பொருளிலிருந்தும் வழியையும் அவருக்குக் கொடுத்தோம்.*

*எனவே, அவர் ஒரு வழியைப் பின்பற்றினார்.*

*சூரியன் மறையும் திசை வரை அவர் சென்றடைந்த போது, அது ஒரு சேறு கலந்த நீரின் பால் மறைவதைக் கண்டார். அங்கே ஒரு சமூகத்தாரையும் அவர் கண்டார்...*

*பின்னர், அவர் மற்றொரு வழியைப் பின்பற்றிச் சென்றார்.*

*சூரியன் உதயமாகும் திசையை அவர் அடைந்தபோது, அது ஒரு சமூகத்தாரின் மீது உதயமாகி இருப்பதை (அவர்களை வெயிலில்) கண்டார். அவர்களுக்கும் சூரியனுக்கும் இடையே நாம் தடுப்பை ஏற்படுத்தவில்லை.*

*அவ்வாறே! அவருடன் இருந்த ஒவ்வொன்றையும் நன்கு அறிந்துள்ளோம்.* **திருக்குர்ஆன் 18:83-91**

மேற்கண்ட வசனங்களை நன்றாகப் படித்துப் பார்க்க வேண்டும். துல்கர்னைன் ஒரு வழியாக உலகத்தைச் சுற்றி

வருகிறார். ஓர் இடத்தை அடைந்தபோது அங்கு சூரியன் மறைவதைக் காண்கிறார். பின்னர் வந்த வழியே திரும்பாமல் மீண்டும் ஒரு வழியில் தொடர்ந்து செல்கிறார். அங்கு அவர் சூரியன் உதயமாவதைக் காண்கிறார். அதாவது ஒரு கிழமையில் மறைந்த சூரியன் மீண்டும் அதே கிழமையில் எவ்வாறு உதயம் ஆகும்? ஆனால் அவர்கள் அவ்வாறு உதயமாவதைப் பார்க் கிறார். எனவே அவர் அன்று உலகத் தேதிக் கோட்டைத்தான் கடந்திருக்கிறார் என்பது புரிகிறது.

ஒரு கிழமையில் மறைந்த சூரியன் மீண்டும் அதே கிழமையில் மீண்டும் உதிக்குமா? ஏனில்லை நிச்சயமாக உதிக்கும். அதைத்தான் இவ்வசனம் கூறுகிறது.

ஒருவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பயணம் செய்தால் அவர் வெள்ளிக்கிழமையில் சூரியன் மறைதலைப் பார்த்துக் கொண்டே செல்வார். அவர் மீண்டும் மேற்கு நோக்கித் தொடர்ந்து பயணம் செய்தால் சனிக்கிழமையை அடைவார். மீண்டும் அவர் அதே திசையில் பயணத்தைத் தொடர்ந்தால் மீண்டும் வெள்ளிக் கிழமையின் சூரிய உதயத்தை அடைவார்.

சூரியன் மறைவதும் உதிப்பதும் இயல்பாக பூமி சுற்றுவதால் ஏற்படுகிறது. இதை அல்லாஹ் சிறப்பித்துக் கூறுவதை நாம் ஆராய்ந்தால் “இரண்டு கிழக்கு திசைகளுக்கும் இரண்டு மேற்கு திசைகளுக்கும் இரட்சகன்” என்பதை வைத்து மறைந்த சூரியனை அதே நாளில் மீண்டும் உதிப்பதைக் காணலாம். இதுதான் இரண்டு கிழக்கு திசைகள் மற்றும் இரண்டு மேற்கு திசைகள் என்பதைப் புரிந்து கொள்ளும் முறையாகும்.

இவ்வாறே ஒவ்வோர் ஊருக்கும் ஒரு கிழக்கு ஒரு மேற்கு இருக்கிறது என்பதையும், சூரியனின் ஒவ்வோர் உதயமும் ஒரு கிழக்கு, ஒவ்வோர் அஸ்தமனமும் ஒரு மேற்கு என்பதையும் திருக்குர்ஆன் கூறுகிறது.

எனவே, கிழக்கு மற்றும் மேற்குத் திசைகளின் இரட்சகன் மீது சத்தியமாக! நாமே ஆற்றல் மிக்கவன். **திருக்குர்ஆன் 70:40**

மேற்கண்ட வசனத்திற்கு திருக்குர்ஆன் விரிவுரைகளில் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சூரியன் ஒவ்வொரு நாளும் ஓர் இடத்தில் உதயமாகிறது. அது ஒரே இடத்தில் தினமும் உதயமாவதில்லை. அவ்வாறே அஸ்தமனம் ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இடத்தில் நடக்கிறது. தினமும்

ஒரே இடத்தில் அஸ்தமிப்பதில்லை. எனவே சூரியனுக்கு 360 உதயமாகும் இடமும் 360 மறையும் இடமும் இருக்கிறது. இதைத்தான் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் பல கிழக்கு திசைகள் மற்றும் பல மேற்கு திசைகள் என்பதற்கு இந்த விளக்கம் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இரண்டு கிழக்கு திசைகளுக்கும் இரண்டு மேற்கு திசைகளுக்கும் இரட்சகன் என்பதற்கு இந்த விளக்கத்தை அளிக்க முடியாது. இதற்கு உலகத் தேதிக்கோடு என விளக்கமாக அளித்தால் தான் மிகச்சரியாக இருக்கும். 55:17 வசனத்திற்கு விளக்கமாக எந்த நபிமொழியும் கிடைக்கவில்லை.

## வானஇயற்பியல் - Astro physics பற்றி திருக்குர்ஆன்

சந்திரனுக்குக் கணக்கு இருக்கிறது. கணக்கு இல்லாமல் அது தான்தோன்றித்தனமாகச் சுற்றுவதில்லை. சந்திரனின் அந்தக் கணக்கை காலத்தை அறியும் கணக்காக இறைவன் அமைத்துக் கொடுத்துள்ளான். அந்தக் கணக்கின் அடிப்படையில்தான் நம்முடைய காலண்டர் இருக்க வேண்டும். அதுதான் காலத்தை அளக்கும் அளவையாகும். இதைத் தவிர்த்து வேறு எந்த முறையில் காலத்தை அளந்தாலும் காலத்தை சரியாக நம்மால் அளக்கவே முடியாது. நிச்சயமாக அதில் தவறுகள் ஏற்படத் தான் செய்யும். சந்திரனின் அந்தக் கணக்கை திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

சூரியனும் சந்திரனும் கணக்கின்படியே உள்ளன.

**திருக்குர்ஆன் 55:5**

அவனே விடியச் செய்பவன்; நீங்கள் அமைதிபெற அவனே இரவையும், காலக் கணக்கினை அறிவதற்காகச் சூரியனையும், நிலவையும் உண்டாக்கினான். இவை யாவும் வல்லமையில் மிகைத்த, அனைத்தையும் அறிந்தவனின் ஏற்பாடாகும்.

**திருக்குர்ஆன் 6:96**

இரவையும், பகலையும் நாம் இரண்டு அத்தாட்சிகளாய் ஆக்கினோம். பின்னர் இரவின் அத்தாட்சியை மங்கச் செய்தோம். உங்களின் இரட்சகனிடமிருந்து நீங்கள் அருளைத் தேடிக் கொள்வதற்காகவும் ஆண்டுகளின் எண்ணிக்கை மற்றும் கணக்கை நீங்கள் அறிவதற்காகவும், பகலின் அத்தாட்சியைப் பார்ப்பதற்குரியதாகவும் ஆக்கினோம்.

ஒவ்வொரு பொருளையும் தெளிவாக விவரித்தோம்.

**திருக்குர்ஆன் 17:12**

சூரியனையும் சந்திரனையும் தம் வழிகளில் (முறையாகச்) செல்லுமாறு அவனே உங்களுக்காக வசப்படுத்திக் கொடுத்தான். அவனே இரவையும் பகலையும் உங்களுக்காக வசப்படுத்திக் கொடுத்தான். **திருக்குர்ஆன் 14:33**

இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு அவன் வசப்படுத்திக் கொடுத்தான். நட்சத்திரங்களும் அவன் கட்டளைப்படியே வசப்படுத்தப் பட்டுள்ளன. ஆய்ந்தறியக் கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதிலும் சான்றுகள் உள்ளன.

**திருக்குர்ஆன் 16:12**

இரவையும் பகலையும், சூரியனையும் நிலவையும் அவனே படைத்தான். அவை ஒவ்வொன்றும் தன் சுழற்சிப் பாதையில் (Orbits) நீந்திச்செல்கின்றன. **திருக்குர்ஆன் 21:33**

பழைய பேரீத்தங் குலையின் பாளையைப் போல் ஆகும் வரை சந்திரனுக்குப் பல படித்தரங்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.

**திருக்குர்ஆன் 36:39**

சூரியன் சந்திரனை பிடிக்க முடியாது; இரவு பகலை முந்தமுடியாது. இவ்வாறே ஒவ்வொன்றும் தன் சுழற்சிப் பாதையில் (Orbits) நீந்திச்செல்கின்றன. **திருக்குர்ஆன் 36:40**

சந்திரன் ஒளியும் மங்கி, சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப் பட்டு விடும். **திருக்குர்ஆன் 75:8,9**

பிறைகள் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். "அவை மக்களுக்குக் காலம் காட்டியாகவும், ஹஜ்ஜின் காலத்தை அறிவிப்பவையாகவும் இருக் கின்றன" எனக் கூறும்.

வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் பின்புறமாக வருவதில் புண்ணிய மில்லை. மாறாக, இறைவனுக்கு அஞ்சுபவனே புண்ணிய வான். எனவே, வீடுகளுக்குள் அவற்றின் வாசல்கள் வழியாகவே வாருங்கள்! இன்னும், நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சுங்கள்! **திருக்குர்ஆன் 2:189**

சூரியனை ஒளி அளிப்பதாகவும், சந்திரனை ஒளியைப் பிரதி பலிப்பதாகவும் அவனே ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக் கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறியும் பொருட்டு அதற்கு (நிலவுக்கு) பல படித்தரங்களை உண்டாக்கினான். தக்க

*காரணங்கள் இன்றி இவற்றை அல்லாஹ் படைக்கவில்லை. அறிவுள்ள மக்களுக்குத் தன் அத்தாட்சிகளை விவரிக்கிறான்.*

**திருக்குர்ஆன் 10:5**

*வானங்களையும், பூமியையும் படைத்த நாளிலிருந்தே அல்லாஹ்விடம் அவனுடைய பதிவேட்டில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். அவற்றில் நான்கு தடுக்கப் பட்டவை. அதுவே நிலையான மார்க்கம். எனவே, அந்த மாதங்களில் உங்களுக்கு நீங்களே அநீதி இழைத்துக் கொள்ளா தீர்கள். இணைவைப்போர் உங்களுடன் எல்லா முறைகளிலும் போரிடுவதுபோல் நீங்களும் அவர்களுடன் எல்லா முறை களிலும் போரிடுங்கள். பயபக்தியுடையோருடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.*

**திருக்குர்ஆன் 9:36**

*அந்நஸீவு - மாற்றுதல் - நிராகரிப்பையே அதிகப்படுத்துகிறது. இதன் மூலம் இறைமறுப்பாளர்களே வழி கெடுக்கப்படு கின்றனர். ஏனெனில், அல்லாஹ் தடுத்ததின் எண்ணிக்கையைப் பூர்த்தியாக்குவதற்காகவும், அல்லாஹ் தடுத்ததை விட்டுவிடுவ தற்காகவும் ஓர் ஆண்டில் அதை ஆகுமாக்கிக் கொள்கின்றனர். மற்றோர் ஆண்டில் அதை தடுத்துக் கொள்கின்றனர். இன்னும் இறைமறுப்பாளர் கூட்டத்தை அல்லாஹ் நேர்வழி நடத்த மாட்டான்.*

**திருக்குர்ஆன் 9:37**

*மனிதர்களுக்கு (சீரிய) வழிகாட்டியாகவும், தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டதாகவும், (சத்தியம் மற்றும் அசத்தியத்தைப்) பிரித்து அறிவிப்பதாகவும் உள்ள குர்ஆன் ரமளான் மாதத்தில்தான் அருளப்பட்டது. எனவே, உங்களில் அம்மாதத்தை அடைந்தவர் நோன்பு நோற்கட்டும். உங்களில் நோயுற்ற நிலையிலோ பயணத்திலோ இருப்பவர், (நோன்பை) பின்வரும் நாள்களில் நோற்கட்டும்.*

*அல்லாஹ் உங்களுக்கு இலகுவை விரும்புகிறானே தவிர, உங்களுக்குச் சிரமமளிக்க விரும்பவில்லை. இது ஏனெனில், எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தியாக்குவதற்கும், உங்களை அல்லாஹ் நேர்வழியில் நடத்தியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப் படுத்துவதற்கும், நன்றி செலுத்துவதற்குமே ஆகும்.*

**திருக்குர்ஆன் 2:185**

*ஒட்டகம் எவ்வாறு படைக்கப் பட்டுள்ளது என்பதை அவர்கள் ஆராய வேண்டாமா? வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது*

*என்றும், மலைகள் எவ்வாறு நடப்பட்டுள்ளன என்றும், பூமி அது எவ்வாறு விரிக்கப்பட்டிருக்கிறது என்றும் (அவர்கள் ஆராய வேண்டாமா?)* **திருக்குர்ஆன் 88:17-20**

*வானத்தில் கோள்கள் தங்கும் இடங்களை உண்டாக்கி, அவற்றிடையே ஒரு விளக்கையும் (சூரியனையும்), பிரதி பலிக்கும் சந்திரனையும் உண்டாக்கியவன் பாக்கியமிக்கவன்.*
**திருக்குர்ஆன் 25:61**

*நிச்சயமாக நீரும், உம்முடன் இருப் போரில் ஒரு கூட்டத்தாரும் இரவில் மூன்றில் இரண்டு பாகங்களுக்குக் குறை வாகவோ, அதில் பாதியோ, அதில் மூன்றில் ஒரு பாகத்திலோ (வணக்கத் திற்காக) நிற்கிறீர்கள் என்பதை உம்முடைய இரட்சகனே அறிகிறான்.*

*இன்னும், அல்லாஹ்தான் இரவையும், பகலையும் நிர்ண யிக்கிறான். நீங்கள் அதை சரியாக நிர்ணயிக்க மாட்டீர்கள் என்பதையும் அவன் அறிகிறான். எனவே, அவன் உங்களை மன்னித்து விட்டான்...* **திருக்குர்ஆன் 73:20**

## நபி(ஸல்) அவர்களின் காலத்திலும் சந்திரக் கணக்குப் பார்க்கப்பட்டுவந்தது

*நபி(ஸல்) அவர்களின் காலத்திலும் சந்திரக் காலண்டரின் கணக்குப் பார்க்கப்பட்டும் பின்பற்றப்பட்டும் வந்தது. அவர்கள் சந்திரனின் படித்தரங்களை வைத்து ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பம் மற்றும் முடிவின் கணக்கை அறிந்து செயல்பட்டார்கள். ஆனால் அன்றைய சூழலில் இறைவன் கூறியுள்ள திருக்குர்ஆன் 55:5 வசனத்தின்படி சூரிய சந்திர சுழற்சியை துல்லியமாக முன்கூட்டியே கணக்கிடும் முறையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. மாதங்களின் கணக்குகளைச் சரி செய் வதற்குப் பிறையின் படித்தரங்களைக் கண்ணால் காண வேண்டிய நிலையில் இருந்தார்கள். பிறையின் படித்தரங் களைக் கண்ணால் காண்பதை ஒரு சடங்காகவோ வணக்கமாகவோ அவர்கள் கருதவுமில்லை; கட்டளையிடவு மில்லை. அது ஒரு வஸீலா; அவ்வளவுதான்.*

*இன்றைய உலக இஸ்லாமிய அறிஞர்கள் ஒட்டுமொத்தமாக ஒரு கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அதாவது நபி(ஸல்) அவர்களின் காலத்தில் சந்திரக் கணக்கு* **இல்முள் ளன்** *- உறுதியற்ற சந்தேகமான கல்வியாகவும், சந்திரனைக் கண்ணால்*

காண்பது **இல்முல் யகீன்** - உறுதியான கல்வியாகவும் இருந்தது. ஆனால் இன்று சந்திரக் கணக்கு **இல்முல் யகீன்** - உறுதியான கல்வியாகவும், சந்திரனைக் கண்ணால் காண்பது **இல்முள் ளன்** உறுதியற்ற, சந்தேகமான கல்வியாகவும் மாறியுள்ளது. எனவே நாம் சந்திரனைக் கண்ணால் கண்டு அல்லது கண்டவர்களின் சாட்சியத்தை ஏற்று வணக்கவழி பாடுகளைத் தொடங்கினாலும் சந்திரனைப் பார்த்த செய்தி பரிசீலிக்கப்பட வேண்டும். அதாவது சந்திரக் கணக்குப்படி இன்று பிறை தென்படாது என்று இருக்கும்பட்சத்தில் அன்று பிறைபார்த் தாக தகவல் தரப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

ஆனால், இறைவன் விதித்துள்ள கணக்கு என்றுமே இல்முள்ளன்னாக - உறுதியற்ற சந்தேகமான கல்வியாக இருக்கமுடியாது என்பதே உண்மை.

சுருங்கச் சொன்னால் பிறை இன்று தெரியாது என்பதை ஒப்புக் கொள்வதற்கு நபி(ஸல்) காட்டித்தராத சூரிய சந்திர அஸ்தமன வித்தியாசக் கணக்கை எடுத்துக் கொள்ள 100 சதவீதம் தயாராகிவிட்டார்கள்.

அன்றைய சூழலிலும் நபி(ஸல்) பிறையைக் கண்ணால் கண்டு கணக்கை சரிசெய்யச் சொன்னார்களே தவிர கணக்கே பார்க்கக்கூடாது என ஒருபோதும் கூறவில்லை. இது தொடர்பாக இடம் பெற்றுள்ள ஹதீஸ்களைக் காண்போம்.

**عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ الشَّهْرُ تِسْعٌ وَعِشْرُونَ لَيْلَةً فَلَا تَصُومُوا حَتَّى تَرَوْهُ فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَأَكْمِلُوا الْعِدَّةَ ثَلَاثِينَ. رواه البخاري رقم الحديث 1774**

“மாதம் இருபத்தி ஒன்பது நாள்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. எனவே, அதைக் காணாதவரை நோன்பு நோற்காதீர்கள். அது உங்களுக்கு மறைக்கப்பட்டிருந்தால் எண்ணிக்கையை முப்பதாகப் பூர்த்தியாக்குங்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1774**

عَــنْ عَبْــدِ اللَّــهِ بْــنِ عُمَــرَ رَضِــيَ اللَّــهُ عَنْهُمَــا قَــالَ قَــالَ رَسُــولُ اللَّـــهِ صَـــلَّى اللَّـــهُ عَلَيْـــهِ وَسَـــلَّمَ الشَّـــهْرُ تِسْـــعٌ وَعِشْـــرُونَ فَـــإِذَا رَأَيْتُـــمْ الْهِلَـــالَ فَصُـــومُوا وَإِذَا رَأَيْتُمُـــوهُ فَـــأَفْطِرُوا فَـــإِنْ غُمَّ عَلَيْكُــمْ فَاقْــدِرُوا لَــهُ رواه مســلم رقــم الحــديث1798

மாதம் இருபத்தி ஒன்பது நாள்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. எனவே, பிறையைப் பார்த்தால் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள். இன்னும் அதை நீங்கள் பார்த்தால் நோன்பைத் துறந்து கொள்ளுங்கள். உங்களுக்கு மூடப்பட்டிருந்தால் அதை கணக்கிட்டுக் கொள்ளுங்கள் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1798**

عَنْ نَافِعٍ عَنْ ابْنِ عُمَرَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَـــلَّى اللَّـــهُ عَلَيْـــهِ وَسَـــلَّمَ الشَّهْرُ تِسْعٌ وَعِشْرُونَ فَلَا تَصُـــومُوا حَتَّـــى تَـــرَوْهُ وَلَـــا تُفْطِـــرُوا حَتَّـــى تَرَوْهُ فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَاقْدُرُوا لَهُ ثَلَاثِينَ قَالَ فَكَـــانَ ابْـــنُ عُمَـــرَ إِذَا كَـــانَ شَعْبَانُ تِسْعًا وَعِشْرِينَ نَظَرَ لَهُ فَإِنْ رُئِيَ فَـــذَاكَ وَإِنْ لَـــمْ يُـــرَ وَلَـــمْ يَحُـــلْ دُونَ مَنْظَرِهِ سَحَابٌ وَلَا قَتَرَةٌ أَصْبَحَ مُفْطِرًا فَإِنْ حَالَ دُونَ مَنْظَـــرِهِ سَـــحَابٌ أَوْ قَتَرَةٌ أَصْبَحَ صَائِمًا قَالَ فَكَانَ ابْنُ عُمَرَ يُفْطِرُ مَـــعَ النَّـــاسِ وَلَـــا يَأْخُـــذُ بِهَـــذَا الْحِسَابِ. رواه النسائي رقم الحديث1976

"மாதம் இருபத்தி ஒன்பது நாள்களாகவும் இருக்கிறது. எனவே, நீங்கள் அதைக் காணாத வரை நோன்பு நோற்காதீர்கள். இன்னும் நீங்கள் அதைக்காணாத வரை நோன்பைத் துறக் காதீர்கள். உங்களுக்கு மூடப்பட்டிருந்தால் அதை முப்பதாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) வாயிலாக நாஃபிஃ அறிவித்தார்.

ஷஅபான் இருபத்தி ஒன்பது ஆகிவிட்டால் இப்னு உமர்(ரலி) அதை (பிறையை) பார்ப்பார். அது தென்பட்டால் அதைக் கடைபிடிப்பார். அவருடைய பார்வையில் மேகமோ மேகத்தின் ஒரு துண்டோ இல்லாத நிலையில் அது தென்படாவிட்டால்

மறுநாள் நோன்பில்லாமல் காலைப் பொழுதை அடைவார்கள். மேகமோ மேகத்தின் ஒரு துண்டோ இருக்கும் நிலையில் அது தென்படாவிட்டால் மறுநாள் நோற்றவர்களாக காலைப் பொழுதை அடைவார்கள்.

ஆனால் மக்களுடன் சேர்ந்துதான் இப்னு உமர்(ரலி) நோன்பை விடுவார்கள். அதில் இந்தக் கணக்கை எடுக்கமாட்டார்கள் என்றும் நாஃபிஃ கூறினார்.
**நூல்: சுனன் நஸாயீ, ஹதீஸ் எண்: 1976, அபூ தாவூத், அஹ்மத்**

மேற்கண்ட ஹதீஸ் மற்றும் இப்னு உமர்(ரலி) அவர்களின் நடைமுறைப்படி ஸஹாபாக்களில் பெரும்பகுதியினர் இருந்தனர். அவர்களில் அன்னை ஆயிஷா, அபூ ஹுரைரா, முஆவியா(ரலி) முதலிய ஸஹாபாக்களும் இருந்தார்கள். இந்தச் செய்தியை பைஹகீயில் காணலாம்.

ஸஹாபாக்களின் இந்தக் குழுவை நபி(ஸல்) கண்டிக்கவில்லை. இது தவறு என்றும் சொல்லவில்லை. மாறாக மாதம் முப்பது நாள்களை மட்டும் கொண்டது என எண்ணிக் கொள்ளாதீர்கள். 29 நாள்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. எனவே பிறையைப் பார்த்து உங்களின் கணக்கை சரி செய்து கொள்ளுங்கள் என்ற கருத்தில்தான் நபி(ஸல்) கூறியுள்ளார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஷஅபானை இருபத்தி ஒன்பதை அடைந்தால் பிறையைக் காணவேண்டும்; பிறை கண்டுவிட்டால் மறு நாள் ரமளான் நோன்பு நோற்க வேண்டும். பிறையைக் காணாவிட்டால் மறுநாள் நோன்பு நோற்கக் கூடாது; நாள்களை முப்பதாகக் கணக்கிடவேண்டும். இவ்வாறுதான் நபி(ஸல்) கட்டளையிட்டுள்ளார்கள் என தற்போது கூறிவருகிறோம்.

பிறையைக் கண்ணால் காணாமல் கணக்கிடுவது கூடாது என்ற வாதம் சரி என்றால், ஷஅபான் இருபத்து ஒன்பது அன்று மேகத்தின் காரணமாக பிறையைக் கண்ணால் காணாதபோது நபி(ஸல்) அவர்களின் கூற்றுப்படி நாள்களை முப்பதாகக் கணக்கிடாமல் ஷஅபான் மாதத்தின் நாள்களை இருபத்தி ஒன்பதிலேயே இப்னு உமர்(ரலி) ஏன் முடித்துக் கொண்டார்கள் என்பதை யோசிக்க வேண்டும்.

இப்னு உமர்(ரலி) நபி(ஸல்) அவர்களுக்கு மாற்றமாகச் செயல்பட்டுவிட்டார்கள் எனக்கூறமுடியாது. ஏனெனில்

இப்னு உமர்(ரலி) சுன்னாவைப் பின்பற்றிய அளவிற்கு மற்றவர்கள் பின்பற்றினார்கள் எனக் கூறமுடியாது.

நபி(ஸல்) அவர்களின் முன்னிலையிலேயே நபித்தோழர்கள் தர்க்கம் செய்து கொண்ட சம்பவம் ஒன்று நபித்தோழர்கள் கணக்கின் படி செயல்பட்டுவந்ததற்கு பெரும் சான்றாக உள்ளது. அதையும் நாம் காண்போம்.

**عَنْ رِبْعِيِّ بْنِ حِرَاشٍ عَنْ رَجُلٍ مِنْ أَصْحَابِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اخْتَلَفَ النَّاسُ فِي آخِرِ يَوْمٍ مِنْ رَمَضَانَ فَقَدِمَ أَعْرَابِيَّانِ فَشَهِدَا عِنْدَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ بِاللَّهِ لَأَهَلَّا الْهِلَالَ أَمْسِ عَشِيَّةً فَأَمَرَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ النَّاسَ أَنْ يُفْطِرُوا رواه ابو داؤد1992**

**ரமளானின் கடைசி நாளில் (இது கடைசி நாளா இல்லையா என) மக்கள் கருத்துவேறுபட்டு இருந்தார்கள்.** அப்போது நபி(ஸல்) அவர்களிடம் இரண்டு கிராமவாசிகள் முன்வந்து நேற்று இரவு தாங்கள் பிறை பார்த்ததாக அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து சாட்சியளித்தார்கள். எனவே நோன்பை விட்டுவிடுமாறு நபி(ஸல்) மக்களுக்கு கட்டளையிட்டார்கள்.

**அறிவித்தவர்: ரிப்யீ இப்னு ஹிராஷ்**
**நூல்: அபூ தாவூத் 1992**

இருபத்தி ஒன்பது அன்று பிறை பாருங்கள்; தென்படா விட்டால் முப்பதைப் பூர்த்தியாக்குங்கள் என நபி(ஸல்) அவர்களின் கட்டளை தெளிவாக இருக்கிறபோது, ரமளான் முப்பதாம் நாள் நோன்பு நோற்றுக் கொண்டு இன்று கடைசி நாளா இல்லையா என நபி(ஸல்) அவர்களின் முன்னிலையில் தோழர்கள் ஏன் கருத்துவேறுபடவேண்டும். அதை நபி(ஸல்) கண்டிக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது ஏன்? நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

பிறையில் கணக்கிடும் வழக்கம் அன்றும் இருந்தது என்பதைத் தான் இந்த ஹதீஸ் கூறுகிறது. மொத்தத்தில் நபி(ஸல்) அவர்களும், தோழர்களும் கணக்கில்தான் இருந்தார்கள் அதைச் சரிபார்ப்பதற்காகத்தான் பிறையைக் கண்ணால் கண்டார்கள் என்பது தெளிவாகிறது.

**عَنْ ابْنِ عَبَّاسٍ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ أَتَانِي جِبْرِيلُ**

عَلَيْهِ السَّلَام فَقَالَ الشَّهْرُ تِسْعٌ وَعِشْرُونَ يَوْمًا   رواه النسائي2104

*“என்னிடம் ஜிப்ரீல்(அலை) வந்து இந்த மாதம் 29 நாள்கள் எனக் கூறினார்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி)***
***நூல்: நஸாயீ, ஹதீஸ் எண்: 2104***

*பிறையைக் கண்ணால் பார்ப்பது ஒரு இப ாதத் என்றால் இந்த மாதம் நபி(ஸல்) அவர்களுக்கு ஏன் அறிவிக்கப்பட்டது? மாதத்தை சரியாக ஆரம்பிப்பதுதான் இபாதத்தே தவிர பிறையைக் கண்ணால் காண்பது இபாதத் அல்ல.*

## ஒருபோதும் கணக்கில் முரண்பாடு இருக்காது

*சந்திரனின் படித்தரங்களைக் கண்ணால் கண்டு மாதத்தை ஆரம்பிப்பதில் பல்வேறு குழப்பங்கள் இருக்கின்றன. ஆனால் கணக்கில் முரண்பாடோ, குழப்பமோ ஒருபோதும் இருக்காது. ஏனெனில் இது அல்லாஹ் விதித்த கணக்காகும். இதை இன்றைய விஞ்ஞான உலகம் மட்டுமல்ல இஸ்லாமிய அறிஞர் களின் வட்டமும் ஒட்டுமொத்தமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இதை மறுப்பதற்கு வழியின்றி அனைவரும் ஏற்றுக் கொண் டுள்ளார்கள் என இஸ்லாமிய அறிஞர்களில் சிலர் கருத்துக் களும் தெரிவித்துள்ளார்கள்.*

*ஆறு மாதங்கள் பகலாகவும், மற்றொரு ஆறு மாதங்கள் இரவாகவும் இருக்கும் துருவப் பிரதேசங்களில் சந்திரனின் படித்தரங்களைக் கண்ணால் கண்டுதான் மாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என வாதிட்டால் எக்காலத்திலும் எவரும் நோன்பு நோற்கமுடியாது. அங்கு நாள்களைக் கணக்கிட்டுத்தான் ஆகவேண்டும். இல்லையென்றால் நோன்பு மட்டுமல்ல தொழுகையைக் கூட அங்கு நிறைவேற்றவே முடியாது.*

عَنْ النَّوَّاسِ بْنِ سَمْعَانَ ضي الله عنه...

قَالَ ذَكَرَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الدَّجَّالَ ذَاتَ غَدَاةٍ...

قُلْنَا يَا رَسُولَ اللَّهِ وَمَا لَبْثُهُ فِي الْأَرْضِ قَالَ أَرْبَعُونَ يَوْمًا يَوْمٌ كَسَنَةٍ وَيَوْمٌ كَشَهْرٍ وَيَوْمٌ كَجُمُعَةٍ وَسَائِرُ أَيَّامِهِ كَأَيَّامِكُمْ قُلْنَا يَا رَسُولَ اللَّهِ فَذَلِكَ الْيَوْمُ الَّذِي كَسَنَةٍ أَتَكْفِينَا فِيهِ صَلَاةُ يَوْمٍ قَالَ لَا اقْدُرُوا لَهُ قَدْرَهُ...

رواه مسلم رقم الحديث 5228

*ஒரு நாள் காலை தஜ்ஜால் குறித்து இறைத்தூதர்(ஸல்) கூறியபோது...*

*"இறைத்தூதர் அவர்களே! அவன் பூமியில் எவ்வளவு காலம் வசிப்பான்" என நாங்கள் கேட்டோம்.*

*"நாற்பது நாள்கள்; ஒரு நாள் ஓர் ஆண்டு போலவும், இன்னொரு நாள் ஒரு மாதம் போலவும், இன்னொரு நாள் ஒரு வாரம் போலவும், மற்ற எல்லா நாள்களும் உங்களின் சாதரண நாள்கள் போலவும் இருக்கும்" எனக் கூறினார்கள்.*

*"இறைத்தூதர் அவர்களே! ஓர் ஆண்டு போல இருக்கும் அந்நாளில் நாங்கள் ஒரு நாளுக்குரிய தொழுகை தொழுதால் போதுமா?" என நாங்கள் கேட்டோம்.*

*"இல்லை; அதைச் சரியாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்" எனக் கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அந்நவ்வாஸ் இப்னு ஸம்ஆன்(ரலி)***
***நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 5228***

*இங்கு நபி(ஸல்) எதைக் கணக்கிடச் சொன்னார்கள். நாள் களையா? அல்லது ஓர் ஆண்டை ஒரு நாளாகவா? யோசிக்க வேண்டும். தஜ்ஜாலின் வருகைக்கு முன்னரே ஒரு முன்னு தாரணமாக இறைவன் நமக்கு துருவப் பிரதேசங்களைக் கொடுத்துள்ளான். நாம் நாள்களைக் கணக்கிட்டு முறையாகச் செயல்படவேண்டும் என்பதற்காகவே இறைவன் இவ்வாறு அமைத்துள்ளான். எனவே சந்திரனுக்கு இறைவன் வகுத்துள்ள கணக்கின்படி செயல்பட்டாலே குழப்பமின்றி நாள்களையும் மாதங்களையும் ஆண்டுகளையும் அறியமுடியும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். சூரியனுக்கும் சந்திரனுக்கும் கணக்கு இருக்கிறது என அல்லாஹ் 55:5 வசனத்தில் கூறுகிறான். எனவே, சந்திரனைக் கணக்கிடுவதில் என்றும் எந்தக் குழப்பமும் இருக்காது. நாம்தான் இதைப் புரிந்து கொள்ளாமல் குழப்பத்தில் இருக்கிறோம்.*

## பிறையைக் கண்ணால் காண்பதன் நோக்கம்

*பிறையை புறக்கண்ணால் பார்த்துத்தான் மாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பது இஸ்லாமிய சடங்கோ சம்பிரதாயமோ அல்ல என்ற அடிப்படையை முதலில் விளங்கவேண்டும்.*

இந்த அடிப்படையை விளங்காத வரை நம்மால் எதையும் விளங்கிக் கொள்ள முடியாது. இன்றைய உலகில் சந்திரக் கணக்கு மிகத் துல்லியமாக உள்ளது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதில் தான் தயக்கம். தெளிவாக இருக்கும் ஒன்றை விட்டுவிட்டு தெளிவற்ற குழப்பமான ஒன்றைத்தான் நாங்கள் பின்பற்று வோம் என்ற நிலைப்பாடு எந்த அளவிற்குச் சரியானது என்பதை யோசிக்க வேண்டும்.

அதன் உண்மையான நோக்கம் சந்திர ஆண்டுகளின் தேதியைச் சரிசெய்வதுதான். இதைத் திருக்குர்ஆனின் 2:189 வசனம் தெளிவுபடுத்துகிறது.

பிறைகள் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். "அவை மக்களுக்குக் காலம் காட்டியாகவும், ஹஜ்ஜின் காலத்தை அறிவிப்பவையாகவும் இருக்கின்றன" என (தூதரே) கூறும்.

வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் பின்புறமாக வருவதில் புண்ணியமில்லை. மாறாக, இறைவனுக்கு அஞ்சுபவனே புண்ணிய வான். எனவே, வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் வாசல்கள் வழியாகவே வாருங்கள்! இன்னும், நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சுங்கள்!

**திருக்குர்ஆன் 2:189**

இதற்கு விளக்கமாக வந்துள்ள ஹதீஸையும் காணலாம்.

**عن قتادة ، قوله : يسألونك عن الأهلة قل هي مواقيت للناس قال قتادة : سألوا نبي الله صلى الله عليه وسلم عن ذلـــك : لم جعلت هذه الأهلة ؟ فأنزل الله فيها ما تسمعون : هي مواقيت للناس فجعلها لصوم المسلمين ، ولإفطارهم ، ولمناسكهم وحجهم ، ولعدة نسائهم ، ومحل دينهم في أشياء ، والله أعلم بما يصلح خلقه "**

**جامع البيان في تفسير القـــرآن للطـــبري – سورة البقرة**

**القول في تأويل قولـــه تعـــالى : يسألونك عن الأهلة قل هي – حديث: 2796**

பிறைகள் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். "அவை மக்க ளுக்குக் காலம் காட்டும் காலண்டராகும்... என்னும் இறை வசனம் குறித்து கதாதா(ரலி) கூறுகையில், இந்தப் பிறைகள் ஏன் படைக்கப்பட்டுள்ளன என நபி(ஸல்) அவர்களிடம் மக்கள் கேட்டார்கள். அப்போதுதான் நீங்கள் செவியுறும்

இவ்வசனம் அருளப்பட்டது. இது மக்களுக்கு காலம் காட்டும் காலண்டராகவும், முஸ்லிம்கள் நோன்பைத் தொடங்குவதற் காகவும், நோன்பைத் துறப்பதற்காகவும் - பெருநாள் கொண் டாடுவதற்காகவும், தங்களின் வணக்க வழிபாடுகளை அவர்கள் அமைத்துக் கொள்வதற்காகவும், பெண்கள் தங்களின் இத்தாத் தவணையைக் கணக்கிட்டுக் கொள்வதற்காகவும், கடன் கொடுக்கல் வாங்கல்களை மக்கள் சீர் செய்து கொள்வதற் காகவும் இறைவன் அதை அமைத்துள்ளான். இன்னும் என்ன நோக்கங்களுக்காக அவை படைக்கப்பட்டுள்ளன என்பதை இறைவனே மிக அறிந்தவன் என நபி(ஸல்) கூறினார்கள்.

**நூல்: ஜாமிவுல் பயான் ஃபீ தஃப்ஸீரில் குர்ஆன் லி திப்ரி**

மேற்கண்ட ஹதீஸின் அடிப்படையில் பிறை பார்ப்பதன் நோக்கம் சடங்கோ சம்பிரதாயமோ அல்ல தேதிகளை அறிவதுதான் அதன் நோக்கம் என்பதை விளங்கலாம்.

أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ صُومُوا لِرُؤْيَتِهِ وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ وَانْسُكُوْا لَهَا فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَأَتِمُّوا ثَلَاثِينَ وَإِنْ شَهِدَ شَاهِدَانِ مُسْلِمَانِ فَصُومُوا وَأَفْطِرُوا.رواه أحمد رقم الحديث **18137**

பிறை தென்பட்டால் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்; பிறை தென்பட்டால் நோன்பைத் துறந்துவிடுங்கள் - பெருநாள் கொண்டாடுங்கள்; அவற்றை அடிப்படையாக வைத்தே வணக்க வழிபாடுகளை அமைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு மறைக்கப்பட்டிருந்தால் முப்பதை முழுமைப்படுத்துங்கள். இரண்டு முஸ்லிம்கள் சாட்சி சொன்னால் அதை அடிப்படை யாக வைத்து நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள். நோன்பைத் துறந்தும் விடுங்கள் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**நூல்: அஹ்மத் ஹதீஸ் எண்: 18137**

பிறை பார்ப்பதன் நோக்கம் ஹிஜ்ரி ஆண்டின் மாதங்களை அறிந்து கொள்வதுதான் என இந்த ஹதீஸும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. அப்படி அறிவதன் மூலமாக சரியான தேதிகளில் வணக்கவழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

சந்திரனுக்கு இறைவன் பல படித்தரங்களை (மன்ஸில்களை) ஏற்படுத்தியுள்ளான். அந்த மன்ஸில்களை மையமாக வைத்தே

சந்திர ஆண்டுகளின் தேதிகளை கணக்கிட வேண்டும். நபி(ஸல்) இவ்வாறே கணக்கிட்டு வந்தார்கள். அவர்களுக்குப் பிறகு அவர்களின் தோழர்களும் இவ்வாறே கணக்கிட்டு வந்தார்கள். பிறையைப் பார்க்குமாறு கூறப்பட்டுள்ள ஹதீஸ்கள் கணக்கை மையமாக வைத்தே கூறப்பட்டுள்ளன என்பதை விளங்கவேண்டும்.

## வானஇயற்பியல் - Astro physics கல்வி அவசியமா ?

நாம் உம்மீ - இயற்கையோடு ஒன்றிப்போகும் சமுதாயம். எனவே, வானஇயற்பியல் விஞ்ஞானம் குறித்து எழுதவோ கணக்கிடவோ கூடாது எனக் கூறுவது தவறான வாதமாகும். இச்சிந்தனை திருக்குர்ஆனுக்கு எதிரானது. சமுதாயத்தில் சிலருக்கு வானஇயற்பியல் (Astro physics) கல்வி அவசியம் என்பதை திருக்குர்ஆன் வலியுறுத்துகிறது. இதை தற்போதைய (Classical physics) என்றும் கூறுகிறார்கள்.

ஒட்டகம் எவ்வாறு படைக்கப் பட்டுள்ளது என்பதை அவர்கள் ஆராய வேண்டாமா?

**வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது** என்றும், மலைகள் எவ்வாறு நடப்பட்டுள்ளன என்றும், பூமி எவ்வாறு விரிக்கப் பட்டிருக்கிறது என்றும் (அவர்கள் ஆராயவேண்டாமா?).

**திருக்குர்ஆன் 88:17-20**

மேற்கண்ட வசனங்களில் விலங்கியல், வானவியல், புவியியல் குறித்து ஆராய வேண்டும் என இறைவன் கூறுகிறான். வானஇயற்பியலை ஆய்வு செய்து இறைவன் கூறியுள்ள காலண்டரைக் கூட கணக்கிடாமல் வேறு எதைத்தான் நாம் சாதிக்க முடியும்? வானவியல் குறித்து ஆராயுமாறு இன்னும் பல வசனங்கள் திருக்குர்ஆனில் உள்ளன.

உறுதிசெய்யப்பட்ட விஞ்ஞானத்திற்கு எதிராக இஸ்லாம் ஒருபோதும் இருக்காது என இன்று நாம் உறுதியிட்டுக் கூறிவருகிறோம். திருக்குர்ஆனும் விஞ்ஞானமும் என்ற தலைப்பில் மணிக்கணக்கில் உரை நிகழ்த்துகிறோம்; அந்தத் தலைப்பில் பல கட்டுரைகள் வரைகிறோம்; பல புத்தகங்கள் எழுகிறோம்; இதில் ஒருவரையொருவர் விஞ்சி நிற்பது இன்று யதார்த்தமாகிவிட்டது. அந்த அளவிற்கு திருக்குர்ஆனில் வானவியல் விஞ்ஞானம் குறித்து இறைவன் மிகத் தெளிவாகப் பேசியிருக்கிறான். எனினும், சந்திரக் காலண்டரின்

வானஇயற்பியல் கணக்கை எடுக்கக்கூடாது என நாம் வாதிடுகிறோம். இது எந்த அளவிற்கு அறிவுடமை என்பதை சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## வானஇயற்பியல்- Astro physics கணக்கை திருக்குர்ஆன் எதிர்க்கிறதா ?

நிச்சயமாக நீரும், உம்முடன் இருப்போரில் ஒரு கூட்டத் தாரும் இரவில் மூன்றில் இரண்டு பாகங்களுக்குக் குறை வாகவோ, அதில் பாதியோ, அதில் மூன்றில் ஒரு பாகத்திலோ (வணக்கத்திற்காக) நிற்கிறீர்கள் என்பதை உம் இரட்சகனே அறிகிறான்.

இன்னும், **அல்லாஹ்தான் இரவையும், பகலையும் நிர்ணயிக் கிறான். நீங்கள் அதை சரியாக நிர்ணயிக்க மாட்டீர்கள் என்பதையும் அவன் அறிகிறான்.** எனவே, அவன் உங்களை மன்னித்து விட்டான்... **திருக்குர்ஆன் 73:20**

இவ்வசனத்தில் பகலையும் இரவையும் கணக்கிட முடியாது; அப்படியே கணக்கிட்டாலும் அதில் தவறுகள் ஏற்படும்; அதை மன்னித்துவிடுவதாக இறைவன் கூறுகிறான். எனவே கணக்கு தவறாகத்தான் இருக்கும்; அது மட்டுமல்லாமல் அல்லாஹ் மன்னிப்பதாகக் கூறுவதால் துல்லியமாகக் கணக் கிட வேண்டிய அவசியமில்லை என சிலர் வாதிடுகிறார்கள்.

இவர்கள் முதலில் இந்த வசனத்தை நன்றாகப் படிக்க வேண்டும். இதில் இரவையும் பகலையும் சரியாகக் கணக்கிட முடியாது என்றுதான் இறைவன் கூறுகிறானே தவிர சூரியனையும் சந்திரனையும் கணக்கிட முடியாது எனக் கூறவில்லை. இதற்கு நேர்மாறாக 10:5 வசனத்தில் சந்திரனின் படித்தரங்களை வைத்து பல ஆண்டுகளின் எண்ணிக்கையை அறியமுடியும் என்றே அல்லாஹ் கூறுகிறான்.

இவ்வசனத்தில் இறைவன் கூறுவதை நிதானமாகப் பார்ப்போம்.

பகல் இரவு மாறிமாறி வருவது பூமியின் சுழற்சியால் ஏற்படுகிறது. சந்திரனின் சுழற்சியால் அல்ல. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு 23.5 டிகிரி சாய்வாக சூரியனைச் சுற்றிவருகிறது. இதில் தன்னைத்தானே பூமி சுற்றுவதால் பகல் இரவு ஏற்படுகிறது. 23.5 டிகிரி சாய்வாக சூரியனைச் சுற்றிவருவதால் வானிலை மாற்றங்களும் துருவப் பிரதேசங்களில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பகல் மற்றும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இரவு ஏற்படுகிறது.

பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதற்கு எடுக்கும் அவகாசம் 24 மணி நேரம் எனக் கணிக்கப்படுகிறது. அது சூரியனை சுற்றி வருவதற்கு 365.2421 நாள்கள் என கணக்கிடப் படுகிறது.

பூமி தன்னைத்தானே சுற்றுவதைத்தான் சரியாகக் கணக்கிட முடியாது. இதையே இறைவனும் கூறுகிறான். இன்றும்கூட முன்னதாகவே துல்லியமாக அதைக் கணக்கிட முடிவதில்லை என வானவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் பூமியின் சுழற்சிக்கு முன்னதாகவே அதன் சுழற்சியை துல்லியமாக கணக்கிட ஒருபோதும் முடியாது; பூமி சுழன்று முடிந்தப் பின்னரே அது எத்தனை மணி நேரம்? எத்தனை நிமிடங்கள்? எத்தனை நொடிகள் இன்னும் எத்தனை நொடித்துளிகள் சுழன்றது என்பதை அறிவிக்க முடியும் என்கின்றனர். பூமியின் சுழற்சிக்கு முன்ன தாகவே அது 24 மணிநேரம் சுழல்வதாகக் கணக் கிட்டிருப்பதன் விளைவாகத்தான் கிருத்துவக் காலண்டரில் தவறுகள் நிகழ் கின்றன. இப்படி தவறுகள் நிகழ்ந்தே தீரும் என்றுதான் இறைவனும் கூறுகிறான்.

பூமியின் சுழற்சி ஒவ்வொரு நாளும் 24 மணிநேரம் சரியாகச் சுழல்வதில்லை. நாளுக்கு நாள் அதன் சுழற்சி மாறுபட்டுக் கொண்டே இருக்கிறது. எனவேதான் இஸ்லாம் ஒரு கிழமைக்கு ஒரு தேதி எனக் கூறுகிறது. 24 மணி நேரத்திற்கு ஒரு தேதி என நிர்ணயித்தால் தவறுகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

கிருத்துவக் காலண்டரால் இதைச் சரி செய்யமுடிவதில்லை. அல்லாஹ் கூறியுள்ள சந்திரக் காலண்டரால் மட்டுமே இதற்கு தீர்வு கொடுக்க முடியும்.

தஜ்ஜால் வரும் காலத்தில் ஒரு நாள் ஒரு வருடத்திற்கு நிகராக இருக்கும் என நபி(ஸல்) கூறியுள்ளார்கள். இந்த முன் அறிவிப்பின் நிமித்தமாக தற்போதே எல்லாக் காலங்களுக்கும் தீர்வு காண்பதுபோல தஜ்ஜால் வரும் காலத்தில் வாழக்கூடிய மக்களுக்கு சந்திரக் காலண்டரால் மட்டுமே தீர்வு கொடுக்க முடியும். ஏனென்றால் சந்திரக் காலண்டரின் விதி சூரியனுக்கும் சந்திரனுக்கும் உரிய கணக்கே ஆகும். சூரியனின் வெளிச் சத்தால் மட்டுமே சந்திரனுக்குப் படித்தரங்கள் உண்டாகின்றன. பூமியிலிருந்து நாம் சந்திரனைப் பார்த்துக் கணக்கிடுவதைத் தவிர பூமிக்கும் சந்திரனுக்கும் கணக்கில் எந்தப்பந்தமும் இல்லை. எனவேதான் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கணக்கு இருக்கிறது என்று சொன்ன அல்லாஹ் பூமிக்கு கணக்கு

இருப்பதாக திருக்குர்ஆனில் எங்கும் கூறவில்லை. மாறாக பூமியின் சுழற்சியினால் ஏற்படும் இரவு பகலை உங்களால் துல்லியமாகக் கணக்கிட முடியாது என்றுதான் மேற்கண்ட வசனத்தில் கூறுகிறான்.

நேரத்தை நாம் துல்லியமாக அறியமுடியாது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தும் இன்று நாம் அவ்காத்துஸ் ஸலாஹ் - தொழுகை நேரங்களையும் ஸஹர், இஃப்தார் - நோன்பு ஆரம்பிக்கும் மற்றும் துறக்கும் நேரங்களயும் கடிகாரத்தை பார்த்தே அமைத்துள்ளோம். ஆனால், இதற்கு மாற்றமாக நாள்களைக் கணக்கிடும் சந்திரக் காலண்டர் மிகச்சரியாக இருந்தும் நாம் அதைப் பின்பற்ற மறுக்கிறோம். இது என்ன நிலை என நாம் நம்மைத்தான் கேட்டுக் கொள்ளவேண்டும்.

நேரத்தை அறிவதில் தவறுதான் நிகழும் அந்தத் தவறை அல்லாஹ் மன்னிக்கிறான் என்ற அடிப்படையில் நாம் கடிகாரத்தை ஏற்றுக் கொள்கிறோம். துல்லியமில்லாத கடிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் நாம் துல்லியமான சந்திரக் காலண்டரை மறுக்கக்கூடாது என்றுதான் சொல்கிறோம்.

நேரத்தை அறிவதில் குறைகள் இருந்தாலும் பிரச்சினை இல்லை என்பதை நபி(ஸல்) நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள்.

**ابْنَ أَبِي أَوْفَى رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ كُنَّا مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي سَفَرٍ فَقَالَ لِرَجُلٍ انْزِلْ فَاجْدَحْ لِي قَالَ يَا رَسُولَ اللَّهِ الشَّمْسُ قَالَ انْزِلْ فَاجْدَحْ لِي قَالَ يَا رَسُولَ اللَّهِ الشَّمْسُ قَالَ انْزِلْ فَاجْدَحْ لِي فَنَزَلَ فَجَدَحَ لَهُ فَشَرِبَ ثُمَّ رَمَى بِيَدِهِ هَا هُنَا ثُمَّ قَالَ إِذَا رَأَيْتُمْ اللَّيْلَ أَقْبَلَ مِنْ هَا هُنَا فَقَدْ أَفْطَرَ الصَّائِمُ**

**رواه البخاري رقم الحديث 1941**

நாங்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தோம். அப்போது இறைத்தூதர்(ஸல்) ஒருவரிடம், "இறங்கி மாவை எனக்காகக் கரைப்பீராக!" என அவர்கள் கூறினார்கள்.

"இறைத்தூதர் அவர்களே! சூரியன்!" என்றார்.

மீண்டும் இறைத்தூதர்(ஸல்), "இறங்கி எனக்காக மாவைக் கரைப்பீராக!" என்றார்கள்.

*அப்போதும் அவர்,*
*“இறைத்தூதர் அவர்களே! சூரியன்!” என்றார்.*

*இறைத்தூதர்(ஸல்), “இறங்கி எனக்காக மாவைக் கரைப்பீராக!” என மீண்டும் கூறினார்கள். அவர் இறங்கி மாவைக் கரைத்தார். அதை இறைத்தூதர்(ஸல்) அருந்திவிட்டுத் தம் கையால் (கிழக்கே) சுட்டிக் காட்டினார்கள் பிறகு, ‘இங்கிருந்து இரவு முன்னோக்கி வருவதை நீங்கள் கண்டால் நோன்பாளி நோன்பை நிறைவு செய்யலாம்! எனக் கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு அபீ அவ்ஃபா(ரலி)***
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1941***

**عن أسماء بنت أبي بكر الصديق رضي الله عنهما ، قالـــت : " أفطرنا على عهد النبي صلى الله عليه وسلم يوم غيم ، ثم طلعـــت الشـــم**

**رواه البخاري رقم الحديث1959**

*இறைத்தூதர்(ஸல்) காலத்தில் மேகம் சூழ்ந்த ஒரு நாளில் நாங்கள் நோன்பை நிறைவு செய்த பின்னர் சூரியன் தென்பட்டது.*

***அறிவித்தவர்: அஸ்மா பின்த் அபீ பக்ர்(ரலி)***
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1959***

*சூரியன் இருக்கும்போதே நபி(ஸல்) நோன்பைத் துறந்ததாக இந்த ஹதீஸ்கள் நமக்கு உணர்த்துகிறது. அப்படியானால் அவ்வாறுதான் நாம் செய்யவேண்டும் என்பதல்ல. நேரத்தைக் கணிப்பதில் குறைபாடு இருக்கிறது என்பதை நபி(ஸல்) உணர்த்துகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.*

*அவ்வாறு சூரியன் மறைவதற்கு முன்னதாக மேகமூட்டமாக இருப்பதால் கடிகாரத்தைப் பார்க்காமல் நோன்பைத் துறந்தால் அதை ஏற்றுக் கொள்வீர்களா? மாட்டீர்கள். காரணம், நம்மிடம் நேரத்தைக் கணக்கிடும் கடிகாரம் இருக்கிறது. அதைப் பார்க் காமல் ஏன் நோன்பைத் துறந்தாய் என்றுதான் கேட்பீர்கள். அதே சமயத்தில் துல்லியமாகக் கணக்கிடக் கூடிய சந்திரக் காலண்டரின்படி நோன்பைத் தொடங்கினால் குற்றவாளி என்கிறீர்கள். என்ன விந்தை இது?*

*ஆனால், மாதத்தை ஆரம்பிப்பதில் நபி(ஸல்) மிகவும் கவனமாய் இருந்தார்கள். நேரம் வருவதற்கு முன்னதாகவே நோன்பைத் துறந்த நபி(ஸல்) நோன்பு வைத்திருக்கும்போது மாதம் பிறந்த செய்தியை அறிந்த உடன் நோன்பைத் தொடராமல் உடன*

டியாக முடித்துக் கொண்டார்கள். அது பகலின் கடைசி நேர மாய் இருந்தது. பெருநாள் தினத்தன்று நோன்பு நோற்பதை தடுத்திருக்கிறார்கள். மாதத்தை அறியாமல் நோன்பு நோற் பதையும் தடுத்துள்ளார்கள். இதுதான் மாதத்திற்கும் நேரத்திற்கு இடையிலான வித்தியாசம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

## அவர்களிடம் சில கேள்விகள்.

பிறையைப் புறக்கண்ணால்தான் பார்க்கவேண்டும் என்பவர்கள் சுமார் 1400 ஆண்டுகளாக மேற்கொண்டுவரும் நடைமுறையைத் திரும்பிப்பார்க்கட்டும். அவர்கள் அவற்றைப் பார்ப்பதற்கு வைத்திருக்கும் அளவுகோல் என்ன? அவர்கள் அவற்றை எவ்வாறு பார்க்கிறார்கள்? எதை அடிப்படையாக வைத்து மாதத்தின் நாள்களை முடிவு செய்கிறார்கள்? எதை அடிப் படையாக வைத்து மாதத்தின் நாள்களை ஆரம்பிக்கிறார்கள்?

நபி(ஸல்) ஒவ்வொரு மாதமும் பிறையைப் பார்த்தார்களா? அல்லது ரமளான், ஷவ்வால், துல் ஹஜ் மாதங்களின் பிறை களை மட்டும்தான் பார்த்தார்களா? தாம் பிறை பார்த்ததாக நபி(ஸல்) எப்போதாவது அறிவித்தார்களா?

பிறையைப் பார்த்துத் தகவல் தருவதற்கு ஒரு குழுவை நபி(ஸல்) நியமித்தார்களா? அல்லது ஒரு தனி நபரையாவது நியமித் தார்களா?

நபி(ஸல்) தினமும் பிறையைப் பார்த்து வந்தார்களா? அல்லது ஒவ்வொரு மாதத்தின் 29 ஆம் நாள் பிறையை மட்டும்தான் பார்த்து வந்தார்களா?

பிறையை கிழக்கு திசையில் பார்க்க வேண்டுமா? அல்லது மேற்கு திசையிலா? பிறையை எந்தத் திசையில் பார்க்குமாறு நபி(ஸல்) கற்றுக் கொடுத்தார்கள்? அதாவது உதயமாகும் பிறையைப் பார்க்குமாறு நபி(ஸல்) கூறினார்களா? அல்லது அஸ்தமிக்கும் பிறையைப் பார்க்குமாறு நபி(ஸல்) கற்றுக் கொடுத்தார்களா?

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில் ஹிலால் கமிட்டிகள் நியமிக்கப்பட்டதா? அப்படியானால் இன்று அப்படி ஒரு கமிட்டியை நியமிக்கலாமா?

பிறையை யாரேனும் பார்த்தால் அதை எங்களிடம் தெரிவித்து

விடுங்கள் என நபி(ஸல்) எப்போதாவது கூறினார்களா? அப்படியானால் இன்று அவ்வாறு நாம் கூறலாமா?

நீங்கள் பிறை பார்த்தால் அதை பிறருக்கு அறிவியுங்கள் என நபி(ஸல்) எப்போதாவது கூறினார்களா? அப்படியானால் இன்று அவ்வாறு பிறருக்குக் கூறுமாறு வலியுறுத்தலாமா?

பிறையைப் பார்த்து எங்களுக்குத் தெரிவியுங்கள் எனக் கூறுபவர்கள் தாங்கள் பிறைபார்க்க முயற்சிப்பதில்லை எனத் தெரிகிறது. அவர்கள் சொல்லும் வாக்கியமே நாங்கள் பிறை பார்க்கமாட்டோம் என்பதைத் தெரிவிக்கிறதல்லவா?

ஷஅபான் அல்லது ரமளான் மாதங்களில் ஒரு நாளை 29 என முடிவு செய்து பிறை பார்க்க முயற்சிக்கிறார்கள். அன்றைய நாள்தான் மாதத்தின் 29 ஆம் நாள் என்பதை எவ்வாறு முடிவு செய்கிறார்கள்?

வருடத்தின் மற்ற மாதங்களைக் காலண்டரில் பார்த்துக் கொள்ளுங்கள். ரமளான், ஷவ்வால் மற்றும் துல் ஹஜ் மாதங்களுக்கு மட்டும் பிறையைப் பாருங்கள் என நபி(ஸல்) கூறினார்களா?

ஒரு கிழமைக்கு மூன்று தேதிகள் மற்றும் மூன்று கிழமைக்கு ஒரு தேதி வரும் என நபி(ஸல்) கூறினார்களா? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

ஆறுமாதங்கள் தொடர்ந்து பகலாகவும் ஆறு மாதங்கள் தொடர்ந்து இரவாகவும் இருக்கும் துருவப் பிரதேசங்களில் வசிப்பவர்களின் நிலை என்ன? அவர்கள் பிறை பார்த்துத்தான் ஒவ்வொரு ரமளானிலும் நோன்பைத் தொடங்க வேண்டுமா? இதற்கு என்ன தீர்வைத் தந்திருக்கிறீர்கள்?

இந்த நாளில் சூரியன் மறைவதற்கு முன்னதாகவே சந்திரன் மறைந்துவிடும் என விஞ்ஞானம் கூறும்போது, அன்று ஒருவர் பிறைபார்த்ததாகக் கூறினால் விஞ்ஞானத்தை அடிப்படையாக வைத்து அச்செய்தியை மறுக்கும் நீங்கள், சூரியன் மறைந்த பிறகும் சந்திரன் இருக்கிறது என விஞ்ஞானம் சொல்லும் போது மட்டும் ஏன் ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள்?

இந்தக் கிழமையில் பிறை பிறந்துவிட்டது என அறிவியல் மூலமாகத் தெளிவாகத் தெரிந்தப் பின்னரும் அதை மறுக்கலாம் என நபி(ஸல்) எப்போதாவது கூறினார்களா?

*29 ஆம் நாளன்று மேற்கு திசையில் மக்ரிப் தொழுகைக்குப் பின்னர்தான் பிறையைப் பார்க்க வேண்டும் என நபி(ஸல்) கற்றுக் கொடுத்தார்களா? இதற்கு ஆதாரம்தான் என்ன?*

*முன்கூட்டியே ஆண்டுகளின் கணக்கை துல்லியமாகக் கூறும் நாள்காட்டியை இஸ்லாமிய அடிப்படையில் தரமுடியாது என கூறவருகிறீர்களா? நாம் பிறையைப் பார்க்காமல் அல்லது கணக்கிடாமல் இருந்தால் மாதம் துவங்காமல் இருந்துவிடுமா என்ன?*

*இன்று தகவல் அடிப்படையில் செயல்படுபவர்கள் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்படி பிறைத் தகவல் வந்தால் அதற்கு இறைநம்பிக்கையாளர்களில் இரண்டு சாட்சிகளை முன்னிறுத்தி அறிவிக்கிறார்களா? அல்லது இனம்காணா நபர்களின் அறிவிப்புகளை ஏற்றுக் கொண்டு செயல்படுத்து கிறார்களா? இது வரை பிறைபார்த்த நபர்களின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளனவா?*

*பிறையைக் கண்ணால் கண்டுதான் மாதத்தைத் துவங்க வேண்டும் என்போர் முன் கூட்டியே காலண்டர் அச்சிட்டு விற்பனை செய்வது நபிவழியாகுமா?*

*பிறையைக் கண்ணால் பார்த்தே மாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என வாதிடுபவர்கள் இக்கேள்விகளுக்கு என்ன பதிலை வைத்திருக்கிறார்கள்? சுமார் 1400 ஆண்டுகளாக இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் சரியான பதிலை அளிக்கவில்லையே ஏன்? பதில் அளித்தவர்களும் அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவில்லை. இதனால் இன்னும் குழப்பங்கள் நீடிக் கின்றன. இவற்றைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடலாமா? அப்படி விட்டுவிட்டால் நடக்கும் விபரீதங்கள் என்ன என்பதை யோசிக்க வேண்டாமா? நம்முடைய சுயகருத்துக்கு இடமளிக்காமல் நிதானமாக யோசிக்கும்போது இந்தக் கேள்விக்கு தெளிவு கிடைக்கிறது. அந்தத் தெளிவை உள்வாங்கும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்.*

## சந்திரன் என்றாவது காணாமல் போகுமா?

*தற்போது நாம் குர்ஆன் கூறும் அடிப்படையில் சந்திரனை உற்றுநோக்கிவந்தால் மாதம் 29 நாள்களைக் கொண்டதாய் இருந்தால் 28 பிறைகளை மட்டுமே கண்ணால் காண முடிகிறது. இறுதிப் பிறையைக் கண்ணால் காணமுடிவதில்லை.*

*கண்ணால் காணமுடியாத அந்தப் பிறையையும் ஒரு தேதியாக கணக்கில் எடுக்கவேண்டும். அப்படி எடுக்கும்போதுதான் அந்த மாதத்திற்கான நாள்களின் எண்ணிக்கை பூர்த்தியாகும். அதைக் கணக்கில் எடுக்காமல் விட்டுவிட்டால் ஒரு நாள் தவறிவிடும்.*

*மாதம் 30 நாள்களைக் கொண்டதாய் இருந்தால் 29 பிறை களை மட்டுமே கண்ணால் காணமுடிகிறது. 30 ஆம் நாள் பிறையைக் கண்ணால் காணமுடிவதில்லை. தெளிவாகச் சொல்வதென்றால் இறுதிப் பிறையைக் கண்ணால் காண முடியாது. அதையும் ஒரு பிறையாக கணக்கில் எடுக்க வேண்டும். அப்படி எடுக்கும்போதுதான் அந்த மாதத்திற்கான நாள்களின் எண்ணிக்கை பூர்த்தியாகும். அதைக் கணக்கில் எடுக்காமல் விட்டுவிட்டால் ஒரு நாள் தவறிவிடும். கடைசி நாளுக்கு முந்தய நாள் வரை அதன் படித்தரங்களை நாம் கண்ணால் காணமுடியும் எனத் திருக்குர்ஆன் கூறுகிறது.*

*பழைய பேரீத்தங் குலையின் பாளையைப்போல் ஆகும் வரை சந்திரனுக்குப் பல படித்தரங்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.*

***திருக்குர்ஆன் 36:39***

*இதைத்தான் நபி(ஸல்) பின்வருமாறு கூறினார்கள்.*

**عَنِ ابْنَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّه صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِذَا رَأَيْتُمُوهُ فَصُومُوا وَإِذَا رَأَيْتُمُوهُ فَأَفْطِرُوا فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَاقْدُرُوا لَهُ**

**رواه البخاري رقم الحديث 1767**

*“நீங்கள் பிறை தென்பட்டால் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்; இன்னும் நீங்கள் பிறை தென்பட்டால் நோன்பைத் துறந்து விடுங்கள்; உங்களுக்கு அது மறைக்கப்பட்டால் அதை கணக் கிட்டுக் கொள்ளுங்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி)***

***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1767***

*கண்ணால் காணமுடியாத கடைசிப் பிறையும் கணக்கில் கொள்ளுமாறு நபி(ஸல்) இவ்வாறு கூறினார்கள்.*

*பூர்த்தியாக்குங்கள் அல்லது கணக்கிடுங்கள் அல்து எண்ணிக் கொள்ளுங்கள் என்பதற்கு, ஃபக்துரூ லஹூ அதை (நாளை) கணக்கிட்டுக் கொள்ளுங்கள், **ஃபக்மிலூ, ஃபஅதிம்மூ,***

**ஃபஉத்தூ** போன்ற வார்த்தைகளை நபி(ஸல்) பயன் படுத்தியுள்ளார்கள். அவர்களின் கட்டளை கண்ணால் பிறையைக் காண்பதை வலியுறுத்தவில்லை. நாள்களைக் கணக்கிடுவதையே வலியுறுத்தினார்கள் என்பதை அறிய முடிகிறது. அதாவது இன்று அமாவாசை என நாம் குறிப்பிடும் நாள் பிறையை நம் கண்ணால் பார்க்கமுடியாத ஒரு நாளாகும். சந்திரன் காணாமல் போன நாள் அல்ல. இதை ஆங்கிலத்தில் New Moon என்பர். இதை பிறை இல்லாத - No Moon நாளாக கணக்கிட்டு ஒரு தேதியை இழந்துவிடக்கூடாது. அதையும் சந்திரன் இருக்கும் ஒரு நாளாக கணக்கில் கொள்ளுங்கள் என்பதைத்தான் நபி(ஸல்) இவ்வாறு விளக்கினார்கள்.

...எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தியாக்குவதற்கும், உங்களை அல்லாஹ் நேர்வழியில் நடத்தியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப் படுத்துவதற்கும், நன்றி செலுத்துவதற்குமே ஆகும்.
**திருக்குர்ஆன் 2:185**

அன்றைய மக்கள் வானஇயற்பியலை சரிவர அறியாது இருந்ததால்தான் மாதங்களை சரியாக ஆரம்பிப்பதற்காகவும் முடிப்பதற்காகவும் பிறைகளைப் புறக்கண்ணால் பார்த்துக் கணக்கிடுமாறு நபி(ஸல்) கூறிவந்தார்கள்.

நம்மிடம் இரண்டு காரியங்கள் வைக்கப்பட்டால் அதில் கடினமானதை விட்டுவிட்டு எளிதானதை எடுத்துக் கொள்ள வேண்டும். காரியங்களை இலகுவாக்க வேண்டும். வணக்க வழிபாடுகளிலோ, கொள்கையிலோ, ஹலால் ஹராம் பிரச்சினையிலோ விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை நமக்கு வரக்கூடாது. ஒன்றை வஸீலாவாக ஆக்குவதில் எதை எடுக்கலாம் எதை எடுக்கக்கூடாது என்பதை காலம் மற்றும் சூழலுக்கு ஏற்ப முடிவெடுத்து, அதற்கேற்ப தீர்மானிக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் சந்திரக் கணக்கு இங்கு எடுக்கப்படுகிறது.

**عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ عَنِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ يَسِّرُوا وَلاَ تُعَسِّرُوا وَبَشِّرُوا وَلاَ تُنَفِّرُوا**

**رواه البخاري رقم الحديث69**

“இலகுவாக்குங்கள்; சிரமத்தைக் கொடுக்காதீர்கள். மேலும் நல்லவற்றையே சொல்லுங்கள். சலிப்படைந்து ஓடிவிடுமாறு

செய்யாதீர்கள்; வெறுப்பூட்டாதீர்கள்'' என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: அனஸ்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 69**

தலைப்பிறையைப் புறக்கண்ணால் பார்த்து மாதங்களைக் கணக்கிடும் முறையும், வானஇயற்பியல் மூலமாகக் கணக்கிடுதல் என்ற இன்னொரு முறையும் இருக்கிறது. அன்று வானஇயற்பியல் மூலமாகக் கணக்கிடுவது கடினமாக இருந்தது; புறக்கண்ணால் பார்த்துக் கணக்கிடுவது எளிதாக இருந்தது. இன்று புறக்கண்ணால் பார்த்துக் கணக்கிடுவது கடினமாகவும், வானஇயற்பியல் மூலமாகக் கணக்கிடுவது எளிதாகவும் இருக்கிறது.

## சட்டங்களை உள்ளார்ந்து புரிதல் வேண்டும்

ஹதீஸ்களின் வாசகங்களுக்கு மேலோட்டமான பொருளை மட்டும் எடுத்துக்கொண்டால் புரிதலிலும், அமல் செய்வதிலும் பெரும் குழப்பம்தான் மிஞ்சும். ஹதீஸ்களின் உள்ளார்ந்த பொருளைப் புரிதல்வேண்டும்.

### புரிதல்: 1

عَنْ أَبِي أَيُّوبَ الأَنْصَارِيِّ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: إِذَا أَتَى أَحَدُكُمْ الْغَائِطَ فَلاَ يَسْتَقْبِلِ الْقِبْلَةَ وَلاَ يُوَلِّهَا ظَهْرَهُ شَرِّقُوا أَوْ غَرِّبُوا

رواه البخاري رقم الحديث 144

“உங்களில் ஒருவர் மலம் கழிக்கச் சென்றால் அவர் கிப்லாவை முன்னோக்கக் கூடாது. தம் முதுகுப் புறத்தால் (அதை) பின்னால் ஆக்கவும் கூடாது. (எனவே) கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திரும்பிக் கொள்ளுங்கள்'' என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ அய்யூபில் அன்ஸாரி(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 144**

இந்த ஹதீஸை நாம் மேலோட்டமாகப் படித்தால் கிழக்கு மேற்கு முகமாகத்தான் மலஜலம் கழிக்க வேண்டும். ஆனால் இதன் உள்ளார்ந்த பொருள் அவ்வாறு கூறவில்லை. கிப்லா திசையை முன்பின் ஆக்கி மலஜலம் கழிக்கக்கூடாது என்பது தான் இதன் உள்ளார்ந்த பொருள். இந்தியா போன்ற நாடுகளில் வாழும் மக்கள் வடக்கு தெற்கு முகமாகத்தான் மலஜலம் கழிக்கவேண்டும்.

## புரிதல்: 2

நபி(ஸல்) மிம்பரின் மீதிருந்தபடி பகைவர்களை எதிர்த்துப் போரிடுவதற்காக உங்களால் முடிந்த அளவு பலத்தையும் தயார் நிலையிலுள்ள குதிரைப்படையையும் திரட்டி வையுங்கள் என்னும் (8:60) இறைவசனத்தை ஓத நான் கேட்டுள்ளேன். (பின்னர் அவர்கள்) "அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக சக்தி அம்பு எய்வதில்தான் உள்ளது. அறிந்த கொள்ளுங்கள்! சக்தி அம்பு எய்வதில்தான் உள்ளது. அறிந்து கொள்ளுங்கள்! சக்தி அம்பு எய்வதில்தான் உள்ளது'' என (மும்முறை) கூறினார்கள்.

**அறிவித்தவர்: உக்பா இப்னு ஆமிர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் முஸ்லிம்**

மேற்கண்ட ஹதீஸை மேலோட்டமாக நாம் புரிந்து கொண்டால், எந்தக் காலத்தில் நாம் வாழ்ந்தாலும் அம்பு எய்வதைக் கண்டிப்பாக கற்றிருக்க வேண்டும். அதை வைத்து மட்டுமே நாம்நம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். வேறு எந்தக் கலையும் போர்முறையும் போர் தளவாடங்களும் நமக்குத் தேவையே இல்லை என்பது போல தெரியும். ஆனால், நாம் வாழக்கூடிய காலத்தில் பலமிக்க ஆயுதங்கள் என்ன இருக்கின்றனவோ அவற்றைச் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தும் முறைகளை கட்டாய மாகத் தெரிந்துவைத்திருக்க வேண்டும் என்பதுதான் இதன் உள்ளார்ந்த பொருள். உதாரணத்திற்கு கம்ப்யூட்டர் உப யோகத்தைக் கூட மக்களுக்குத் தீங்குசெய்வதற்காகப் பயன் படுத்துகிறார்கள். அதை நாமும் கற்று நன்மை செய்ய வேண்டிய கடமை நமக்குள்ளது. இதற்கு இந்த அர்த்தம் கொடுக்கக் கூடாது என நாம் மறுத்தால் அழிவில் சிக்கித் தவிப்பவர்கள் நாமே என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

## புரிதல்: 3

"இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் (பெருநாள் தொழுகைக்காக வெளியில்) நீங்கள் சென்றதுண்டா?' என ஒருவர் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம் கேட்டார்.

"ஆம்! எனக்கு அவர்களுடன் நெருக்கமான உறவு இல்லாதிருந் தால் சிறு வயதுடைய நான் அதில் கலந்து கொண்டிருக்க முடியாது. கஸீர் இப்னு ஸல்த்(ரலி) உடைய இல்லத்திற்கு அருகில் உள்ள மேடைக்கு இறைத்தூதர்(ஸல்) வந்து உரை நிகழ்த்தினார்கள். பின்னர் பெண்கள் பகுதிக்கு வந்து அவர்

*களுக்கும் உபதேசம் செய்தார்கள். தர்மம் செய்யுமாறு அவர்களை வலியுறுத்தினார்கள். பெண்கள் தம் ஆபரணங் களை எடுத்து, பிலால்(ரலி) (ஏந்திய) ஆடையில் போட்டார்கள். பின்னர் இறைத்தூதர்(ஸல்) அவர்களும் பிலாலும் இல்லம் திரும்பினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) பதிலளித்தார்.*

***அறிவித்தவர்: அப்துர் ரஹ்மான் இப்னு ஆபிஸ்***
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 816***

*இந்த ஹதீஸின்படி இன்று நாம் ஏன் பெருநாள் தொழுகை யின்போது பெண்கள் பகுதிக்குச் சென்று தனியாக உரை நிகழ்த்துவதில்லை? இந்த சுன்னாவை நாம் விட்டுவிட்டோமா எனக் கேட்டால் நிச்சயமாக இல்லை.*

*அன்றைய காலத்தில் ஒலிபெருக்கி இல்லாததால் பெண்கள் பகுதிக்கு சத்தம் சென்று சேராது என்ற காரணத்தால் நபி (ஸல்) அவர்களுக்கும் தனியாக உரைநிகழ்த்தினார்கள். இன்று ஒலி பெருக்கி இருப்பதால் பெண்கள் பகுதிக்கு தனியாகச் சென்று உரை நிகழ்த்தவேண்டிய அவசியமில்லை எனப் புரிந்து கொள்கிறோம். இவ்வாறுதான் நாம் சந்திரக் காலண்டர் விஷயத்திலும் புரிந்து கொள்ளவேண்டும்.*

## *புரிதல்: 4*

**عنْ أَنَسَ بْنَ مَالِكٍ قَالَ: قَالَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: الْبُزَاقُ فِي الْمَسْجِدِ خَطِيئَةٌ وَكَفَّارَتُهَا دَفْنُهَا**

**رواه البخاري رقم الحديث415**

*“பள்ளிவசாலில் உமிழ்தல் குற்றமாகும். அதை மண்ணுக் கடியில் மூடுதல் அதற்குரிய பரிகாரமாகும்” என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அனஸ் இப்னு மாலிக்(ரலி)***
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 415***

*மேற்கண்ட ஹதீஸிற்கு மேலோட்டமான பொருள் எடுத்தால் தொழும்போது பள்ளிவாசலில் துப்பிக் கொள்ளலாம் என விளங்கும். அன்று பள்ளிவாசல் மண் தரையாக இருந்தது. இன்று சிமின்ட், மொசைக், மார்பில், கிரானைட் கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதில் துப்பினால் நிலை என்ன ஆகும்? இதை இன்று துப்பக்கூடாது என்றே விளங்க வேண்டும்.*

## புரிதல்: 5

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்திலும் அபூ பக்ர்(ரலி), உமர்(ரலி) காலங்களிலும் ஜுஃம்ஆ நாளில் இமாம் மிம்பரில் அமர்ந்த பின் பாங்கு சொல்லப்பட்டு வந்தது. உஸ்மான்(ரலி) காலத்தில் மக்கள் அதிகமாகியபோது கடை வீதியில் (பாங்கு, இகாமத் தவிர) மூன்றாவது அழைப்பு அதிகமானது.

**அறிவித்தவர்: ஸாயிப் இப்னு யஸீத்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 912**

மேற்கண்ட சம்பவத்தில் ஒரு முக்கியமான செய்தி கிடைக்கிறது. பாங்கு சொல்வதன் நோக்கம் மக்களை பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு அழைப்பதுதான். ஆரம்ப காலத்தில் ஜுஃம்ஆ விற்கு ஒரு பாங்கு போதுமானதாய் இருந்தது. பின்னர் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் மக்களை தொழுகை நேரத்திற்கான செய்தி கொடுப்பதற்கு ஒரு பாங்கு போதுமான தாய் இல்லை. எனவே அவர் இரு பாங்குகளை ஏற்படுத்தினார்.

ஆனால், அந்த வழிமுறையை நாம் இன்று பின்பற்றுவ தில்லை. காரணம் இன்று ஒலிபெருக்கி இருக்கிறது. அது நம்முடைய பாங்குச் சத்தத்தை வெகு தூரத்திற்கு கொண்டு செல்கிறது. எனவே அது இன்று தேவை இல்லை என்ற முடிவுக்கு நாம் வந்துவிட்டோம்.

இவ்வாறுதான் நபி(ஸல்) அவர்களின் காலத்தில் மாதத்தை ஆரம்பிப்பதற்கு தலைப்பிறையைக் கண்ணால் கண்டு கணக்கிட்டு மாதத்தை ஆரம்பித்தது சரியான வஸீலாவாக இருந்தது. வானஇயற்பியல் கணக்கு சரியாக அறியமுடியாத நிலையில் இருந்தது. ஆனால், இன்றோ கண்ணால் கண்டு கணக்கிடுவது பிரச்சினைகள் நிறைந்ததாகவும், ஒரு பிறையை பல கிழமைகளுக்குத் தேதியாகக் கணக்கிட வேண்டியதாகவும், எதிர்வரும் ஆண்டுகளைக் கணக்கிட முடியாததகவும் இதுபோன்ற பல குறைகளை நிவர்த்தி செய்யமுடியாத நிலையில் உள்ளது. வானஇயற்பியல்படி கணக்கிடுவது மிகத் தெளிவாகவும், இலகுவாகவும், உலகம் முழுவதும் ஒரே நாளில் கருத்து வேறுபாடின்றி கணக்கிட்டுக் கொள்வதற்கு ஏற்றதாகவும் இருக்கிறது. எனவே நாம் சந்திரக் கணக்கின் அடிப்படையில் மாதங்களைத் தொடங்குவதே மிகச்சரியானது.

## புரிதல்: 6

"ஆண்களின் சிறந்த வரிசை மறுமையில் பலன் அதிகமாகக்

கிடைக்கும் வரிசை (ஸஃப்) முதலில் உள்ளதாகும். இன்னும் அதில் சிறப்பற்றது மறுமைப்பலன் குறைவாகக் கிடைக்கும் வரிசை இறுதியில் உள்ளதாகும். பெண்களின் சிறந்த வரிசை (ஸஃப்) இறுதியில் உள்ளதாகும். அதில் சிறப்பற்றது முதலில் உள்ளதாகும்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி)**
**நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ்**

மேற்கண்ட ஹதீஸின்படி இன்று நாம் பள்ளியில் தொழும் ஆண்கள் மற்றும் பெண்களின் வரிசை அமைத்துக் கொள்வ தில்லை. ஆண்கள் தொழுவதற்கு வலப்பக்கத்திலோ, இடப் பக்கத்திலோ, மேற்பகுதியிலோ அல்லது பின் பக்கத்திலோ சுவர் அமைத்து மறைத்த நிலையில் பள்ளியை அமைக்கிறோம். இந்த முறை நபி(ஸல்) அவர்களின் கட்டளைக்கு மாற்றமான தல்லவா? ஆனால் நாம் யாரும் இதை விமர்சிப்பதுமில்லை; நடைமுறைப்படுத்துவதுமில்லை.

## புரிதல்: 7

**عَنْ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: فَرَضَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ زَكَاةَ الْفِطْرِ صَاعًا مِنْ تَمْرٍ أَوْ صَاعًا مِنْ شَعِيرٍ عَلَى الْعَبْدِ وَالْحُرِّ وَالذَّكَرِ وَالأُنْثَى وَالصَّغِيرِ وَالْكَبِيرِ مِنْ الْمُسْلِمِينَ وَأَمَرَ بِهَا أَنْ تُؤَدَّى قَبْلَ خُرُوجِ النَّاسِ إِلَى الصَّلاَةِ**

**رواه البخاري رقم الحديث1503**

முஸ்லிம்களிடையேயுள்ள ஆண், பெண், சிறியவர், பெரியவர், அடிமை, சுதந்திரமானவர் அனைவருக்காகவும் ஒரு ஸாவு அளவு பேரீச்சம் பழம் அல்லது ஒரு ஸாவு அளவு தீட்டாத கோதுமையைப் பெருநாள் தர்மமாக இறைத்தூதர் (ஸல்) நிர்ணயித்தார்கள். அதை பெருநாள் தொழுகைக்கு முன்ன தாகவே கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1503**

மேற்கண்ட ஹதீஸின்படி பார்த்தால் அதில் கூறப்பட்டுள்ள தானியங்கள் அல்லது பொருட்களைத்தான் ஃபித்ராவாக கொடுக்கவேண்டும். ஆனால் இன்று நாம் அவ்வாறு கொடுக்கிறோமா? நாம் உண்ணும் அரிசியையும் அதற்கான

பணத்தை - கரன்சிகளைத்தானே கொடுக்கிறோம். இது நபிவழிக்கு மாற்றமான செயலாக இல்லையா? நம்முடைய ஃபித்ரா கூடுமா? இன்னும் ஃபித்ரா வினியோகத்தைப் படம் பிடித்து பத்திரிக்கைகளில் போடுவதும் எதிர்வரும் ஆண்டில் வசூலுக்கு வலுசேர்ப்பதற்காக கொள்கை சாராதவர்களிடம் கூட கணக்குக்காட்டுவதும்தான் நபிவழியா?

கொள்கையில், வணக்க வழிபாடுகளில், ஹலால் ஹராம் என்ற சட்டங்களில் மாற்றங்கள் செய்வது என்றுமே அனுமதிக்க முடியாதது. ஒரு செயலைச் செய்வதற்கு ஒரு வஸீலா நமக்கு அமைத்துத்தரப்பட்டால் அந்த வஸீலாவில் மாற்றம் ஏற்படும் போது அதை ஏற்றுக் கொள்வதால் வணக்கத்தில் மாற்றம் ஏற்பட்டதாக ஆகாது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு மாதங்களைத் தொடங்கி ஆண்டுகளின் எண்ணிக் கையைக் கணக்கிட்டுக் கொள்வதற்கு பிறையை அறிவதற்கு கையாளும் ஒவ்வொரு முறையும் ஒரு வஸீலாவாகும். அதில் வானஇயற்பியல் கணக்கு தெளிவான ஒரு வஸீலா என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். மேலும் மாதங்களை சரியாகக் கணக்கிட்டு ஆரம்பிப்பதுதான் வணக்கமே தவிர பிறைபார்ப் பதும், தகவல் கேட்பதும் வணக்கமாகாது.

## புரிதல்: 8

நபி(ஸல்) அரபு மொழியில் ஜும்ஆ உரை நிகழ்த்தினார்கள். நாமும் அரபுமொழியில்தான் உரை நிகழ்த்த வேண்டுமா? அவர்கள் அரபு மொழிக்காரர்கள். மக்கள் எந்த மொழியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்த மொழியில் உரை நிகழ்த்துவதுதான் இஸ்லாமிய வழிகாட்டுதல் என்பதை நாம் எப்படிப் புரிந்தோம். அரபுமொழியில் உரை நிகழ்த்தினால் தான் ஜும்ஆ கூடும் என வாதிடமுடியாது. ஜும்ஆ உரை நிகழ்த்துவது கடமை. அது ஒரு வணக்கம். அந்த உரையை மக்களுக்குப் புரியவைப்பதற்கு நாம் பயன்படுத்தும் மொழி வஸீலாவாகும். அதே போல்தான் ஆண்டுகளை அறிவதற்கு சந்திரக் கணக்கு ஒரு வஸீலா அதை எடுத்துக் கொள்வதால் வணக்கத்தில் குறை ஏற்படும் அல்லது கூடாது என வாதிடுவது அறிவுடைமையாகாது.

பிறை பார்ப்பது **ஃபர்ள் கிஃபாயாவா** - பொதுவான கடமையா? அல்லது **ஃபர்ளு அய்னா**- தனி நபர் மீதும் கடமையா? ஃபர்ளு

அய்ன் என எடுத்துக் கொண்டால் கட்டாயமாக ஒவ்வொருவரும் தலைப்பிறையைக் கண்ணால் கண்டாக வேண்டும். கிஃபாயா என்றால் தகவலோ அறிதலோ போதுமானது.

தலைப்பிறையைக் கண்ணால் கண்டுதான் மாதத்தைத் தொடங்க வேண்டும் என்ற வஸீலாவை இன்று நடைமுறைப் படுத்துவதால் பல தவறுகள் நிகழ்கின்றன. மனிதன் கைகளால் ஏற்படுத்திக் கொண்ட நாசத்தின் காரணமாக ஓசோன் படலம் வான்வெளிவீதி கடுமையான மாசால் சூழப்பட்டுள்ளது. இன்று இரண்டாம் மூன்றாம் பிறைகளைக்கூட கண்ணால் காண முடியாத நிலை உள்ளது.

வானஇயற்பியலை அடிப்படையாகக் கொண்ட சந்திரக் கணக்கு அப்படியல்ல அதன் ஒவ்வொரு நொடிப் பொழுதின் அசைவும் பதியப்படுகிறது; தெளிவாகச் சொல்லப்படுகிறது; இது வரை சொன்ன கணக்கில் எந்த மாற்றத்தையும் காணமுடியவில்லை. இப்போது நாம் சற்று சிந்திப்போம். இந்த வஸீலாவை யாருக்காக எதற்காக நாம் கைவிட வேண்டும்? தெளிவான ஒன்றை விட்டுவிட்டு தெளிவற்ற ஒன்றை நாம் ஏன் பின்பற்றவேண்டும்?

## புரிதல்: 9

வானஇயற்பியல் படி சந்திரக் கணக்கை இன்று ஏற்றுக் கொள்ளாத உங்களின் புரிதலில் பல கோளாறுகள் நேற்றும் இருந்தன. ஒவ்வொன்றையும் நினைக்கும்போது நாம் சிரிப் போமோ இல்லையோ, நிச்சயமாக நீங்களே சிரிப்பீர்கள்.

நீங்கள் முதன்முதலில் இரயில் புகையைக் கக்குவதைப் பார்த்ததும் தஜ்ஜால் வருகிறான் என ஓடினீர்கள்.

தஜ்ஜாலின் வாகனம் என வதந்தியைக் கிளப்பினீர்கள்.

பள்ளிவாசலில் மைக் மற்றும் ஆம்ளிஃபயரைப் பார்த்ததும் அதற்குள் ஷைத்தான் இருக்கிறான் அதனால்தான் அதற்குள் சத்தம் அதிகமாக வருகிறது. அதை பள்ளிவாசலில் வைக்கக்கூடாது என சண்டைபோட்டீர்கள். பாங்கு சத்தத்தை ஷைத்தான் கேட்டால் ஓடிவிடுவான் எனவே அதில் பாங்கு சொல்லி சோதித்துப் பார்க்கலாம் என அதை அங்கீகரித்தவர்களின் பேச்சை நீங்கள் பிறகுதான் கேட்டீர்கள்.

தஜ்ஜால் ஒற்றைக் கண் உடையவன் தொலைக் காட்சிப் பெட்டிக்கு ஒற்றைக் கண் இருக்கிறது எனவே இதுதான் தஜ்ஜால் எனக் கூச்சலிட்டீர்கள்.

தொழுகை நேரங்களை வகுத்துக் கொடுத்ததற்கு, நிழல் நகர்வதை வைத்து நேரம் பார்த்துத்தான் தொழவேண்டும்; கடிகாரமெல்லாம் ஹராம்... ஹராம்... என கத்தினீர்கள்.

இன்று வானஇயற்பியல் சந்திரக் கணக்கை நாம் எடுத்து வைக்கும்போதும் அதேபோல் வழிகேடு... வழிகேடு... என எங்களிடம் வம்புக்கு வருகிறீர்கள்.

சந்திர நாள்காட்டியில் ஒருமுறையாவது தவறு நிகழ்ந் திருந்தால்கூட தயக்கம் காட்டுவதில் அல்லது அதை ஏற்க மறுப்பதில் நியாயம் இருக்கலாம். அப்படி ஏதும் நடக்க வில்லையே. உங்களிடம் மாற்றுக் கொள்கையுடைய கிருத் தவர்களோ, யூதர்களோ அல்லது பிறமதத்தவர்களோ ஒரு விஷயத்தைக் கொண்டு வந்தால் அதை ஆய்வு செய்து ஏற்றுக் கொள்கிறீர்கள். இறைநம்பிக்கையுள்ள உங்கள் சகோதரர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தால் அதை என்ன என்றுகூட பார்க்காமல் கடுமையாக எதிர்க்கிறீர்களே, இஸ்லாமிய இலக்கணத்தில் இதுதான் சகோதரத்துவமா?

இன்ஷா அல்லாஹ் விரைவில் இதை ஏற்றுக் கொண்டு மீண்டும் உங்களையே நீங்கள் பார்த்து அன்றும் சிரிப்பீர்கள்.

## நபி(ஸல்) கணக்கின் அடிப்படையில் செயல்பட்ட நிகழ்வுகள்

29 நாள்களைக் கொண்ட ரமளானில் நபி(ஸல்) 20 ஆம் நாளில் இஃதிகாஃப் இருக்கச் சென்றார்கள். 30 நாள்களைக் கொண்ட ரமளானில் 21 ஆம் நாளில் இஃதிகாஃப் இருக்கச் சென்றார்கள்.

நாங்கள் ரமளானின் நடுப்பத்து நாள்களில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இஃதிகாஃப் இருந்தோம். இருபதாம் நாள் காலையில் வெளியேறினோம். இருபதாம் நாள் காலையில் இறைத்தூதர்(ஸல்) எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அவ்வுரையில், 'எனக்கு லைலத்துல் கத்ர் காட்டப்பட்டது. அதை நான் மறந்து விட்டேன். எனவே, அதைக் கடைசிப் பத்து நாள்களின் ஒற்றைப்படைகளில் தேடுங்கள். அன்று ஈரமான களிமண்ணில் நான் ஸஜ்தாச் செய்வது போல் கனவு கண்டேன். அல்லாஹ்வின் தூதருடன் இஃதிகாஃப் இருந்தவர் பள்ளிக்குத் திரும்பட்டும்' எனக் கூறினார்கள். மக்கள் பள்ளிக்குத் திரும்பினார்கள். அப்போது வானத்தில் சிறு மேகத்தைக்கூட நாங்கள் காணவில்லை. திடீரென மேகம்

வந்து மழை பொழிந்தது. தொழுகைக்காக இகாமத் சொல்லப் பட்டது. இறைத்தூதர்(ஸல்) ஈரமான களிமண்ணில் ஸஜ்தாச் செய்தார்கள். அவர்களின் நெற்றியிலும் மூக்கிலும் களி மண்ணை கண்டேன்.

**அறிவித்தவர்: அபூ ஸயீத்(ரலி)**
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 2036***

இறைத்தூதர்(ஸல்) ரமளானில் நடுப்பத்து நாள்களில் இஃதிகாஃப் இருந்தார்கள். ஓர் ஆண்டு அவர்கள் இஃதிகாஃப் இருந்து இருபத்தி ஒன்றாவது நாளை அடைந்ததும். அந்நாளின் காலைதான் இஃதிகாபிலிருந்து வெளியேறினார்கள்.

''என்னுடன் இஃதிகாஃப் இருந்தவர்கள் கடைசிப் பத்து நாள்களிலும் இஃதிகாஃப் இருக்கட்டும்! அந்த நாள் எனக்குக் காட்டப்பட்டது; பின்னர் அது எனக்கு மறக்கடிக்கப்பட்டு விட்டது! காலை நேரத்தில் ஈரமான மண்ணில் நான் ஸஜ்தா செய்யக் கண்டேன். எனவே, அதைக் கடைசிப் பத்து நாள்களில் தேடுங்கள். ஒவ்வொரு ஒற்றைப் படையிலும் அதைத் தேடுங்கள்!' எனக் கூறினார்கள். அன்று மழை பொழிந்தது. அன்றைய பள்ளிவாசல் கூரை வேயப்பட்டதாய் இருந்தது. எனவே, பள்ளிவாசல் ஒழுகியது. இருபத்தொன்றாம் நாள் ஸுப்ஹுத் தொழுகையில் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் நெற்றியிலே ஈரமான களிமண் படிந்திருந்ததை என்னுடைய இரண்டு கண்களும் பார்த்தன.

**அறிவித்தவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி)**
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 2027***

**عن ابْنَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ إِنَّا أُمَّةٌ أُمِّيَّةٌ لَا نَكْتُبُ وَلَا نَحْسُبُ الشَّهْرُ هَكَذَا وَهَكَذَا يَعْنِي مَرَّةً تِسْعَةً وَعِشْرِينَ وَمَرَّةً ثَلَاثِينَ**

**رواه البخاري1913**

"மாதம் இப்படியும் இப்படியுமாய் இருக்கிறது. நாமோ உம்மி சமுதாயம்; (வானஇயற்பியல்படி) எழுதுவதையும், கணக்கிடு வதையும் நாம் அறிந்திருக்கவில்லை. அதாவது சில வேளை இருபத்தொன்பது நாள்களாகவும் சில வேளை முப்பது

*நாள்களாகவும் இருக்கிறது!'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1913**

## குரைப் சம்பவம் ஒரு பார்வை

عَنْ كُرَيْبٍ أَنَّ أُمَّ الْفَضْلِ بِنْتَ الْحَارِثِ بَعَثَتْهُ إِلَى مُعَاوِيَةَ بِالشَّامِ قَالَ فَقَدِمْتُ الشَّامَ فَقَضَيْتُ حَاجَتَهَا وَاسْتُهِلَّ عَلَيَّ رَمَضَانُ وَأَنَا بِالشَّامِ فَرَأَيْتُ الْهِلاَلَ لَيْلَةَ الْجُمُعَةِ ثُمَّ قَدِمْتُ الْمَدِينَةَ فِي آخِرِ الشَّهْرِ فَسَأَلَنِي عَبْدُ اللَّهِ بْنُ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا ثُمَّ ذَكَرَ الْهِلاَلَ فَقَالَ مَتَى رَأَيْتُمْ الْهِلَالَ فَقُلْتُ رَأَيْنَاهُ لَيْلَةَ الْجُمُعَةِ فَقَالَ أَنْتَ رَأَيْتَهُ فَقُلْتُ نَعَمْ وَرَآهُ النَّاسُ وَصَامُوا وَصَامَ مُعَاوِيَةُ فَقَالَ لَكِنَّا رَأَيْنَاهُ لَيْلَةَ السَّبْتِ فَلاَ نَزَالُ نَصُومُ حَتَّى نُكْمِلَ ثَلاَثِينَ أَوْ نَرَاهُ فَقُلْتُ أَوَ لاَ تَكْتَفِي بِرُؤْيَةِ مُعَاوِيَةَ وَصِيَامِهِ فَقَالَ لاَ هَكَذَا أَمَرَنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَشَكَّ يَحْيَى بْنُ يَحْيَى فِي نَكْتَفِي أَوْ تَكْتَفِي.

**رواه مسلم رقم الحديث 1819**

*என்னை உம்முல் ஃபள்ல் ஷாம் நகரத்திற்கு முஆவியாவிடம் அனுப்பினார். நான் ஷாம் நகரம் வந்தடைந்தேன். அவருடைய வேலைகளை முடித்தேன். நான் ஷாம் நகரில் இருக்கும்போதே ரமளான் பிறை எனக்குத் தென்பட்டது. நான் வெள்ளிக் கிழமையன்று பிறைபார்த்தேன். பின்னர் மாதக்கடைசியில் மதீனா நகரம் வந்தடைந்தேன்.*

*''அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) என்னை விசாரித் தார்கள். பின்னர் பிறை குறித்த பேச்சு வந்தது. நீங்கள் எப்போது பிறை பார்த்தீர்கள்'' என அவர் வினவினார்.*

*''நாங்கள் அதை வெள்ளிக்கிழமை பார்த்தோம்'' என நான் கூறினேன்.*

*''நீ அதைப் பார்த்தாயா?'' என அவர் கேட்டார்.*

*''ஆம் மக்களும் பார்த்தார்கள்; மக்கள் நோன்பு நோற்றார்கள்; முஆவியாவும் நோன்பு நோற்றார்'' என நான் கூறினேன்.*

*''ஆனால், நாங்கள் சனிக்கிழமைதான் அதைப்பார்த்தோம்; நாங்கள் முப்பதை பூர்த்தியாக்காத வரை அல்லது அதைக்*

காணாத வரை நோன்பு நோற்பதை நிறுத்தமாட்டோம்" என அவர் கூறினார்.

"முஆவியா பார்த்ததும் அவர் நோன்பு நோற்றதும் உங்களுக்குப் போதாதா?" என நான் கேட்டேன்.

''இல்லை, எங்களுக்கு இறைத்தூதர்(ஸல்) இவ்வாறுதான் கட்டளையிட்டார்கள்" என அவர் கூறினார்.

**அறிவித்தவர்: குரைப்**
**நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1819**

இந்த ஹதீஸ் அறிவிப்பாளர்களில் ஒருவரான யஹ்யா இப்னு யஹ்யா என்பவர் நமக்குப் போதாதா அல்லது உங்களுக்குப் போதாதா என குரைப் கூறியதாக சந்தேகப்படுகிறார்.

ஒவ்வொரு பகுதி மக்களும் தத்தம் பகுதியில் பிறைபார்த்துத் தான் மாதத்தைத் தொடங்க வேண்டும். அதாவது திருச்சிக்கு ஒரு தேதி, சென்னைக்கு ஒரு தேதி, மதுரைக்கு ஒரு தேதி என தேதிகள் மாறுபட்டுத்தான் இருக்க வேண்டும் என வாதிடு வோர் இந்த சம்பவத்தைத்தான் ஆதாரமாக முன்வைக் கின்றனர். இது எந்த அளவிற்கு சரியானது என்பதை நாம் பார்ப்போம். குர்ஆனுக்கு முரண்படுகிறது எனக் கூறி, ஸஹீஹ் தரத்தில் உள்ள ஹதீஸ்களை எதிர்ப்பவர்கள் கூட தங்களின் வாதத்தை நியாயப்படுத்துவதற்காக இச்சம்பவத்தை ஹதீஸ் என்கின்றனர்.

இது ஹதீஸ் அல்ல; இது ஒரு சம்பவம். நபி(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்று இடம்பெற்றால்தான் ஹதீஸ் எனப்படும். மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் மூன்றிலிருந்து ஒன்று கூட இடம்பெறவில்லை.

''இல்லை; இறைத்தூதர்(ஸல்) இவ்வாறுதான் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள்'' என்ற வாசகத்தை வைத்து இது ஹதீஸ்தான் என வாதிடமுடியாது. காரணம், எவ்வாறு கட்டளையிட்டார்கள் என்ற விஷயம் தெளிவுபடுத்தப் படவில்லை. இவ்வாறுதான் கட்டளையிட்டார்கள் என்றால் அந்தக் கட்டளையின் வாசகம் இடம்பெற்றிருக்கவேண்டும். எனவே இதை ஹதீஸ் என ஏற்கவே முடியாது.

அப்படியே இந்த சம்பவத்தை ஹதீஸ்தான் என ஏற்றுக் கொண் டாலும் வேறு சில காரணங்களால் இதை ஏற்கமுடியாது.

முஸ்லிம்களில் இருவர் பிறை பிறந்துவிட்டால் சாட்சி அளித்தால் அதை அடிப்படையாக வைத்து நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்; நோன்பை விட்டுவிடுங்கள் என்பது நபி(ஸல்) அவர்களின் கட்டளை. இந்த அடிப்படையில் பார்த்தால் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம் குரைப் என்னும் தனி நபர் மட்டுமே இந்தச் செய்தியைச் சொல்கிறார். அது ஒரு சாட்சிதான். எனவே இதன் காரணமாகவும் அது மறுக்கப்படும். முஆவியா பார்த்தார்; மக்கள் பார்த்தார்கள்; நோன்பு நோற்றார்கள் எனவே இதற்கு சாட்சி தேவை இல்லை என வாதிடமுடியாது. காரணம் எத்தனை பேர் பார்த்திருந் தாலும் நோன்பு நோற்றிருந்தாலும் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம் வந்து சொன்ன நபர் ஒருவர்தான். அவர் சொல்வதை உறுதிபடுத்தாமல் ஏற்றுக் கொள்ளமுடியாது. அப்படியே உறுதிபடுத்த முயற்சித்தால் பல நாள்கள் ஷாம் தேசம் சென்று திரும்ப பல நாள்கள் ஆகும். அது சாத்திய மல்ல. எனவே அதை இப்னு அப்பாஸ்(ரலி) மறுத்துள்ளார் என்ற முடிவுக்கு வருவதுதான் பொருத்தமானது. மாதத்தின் ஆரம்பத்தில் பார்த்த பிறைச் செய்தியை மாதத்தின் கடைசி நாளில் வந்து குரைப் சொல்கிறார். அதுவும் ஒரு சாட்சிதான் அதை எப்படி ஏற்றுக் கொள்வது என்ற பிரச்சினை இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களுக்கு மட்டுமல்ல எல்லோ ருக்கும் தான் ஏற்படும்.

ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களும் தத்தம் பகுதியில் பிறை பார்த்துத்தான் மாதத்தைத் தொடங்க வேண்டும் என்பதை ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் அதை நடை முறைப்படுத்துவது பெரும் கேலிக்கையாகிவிடும். அதாவது, தத்தம் பகுதியின் அளவு கோல் என்ன? ஒரு பகுதி மக்கள் எத்தனை கிலோமீட்டர் தூரம் வரை தம் பகுதி என அறிவிக் கலாம். இதற்கு நபி(ஸல்) காட்டித் தந்த அல்லது குறிப்பிட்ட அளவு கோல் என்ன? சுமார் ஒரு நாற்பது கி.மீ ஐம்பது கி.மீ தூரம் வரை நாம் நம் எல்லையை வைத்துக் கொள்ளலாம் என்றால், நூற்றி ஐம்பது இருநூறு கி.மீ தூரம் வரை ஒரே ஊராக இருக்கும் பகுதிகளின் நிலை என்ன? தத்தம் பகுதி என எல்லையை நிர்ணயிக்கும் அதிகாரம் யாருக்குக் கொடுக்கப் பட்டுள்ளது? இந்த கேள்விகளுக்கு சரியான பதிலை அளித் தால் இதை நியாயப்படுத்துவதில் ஏதோ அர்த்தம் இருக்கலாம்.

இங்கு இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும்.

வெளியிலிருந்து வரும் செய்தியை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் மார்க்கம் என்றால் இப்னு அப்பாஸ் (ரலி) குரைப்பிடம் அது குறித்து விசாரிக்க வேண்டிய அவசியமே இல்லை.

இன்னும் அழுத்தமாக நீ பார்த்தாயா? எப்போது பார்த்தீர்கள் என்றும் இப்னு அப்பாஸ்(ரலி) கேட்கிறார். அப்படியானால், அந்தக் தகவலை ஏற்றுக் கொள்வதற்கான ஒரு விசாரிப்பாக ஏன் இருக்கக்கூடாது?

தத்தம் பகுதியின் அளவுகோல் என்ன என்று ஒரு சபையில் ஓர் மவ்லவியிடம் விளக்கம் கேட்டதற்கு அவர் ஒரு பதில் சொன்னார். அவரின் அறியாமையும், மார்க்கத்தின் மீது அவரின் பற்றையும் அது வெளிப்படுத்தியது. அது பார்த்தவர் களுக்கு மனவேதனையை அளித்தது.

### அவர் சொன்ன விளக்கம்:

தத்தம் பகுதியை நாம் விரும்பிய அளவிற்கு வைத்துக் கொள்ளலாம். இதற்கு எந்த வரம்புமில்லை. ஹஜ்ஜில் முடிவெட்டுபவர் எவ்வாறு தன் இஷ்டத்திற்கு கூட்டியோ குறைத்தோ வெட்டிக் கொள்கிறாரோ அதேபோல தத்தம் பகுதியை ஒவ்வொரு பகுதி மக்களும் தங்களின் விருப்பத்திற்கு அமைத்துக் கொள்ளலாம் என்றால். அவரிடம் மாதத்தை ஆரம்பிப்பதற்கு மார்க்க முடிவைக் கேட்டால் முடியைப் பற்றிப் பேசுகிறார். இவ்வாதத்திற்குச் சேர்க்கப்படும் ஆதாரங்கள் எப்படி இருக்கும் என்பதை இதிலிருந்தே விளங்கிக் கொள்ளலாம்.

இச்சம்பவத்தில் குரைப்பிடமிருந்து வந்த வார்த்தைகள் உறுதியாக இல்லாமல் முன்னும் பின்ன மாறிமாறி வருவதும் கவனிக்கத் தக்கது.

## இக்திலாஃபுல் மதாலிஃ - தத்தம் பகுதி ?

பிறையைப் பார்த்தாலும் அதைக் குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் எடுத்துச் செயல்படுத்தக்கூடாது என ஹதீஸ்களை ஆய்வு செய்யும் அறிஞர்களில் அதிகமானோர் கூறுகின்றனர். அவர்கள் அனைவரும் கவனிக்க வேண்டியது என்னவென்றால் உலகில் எப்போதும் இரண்டு கிழமைகள் இரண்டு தேதிகள் இருந்துகொண்டே இருக்கும். அதை கருத்தில் கொண்டு பிறை விஷயத்தில் ஆய்வு செய்தால் விடைகிடைத்துவிடும்.

உதாரணமாக வெள்ளிக் கிழமை மாதத்தின் 29 ஆம் நாளாக இருக்கும்போது உலகில் ஒரு பகுதியில் வசிப்பவர்கள் வியாழக்கிழமை 28 ஆம் தேதியில் இருப்பார்கள். 29 ஆம் தேதி ஒருவர் பிறையைப் பார்த்து அதன் தகவலை பகிர்ந்து கொண்டால் யாரெல்லாம் சனிக்கிழமையில் நுழைய இருக் கிறார்களோ அல்லது நுழைந்துவிட்டார்களோ அவர்களை மட்டும்தான் அந்தத் தகவல் கட்டுப்படுத்தும். அதே சமயம் 28 ஆம் நாள் வியாழனில் இருப்பவர்களுக்கு இந்தத் தகவலைப் பகிர்ந்து கொண்டால் அது அவர்களைக் கட்டுப்படுத்தாது. காரணம் அவர்கள் இன்னும் முந்தைய மாதத்தின் 29 ஆம் நாளை முடிக்காமல் இருப்பார்கள். ஏனென்றால் பூமி மேற்கிலிருந்து கிழக்கில் சுற்றுவதால் உலகத் தேதிக் கோட்டிற்கு மேற்குப் பகுதியில் இருப்பவர்கள் நாளையும், தேதியையும் முதலில் ஆரம்பிப்பார்கள்.

உலகதேதிக் கோட்டிற்கு கிழக்குப் பகுதியில் இருக்கும் அவர்கள் சனிக்கிழமைக்குள் நுழையும்போதுதான் அவர்களை அந்தப் பிறை கட்டுப்படுத்தும், அதாவது அவர்களுக்கு தேதி மாறும். இதைத்தான் நபி(ஸல்) பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

**عن أبي هريرة رضي الله عنه قـــال: صَـــوْمُكُمْ يَـــوْمَ تَصُـــوْمُوْنَ وَفِطْــرُكُمْ يَـــوْمَ تُفَطِّـــرُوْنَ.**

**رواه البيهقي رقم الحـــديث7068**

“நீங்கள் நோன்பு நோற்கும் கிழமைதான் உங்களின் நோன்பாகும். நீங்கள் நோன்பை முடிக்கும் கிழமைதான் பெருநாள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி)**
**நூல்: பைஹகீ, ஹதீஸ் எண்: 7068**

உலகத்தில் முந்திச் செல்பவர்கள் - உலகத் தேதிக் கோட்டிற்கு மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள்தான் நோன்பை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறே அவர்கள்தான் பெருநாளையும் தொடங்க வேண்டும். அவர்கள் எந்தக் கிழமையில் மாதத்தை ஆரம்பிக்கிறார்களோ அந்தக் கிழமையில்தான் உலகிலுள்ள அனைவரும் ஆரம்பிக்கவேண்டும் என்ற செய்தியை மேற்கண்ட ஹதீஸ் தருகிறது. இந்த ஹதீஸில் கவனிக்கப் படவேண்டிய வார்த்தை **‘யவ்ம்’** என்னும் வார்த்தையாகும். இதற்கு **நாள்,**

**கிழமை** என்று பொருள். **இக்திலாஃப் மதாலிஃ** என்பதை உதயப் பகுதி எனப் புரிந்து கெண்டு ஒரே கிழமையில் மாதத்தை ஆரம்பித்தால் பிரச்சினைகள் முடிந்துவிடும். யாரையும் யாரும் விமர்சனம் செய்யவேண்டிய கருத்து வேறுபட வேண்டிய அவசியம் ஏற்படாது.

## ரூஃயத் என்றால் என்ன ?

மக்ரிப் நேரத்தில் பிறையைக் கண்ணால் பார்த்து மறுநாள் தான் மாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என வாதிடுபவர்கள் **சூமூ லி ரூஃயத்திஹி வ அஃப்திரூ லி ரூஃயத்திஹி** என்ற வாசகத்தில் உள்ள **ரூஃயத்** என்னும் வார்த்தையைத்தான் ஆதாரமாக வைக்கின்றனர். **ரூஃயத்** என்றால் கண்ணால்தான் பார்க்கவேண்டும்; அதைக் கணக்கிடவே கூடாது என்கின்றனர்.

**ரூஃயத்** என்னும் வார்த்தைக்கு இலக்கணம் மற்றும் இஸ்லாமிய நடைமுறையில் என்ன அர்த்தம் என்பதை முதலில் பார்ப்போம்.

**ரூஃயத்** என்னும் வார்த்தைக்கு **அன்னளரு பில் அய்ன்** - கண்ணால் காண்பது, **அன்னளரு பில் கல்ப்** - உள்ளத்தில் உணர்தல் **அன்னளரு பில் அக்ல்** - அறிவால் காண்பது, உணர்தல், கனவு காணுதல், **ளன்ன** - கணக்கிடுதல், கணித்தல் போன்ற பொருட்கள் உள்ளன. இத்தனை அர்த்தங்கள் இருக்கும்போது கண்ணால் காண்பது மட்டும்தான் என ஒரேயொரு பொருளுக்கு மட்டும் உரியதாய் இந்த வார்த்தை யைப் பயன்படுத்துவது முறையல்ல.

இந்த வார்த்தை திருக்குர்ஆனில் என்னென்ன பொருளில் இடம்பெற்றுள்ளது என்பதையும் பார்க்கலாம்.

பின்னர் அவருடன் சேர்ந்து உழைக்கும் பருவத்தை அடைந்த போது, “என்னருமை மகனே! நிச்சயமாக உன்னை அறுத்துப் பலியிடுவதாகக் கனவில் கண்டேன். இது குறித்து உம் கருத்து என்ன? தெரிவிப்பீராக!” என அவர் கேட்டார்.

‘‘என்னருமைத் தந்தையே! நீங்கள் ஏவப் பட்டபடியே செய்யுங்கள்! அல்லாஹ் நாடினால், என்னைப் பொறுமை யாளர்களில் ஒருவனாகவே காண்பீர்கள்!” எனக் கூறினார்.

**திருக்குர்ஆன் 37:102**

மேற்கண்ட வசனத்தில் **இன்னீ அரா ஃபில் மனாமி** - நான்

கனவில் கண்டேன் என்ற வார்த்தையும், **ஃபன்ளுர் மாதா தரா** - உன் கருத்து என்ன என்ற வார்த்தையையும் கவனிக்க வேண்டும். இங்கு **ரூஃயத்** என்பது கனவில் காண்பதற்கும் கருத்துத் தெரிவிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு கண்ணால் காண்பது குறித்து இந்த வசனம் பேசவே இல்லை. எனவே இந்த வார்த்தைக்கு கண்ணால் காண்பது மட்டும் தான் பொருள் என வாதிடமுடியாது.

யானைப் படையினரை உம்முடைய இரட்சகன் என்ன செய்தான்? என்பதை நீர் பார்த்தீரா? **திருக்குர்ஆன் 105:1**

மேற்கண்ட வசனத்தில் **ரூஃயத்** அறிதல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நபி(ஸல்) யானைப்படையைக் கண்ணால் காணவில்லை என்பதை இங்கு அறியவேண்டும். அது நபி(ஸல்) பிறப்பதற்கு முன்பு நடந்த நிகழ்வு அதை அவர்கள் எப்படி கண்ணால் கண்டிருப்பார்கள்? இது போன்ற ஏராளமான உதாரணங்கள் திருக்குர்ஆனில் உள்ளன.

ஆத் கூட்டத்தை உன்னுடைய இரட்சகன் என்ன செய்தான் என்பதை நீர் பார்த்தீரா? **திருக்குர்ஆன்89:6**

ஆத் கூட்டம் வாழ்ந்த காலம் என்ன? நபி(ஸல்) வாழ்ந்த காலம் என்ன? எனவே ரூஃயத் என்பதற்கு கண்ணால் காண்பது மட்டும்தான் பொருள் என வாதிடுவது தவறாகும்.

நீங்கள் மரணத்தைச் சந்திப்பதற்கு முன்னரே அதை விரும்பினீர்களே! இப்போது அது உங்களின் கண்முன்னே இருப்பதைத் தெளிவாகப் பார்த்துக் கொண்டீர்கள்.

**திருக்குர்ஆன் 3:143**

இந்த வசனத்தில் மரணத்தைப் பார்த்துக் கொண்டீர்கள் என்பதற்கு என்ன பொருள்? மரணத்தை அறிந்து கொண்டீர்கள் என்பதுதானே? அப்படியானால் ரூஃயத் என்பதற்கு கண்ணால் காண்பது மட்டுமே பொருள் என எவ்வாறு கூறமுடியும்.

கண்ணால் மட்டும் காண்பதற்கு ஒரு வார்த்தை பயன்படுத்தப் படும் அந்த வார்த்தையை திருக்குர்ஆன் பின்வருமாறு பயன் படுத்துகிறது.

(பத்ரு களத்தில்) சந்தித்த இரண்டு சேனைகளிலும் உங்களுக்கு ஓர் அத்தாட்சி இருந்தது. ஒரு சேனை இறைவழியில் போரிட்டது;

*மற்றொன்று இறைமறுப்பாளர்களாய் இருந்தது, இறை மறுப்பாளர்கள் இறைவழியில் போரிடுவோரைத் தங்களைப் போல் இரண்டு மடங்காகத் கண்களால் கண்டனர். இன்னும், தான் நாடியோருக்கு அல்லாஹ் தன் உதவியால் வலுப்படுத்து கிறான். நிச்சயமாக உற்றுநோக்குவோருக்கு இதில் படிப்பினை இருக்கிறது.* ***திருக்குர்ஆன் 3:13***

*மேற்கண்ட வசனத்தில்* ***ரஃயல் அய்ன்*** *என்ற பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது. இதற்குத்தான் கண்ணால் காண்பது என பொருள். பிறை தொடர்பான ஒரு ஹதீஸில் கூட இது போன்ற வார்த்தைப் பயன்படுத்தப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.*

*பிறையைக் கண்ணால் காண்பது சுன்னா - நபிவழியாகும். எனவே பிறையைக் கண்ணால் பார்த்துத்தான் மாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற வாதமும் அர்த்தமற்றது.*

*தினமும் ஐவேளைத் தொழுகைக்கான நேரத்தை நபி(ஸல்) அவர்களும், அவர்களின் தோழர்களும் எவ்வாறு அறிந்து வந்தார்கள். சுவர் கடிகாரத்தைப் பார்த்தா? கைக் கடிகாரத்தைப் பார்த்தா? டிஜிடல் கடிகாரத்தைப் பார்த்தா?*

*சூரிய உதயம், உச்சம், அடி சாய்தல், அஸ்தமித்தல் முதலிய வற்றின் அடிப்படையில்தானே.*

## தொழுகையின் நேரங்களை அறிதல்:

*“லுஹர் தொழுகையின் நேரம் சூரியன் (உச்சியிலிருந்து) சாய்ந்ததிலிருந்து, ஒரு மனிதனின் நிழல் அவனுக்குச் சமமாக ஆகும், அஸருடைய நேரம் வராத வரையிலாகும். இன்னும் அஸர் தொழுகையின் நேரம் சூரியன் மஞ்சள் நிறத்தை அடையாத வரையாகும். இன்னும் மக்ரிப் தொழுகையின் நேரம் செவ்வானம் மறையாத வரையாகும். மேலும், இஷாதொழுகையின் நேரம் நள்ளிரவு வரையாகும். இன்னும் சுபுஹு தொழுகையின் நேரம் கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியன் உதயமாகும் வரையிலாகும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)***
***நூல்: முஸ்லிம்***

*மேற்கண்ட ஹதீஸின்படி கிழக்கு சூரியன் உதிப்பதைப் பார்த்தும் சூரியனின் இடம் மாறுதலைப் பார்த்தும், சூரியனின் மறை*

தலைப் பார்த்தும், மேற்கு திசையில் செவ்வானம் மறைவதைப் பார்த்தும் தொழுகை நேரத்தை இன்று அறிகிறோமா? ஒருபோதுமில்லை. நாம் பார்ப்பது கடிகாரங்களைத்தான். பள்ளிவாசல்களில் தொழுகை நேரங்கள் என அட்டவனை யிட்டிருப்பதும் கடிகாரத்தின் நேரங்கள்தான். நினைவூட்டுதலின் நிமித்தமாக அந்த அட்டவனையில் தொழுகை நேரம் தொடர்பான ஹதீஸ்களைக் கூட பதித்துவைப்பதில்லை. நேரடியாகப் பார்ப்போமானால் இவ்வாறு செய்வது ஹதீஸுக்கு மாற்றமான செயலாகும். நபி(ஸல்) அவர்களும் நபித்தோர்களும் செயல்படுத்திக் காட்டிய ஒரு முறையைப் புறக்கணித்துவிட்டு வேறுமுறையைக் கையாளுவது குற்றமாகும்.

இன்னும் தெளிவாகச் சொல்வது என்றால் சந்திரனுக்காவது கணக்கு இருக்கிறது அதை வைத்து மனிதர்கள் ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும் என இறைவன் கூறியுள்ளான். ஆனால் பகல் இரவு மாறிமாறி வருவதை - பூமியின் சுழற்சியை மனிதர்களால் துல்லியமாகக் கணக்கிடமுடியாது என்றுதான் இறைவன் கூறுகிறான்.

என்ன வேடிக்கை! நீங்கள் கணக்கிட்டுக் கொள்ளலாம் என்று இறைவன் கூறிய சந்திரக் கணக்கை பின்தள்ளிவிட்டு உங்களால் துல்லியமாக கணக்கிட முடியாது என இறைவன் கூறியுள்ள பூமியின் சுழற்சியைக் கணக்கிட்டுக் கொண்டு இதுதான் சரி என்று எப்படிக் கூறமுடியும்.

ஸஹர் சாப்பிட்டு நோன்பைத் தொடங்குவதற்கும் இஃப்தார் நேரத்தில் நோன்பைத் துறப்பதற்கும் இன்று கடிகாரத்தைத் தான் பயன்படுத்துகிறோம். நபி(ஸல்) கடிகாரத்தைப் பயன் படுத்தினார்களா? அது தொடர்பாக நபி(ஸல்) கூறியுள்ள செய்தியைப் பாருங்கள்.

ابْنَ أَبِي أَوْفَى رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ كُنَّا مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي سَفَرٍ فَقَالَ لِرَجُلٍ انْزِلْ فَاجْدَحْ لِي قَالَ يَا رَسُولَ اللَّهِ الشَّمْسُ قَالَ انْزِلْ فَاجْدَحْ لِي قَالَ يَا رَسُولَ اللَّهِ الشَّمْسُ قَالَ انْزِلْ فَاجْدَحْ لِي فَنَزَلَ فَجَدَحَ لَهُ فَشَرِبَ ثُمَّ رَمَى بِيَدِهِ هَا هُنَا ثُمَّ قَالَ إِذَا رَأَيْتُمْ اللَّيْلَ أَقْبَلَ مِنْ هَا هُنَا فَقَدْ أَفْطَرَ الصَّائِمُ

رواه البخاري رقم الحديث 1941

நாங்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தோம். அப்போது இறைத்தூதர்(ஸல்) ஒருவரிடம், "(வாகனத்திலிருந்து) இறங்கி மாவை எனக்காகக் கரைப்பீராக!" என அவர்கள் கூறினார்கள்.

"இறைத்தூதர் அவர்களே! சூரியன்!" என்றார்.

மீண்டும் இறைத்தூதர்(ஸல்), ''இறங்கி எனக்காக மாவைக் கரைப்பீராக!" என்றார்கள்.

அப்போதும் அவர்,

"இறைத்தூதர் அவர்களே! சூரியன்!" என்றார்.

இறைத்தூதர்(ஸல்), "இறங்கி எனக்காக மாவைக் கரைப்பீராக!" என மீண்டும் கூறினார்கள். அவர் இறங்கி மாவைக் கரைத்தார். அதை இறைத்தூதர்(ஸல்) அருந்திவிட்டுத் தம் கையால் (கிழக்கே) சுட்டிக் காட்டினார்கள் பிறகு, 'இங்கிருந்து இரவு முன்னோக்கி வருவதை **நீங்கள் கண்டால்** நோன்பாளி நோன்பை நிறைவு செய்யலாம்! எனக் கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு அபீ அவ்ஃபா(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1941**

மேற்கண்ட ஹதீஸில் பிறைபார்ப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படி இருக்க எப்படி கடிகாரத்தைப் பார்க்கலாம் என்பதை நன்றாக யோசிக்க வேண்டும். நமக்கு ஒன்று தேவை என்றால் அதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதும் நமக்கு ஒன்று பிடிக்காது என்றால் கூச்சலிடுவதும் சரியான நிலைப்பாடு அல்ல...

(தூதரே!) அவர்களுக்கு நூஹின் சரித்திரத்தை ஓதிக் காண்பிப்பீராக! அவர் தம்முடைய சமூகத்தாரை நோக்கி, ''என் சமூகத்தாரே! நான் (உங்களிடையே) இருப்பதும், அல்லாஹ்வின் அத்தாட்சிகளை நான் நினைவூட்டுவதும் உங்களுக்குக் கடினமாய் இருக்குமானால், நான் அல்லாஹ்வையே முழுமையாய் நம்பியுள்ளேன்.

நீங்கள் இணைவைப்பவற்றையும், உங்களின் காரியங்களையும் ஒன்றிணைத்து, பின்னர் உங்களின் காரியங்கள் உங்களுக்கு மறைக்கப்படாததாய் இருக்கும் நிலையில் என் விஷயத்தில் தீர்ப்பளியுங்கள்; தாமதிக்க வேண்டாம்'' என்றார்.

**திருக்குர்ஆன் 10:71**

## அமாவாசை - Newmoon என்றால் என்ன ?

பூமி - சந்திரன் - சூரியன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும் நிலைதான் தமிழில் அமாவாசை என்றும் ஆங்கிலத்தில் Newmoon என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிகழ்வு மாதாமாதம் சந்திரனுக்கு ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது. அன்றைய தினம் சந்திரன் நம் பார்வையிலிருந்து மறைந் திருக்கும். இதைத்தான் ஹதீஸ்களில் **கபிய, உக்மிய, குப்பிய, கும்ம** போன்ற வார்த்தைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சந்திரன் கண்களுக்கு தெரியாத இந்த நாளை நடப்பு மாதத்தின் கணக்காக்கிக் கொள்ள இஸ்லாம் கூறுகிறது.

இந்த நாளில் நடைபெறும் இந்த நிகழ்வை நாம் வருடத்தில் இரண்டு முறை பார்க்கும் நிலை ஏற்படுகிறது. அதுதான் சூரிய கிரகணம் என்பதாகும். சூரிய கிரகணம் என்பது மாதத்தின் கடைசி நாளில் தான் நடக்கும். அதற்கு அடுத்த நாள் மாதத்தின் முதல் நாள் ஆகிவிடும்.

**'கும்ம'** என்பதற்கு மேக மூட்டம் என மொழிபெயர்க் கிறார்கள். உண்மையில் அது மேக மூட்டத்தைக் குறிக்காது. மேற்கண்ட வசனத்தில் அதே வார்த்தைப் பிரயோகம் உள்ளது. இங்கு மேக மூட்டம் என மொழிபெயர்க்க முடியுமா? பிறை தெரியாமல் இருப்பதற்கு மேக மூட்டம் காரணமல்ல. மேகம் மறைத்திருந் தாலும் அதனுள் பிறை இருக்கிறது என்பதை நாம் நன்றாகவே அறிவோம். நபி(ஸல்) குறிப்பிட்டுள்ள **'கும்ம'** என்ற வார்த்தை மறைவாக இருக்கும் அந்த நாளின் சந்திரனையும் நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள் என்பதைத்தான் குறிக்கிறது.

## தேய் பிறையிலிருந்து வளர்பிறையாக மாறுதல்

அமாவாசை அல்லது Newmoon எனக் கூறும் நாளை Conjunction என்றும் கூறுவர். இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்றால் பூமி சந்திரன் சூரியன் நேர் கோட்டிற்கு வந்த அடுத்த நொடியில் சந்திரன் புதிய மாதத் திற்கான சுற்றைத் தொடங்கிவிடுகிறது. இதை ஹதீஸ்களில் ஹிலால் ஷவ்வால் ஹிலால் ரமளான் எனக் குறிப்பிட்டு உள்ளதைக் காணமுடியும்.

இஸ்லாமிய அடிப்படையில் நமக்கு மாதத்தின் முதல் நாள் எது என்பதை அறிவதுதான் அத்தியாவசியமாய் இருக்கிறது.

عَنْ أَبِي الْبَخْتَرِيِّ قَالَ خَرَجْنَا لِلْعُمْرَةِ فَلَمَّا نَزَلْنَا بِبَطْنِ نَخْلَةَ قَالَ تَرَاءَيْنَا الْهِلَالَ فَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ ثَلَاثٍ وَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ لَيْلَتَيْنِ قَالَ فَلَقِينَا ابْنَ عَبَّاسٍ فَقُلْنَا إِنَّا رَأَيْنَا الْهِلَالَ فَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ ثَلَاثٍ وَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ لَيْلَتَيْنِ فَقَالَ أَيَّ لَيْلَةٍ رَأَيْتُمُوهُ قَالَ فَقُلْنَا لَيْلَةَ كَذَا وَكَذَا فَقَالَ إِنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ اللَّهَ مَدَّهُ لِلرُّؤْيَةِ فَهُوَ لِلَيْلَةٍ رَأَيْتُمُوهُ

**رواه مسلم رقم الحديث 1820**

*நாங்கள் உம்ராவுக்காக புறப்பட்டபோது பத்னு நக்லா என்னும் இடத்தில் இறங்கினோம். எங்களுக்கு பிறை தென்பட்டது. எங்களில் சிலர் அது* ***இப்னு ஸலாஸ்*** *- மூன்றாம் நாள் பிறை என்றனர். எங்களில் இன்னும் சிலர் அது* ***இப்னு லைலதய்ன்*** *- இரண்டாம் நாள் பிறை என்று கூறினர். நாங்கள் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களைச் சந்தித்து, நாங்கள் பிறை பார்த்தோம் எங்களில் சிலர், அது* ***இப்னு ஸலாஸ்*** *- மூன்றாம் நாள் பிறை என்றனர். இன்னும் எங்களில் சிலர் அது* ***இப்னு லைலதய்ன்*** *- இரண்டாம் நாள் பிறை எனக் கூறினர் என்பதைத் தெரிவித்தோம். நீங்கள் எந்த நாளில் அதைப்பார்த்தீர்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) கேட்டார்கள். நாங்கள் அதை இன்ன இன்ன நாளில் பார்த்தோம் எனக் கூறினோம். அதற்கு அவர்கள், நிச்சயமாக அதைப்பார்ப்பதற்காக அல்லாஹ் நீட்டிருக்கிறான். நீங்கள் அதை எந்த நாளில் பார்த்தீர்களோ அது அதற்குரியதுதான் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என தெரிவித்தார்கள்.*

***அறிவித்தவர்: அபுல் பக்தரீ***
***நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1820***

*மேற்கண்ட ஹதீஸை நாம் ஆராயும்போது ஒவ்வொரு பிறையும் ஒரு கிழமைக்கான தேதி என்பது தெளிவாகிறது. அதுவும் எந்தக் கிழமையில் நாம் அதைப் பார்க்கிறோமோ அது அந்த நாளுக்குரிய தேதியாகும். மாதத்தின் கடைசி நாளில் நாம் பார்க்கும் பிறை அந்த மாதத்தின் கடைசி நாளான அந்தக் கிழமையின் தேதியாகும். உதாரணமாக மாதம் வெள்ளிக்கிழமையில் முடிவடைந்தால் அது வெள்ளிக் கிழமைக்குரிய தேதியாகும்.*

தேய் பிறையிலிருந்து வளர் பிறையாக மாறும் தருணத்தில் சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் நேர் கோட்டில் வருகின்றன. இதற்கு ஆங்கிலத்தில் Conjunction என்பர் மூன்றும் ஒரே நேர் கோட்டில் சில விநாடிகள் மட்டும் இருக்கின்றன. கடிகாரத்தில் 12 மணிக்கு மூன்று முற்களும் ஒரே இடத்தில் சங்கமிக்கின்றன. இதற்கும் Conjunction என்றுதான் சொல்லப்படும். ஒன்றிணைந்த மூன்று முற்களும் இரண்டு நாள்கள் ஒரே இடத்தில் நின்று கொள்வதில்லை. அப்படி நின்று கொண்டால் அதை நாம் கடிகாரம் எனக் கூறவும் மாட்டோம். இவ்வாறுதான் சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வந்து இரண்டு நாள்கள் அப்படியே நின்றுவிடுவதில்லை. சந்திரனும், பூமியும் நகன்று கொண்டே இருக்கின்றன. நகன்ற அடுத்த கணம் பிறைபிறந்து அடுத்த மாதத்திற்கான சுற்றை ஆரம்பிக்கிறது. இந்த நிலையைத் திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

இன்னும், சந்திரன் ஒளி மங்கி,
சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப்பட்டுவிடும்.

**திருக்குர்ஆன் 75:8,9**

இதை நாம் கணக்கின் அடிப்படையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் 29 ஆம் நாளில் இது நடந்தால் 29 ல் மாதம் முடிவடைகிறது. இது 30 ஆம் நாளில் நடந்தால் மாதம் 30 ல் முடிவடைகிறது. அன்று பிறை பார்த்தாலும் அதை முப்பதாவது நாள் பிறையாகத்தான் கணக்கிட வேண்டும். அடுத்த மாதத்தின் முதல் பிறையாகக் கணக்கிடக் கூடாது. எனவே, அமாவாசையை அல்லது New moon னை முதல் பிறை என்று சொல்வதில்லை. மாறாக அது கடைசி நாளுக்குரிய பிறை என்றுதான் கூறுகிறோம்.

## ஹிஜ்ரா காலண்டரின் வரலாறு

ஹிஜ்ரா காலண்டர் சந்திரக் காலண்டர் விதியின்படி உள்ளதாகும். சந்திரக் காலண்டரை உலகம் தோன்றிய காலம் முதலே அல்லாஹ் ஏற்படுத்திவிட்டான். ஒவ்வொரு சாம்ராஜ்யத்தையும் குறிப்பதற்காக அவரவர் ஒரு முக்கிய நிகழ்வு அல்லது மறுமலர்ச்சியை அடிப்படையாக வைத்துப் பெயரிடுவதும், குறிப்பதும் வழக்கம். உதாரணத்திற்கு கிருத்தவர்களால் உருவாக்கப்பட்ட காலண்டரை கிரிகோரியன் காலண்டர் என அழைக்கிறார்கள். போப் கிரிகோரி என்பவர்தான் இந்தக்

காலண்டரிலிருந்த பெரும் தவறுகளை ஓரளவிற்குச் மாற்றிக் கொடுத்தார். எனவே இதற்கு கிரிகோரியன் காலண்டர் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய சாம்ராஜ்யத்திற்கு திருப்புமுனையாக நபி(ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் அமைந்தது. எனவே இதன் நினைவார்த்த மாகவும், இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்காகவும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாம் கலீஃபா உமர் இப்னு அல் கத்தாப்(ரலி) ஹிஜ்ரா காலண்டர் என இதற்குப் பெயரிட்டார். அன்று முதல் இது ஹிஜ்ரா காலண்டர் என அழைக்கப்படுகிறது.

இந்தக் காலண்டரின் முதல் நாள் 01.01.0001 AH வியாழக்கிழமை (15.07.622) ஆகும். அன்றைய தினத்திற்கு முந்தைய தினமான புதன் கிழமை அமாவாசை New moon - Conjunction நிகழ்ந்த தினமாகும்.

## கணக்கை வலியுறுத்தும் ஹதீஸ்கள்

عن ابْنَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ إِنَّا أُمَّةٌ أُمِّيَّةٌ لَا نَكْتُبُ وَلَا نَحْسُبُ الشَّهْرُ هَكَذَا وَهَكَذَا يَعْنِي مَرَّةً تِسْعَةً وَعِشْرِينَ وَمَرَّةً ثَلَاثِينَ

رواه البخاري1913

""மாதம் இப்படியும் இப்படியுமாய் இருக்கிறது. நாமோ உம்மி சமுதாயம்; (வானஇயற்பியல்படி) எழுதுவதையும், கணக்கிடுவதையும் நாம் அறிந்திருக்கவில்லை. அதாவது சில வேளை இருபத்தொன்பது நாள்களாகவும் சில வேளை முப்பது நாள்களாகவும் இருக்கிறது!" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். **அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1913**

عَنْ النَّوَّاسِ بْنِ سَمْعَانَ ضي الله عنه...

قَالَ ذَكَرَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الدَّجَّالَ ذَاتَ غَدَاةٍ...

قُلْنَا يَا رَسُولَ اللَّهِ وَمَا لَبْثُهُ فِي الْأَرْضِ قَالَ أَرْبَعُونَ يَوْمًا يَوْمٌ كَسَنَةٍ وَيَوْمٌ كَشَهْرٍ وَيَوْمٌ كَجُمُعَةٍ وَسَائِرُ أَيَّامِهِ كَأَيَّامِكُمْ قُلْنَا يَا رَسُولَ اللَّهِ فَذَلِكَ الْيَوْمُ الَّذِي كَسَنَةٍ

أَتَكْفِينَا فِيهِ صَلَاةُ يَوْمٍ قَالَ لَا اقْدُرُوا لَهُ قَدْرَهُ...

رواه مسلم رقم الحديث 5228

*ஒரு நாள் காலை தஜ்ஜால் குறித்து இறைத்தூதர்(ஸல்) கூறியபோது...*

*"இறைத்தூதர் அவர்களே! அவன் பூமியில் எவ்வளவு காலம் வசிப்பான்" என நாங்கள் கேட்டோம்.*

*"நாற்பது நாள்கள்; ஒரு நாள் ஓர் ஆண்டு போலவும், இன்னொரு நாள் ஒரு மாதம் போலவும், இன்னொரு நாள் ஒரு வாரம் போலவும், மற்ற எல்லா நாள்களும் உங்களின் சாதரண நாள்கள் போலவும் இருக்கும்" எனக் கூறினார்கள்.*

*"இறைத்தூதர் அவர்களே! ஓர் ஆண்டு போல இருக்கும் அந்நாளில் நாங்கள் ஒரு நாளுக்குரிய தொழுகை தொழுதால் போதுமா?" என நாங்கள் கேட்டோம்.*

*"இல்லை; அதைச் சரியாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்" எனக் கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அந்நவ்வாஸ் இப்னு ஸம்ஆன்(ரலி)***
***நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 5228***

**عَنْ رِبْعِيِّ بْنِ حِرَاشٍ عَنْ رَجُلٍ مِنْ أَصْحَابِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اخْتَلَفَ النَّاسُ فِي آخِرِ يَوْمٍ مِنْ رَمَضَانَ فَقَدِمَ أَعْرَابِيَّانِ فَشَهِدَا عِنْدَ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ بِاللَّهِ لَأَهَلَّا الْهِلَالَ أَمْسِ عَشِيَّةً فَأَمَرَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ النَّاسَ أَنْ يُفْطِرُوا. رواه ابو داؤد 1992**

*ரமளானின் கடைசி நாளில் (இது கடைசி நாளா இல்லையா என்பதில்) மக்கள் கருத்துவேறுபட்டு இருந்தார்கள். அப்போது நபி(ஸல்) அவர்களிடம் இரண்டு கிராமவாசிகள் முன்வந்து நேற்று இரவு நாங்கள் பிறை பார்த்ததாக அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து சாட்சியளித்தார்கள். எனவே நோன்பை விட்டுவிடுமாறு நபி(ஸல்) மக்களுக்கு கட்டளையிட்டார்கள்.*

***அறிவித்தவர்: ரிப்யீ இப்னு ஹிராஷ்***
***நூல்: அபூ தாவூத் 1992***

عَــنْ عَبْــدِ اللَّــهِ بْــنِ عُمَــرَ رَضِــيَ اللَّــهُ عَنْهُمَــا أَنَّ رَسُــولَ اللَّــهِ صَــلَّى اللَّــهُ عَلَيْــهِ وَسَــلَّمَ قَــالَ الشَّــهْرُ تِسْــعٌ وَعِشْــرُونَ لَيْلَــةً فَلَــا تَصُــومُوا حَتَّــى تَــرَوْهُ فَــإِنْ غُــمَّ عَلَيْكُــمْ فَــأَكْمِلُوا الْعِــدَّةَ ثَلَــاثِينَ. رواه البخاري رقم الحــديث 1774

''மாதம் இருபத்தி ஒன்பது நாள்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. எனவே, அதைக் காணாதவரை நோன்பு நோற்காதீர்கள். அது உங்களுக்கு மறைக்கப்பட்டிருந்தால் எண்ணிக்கையை முப்பதாகப் பூர்த்தியாக்குங்கள்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1774**

عَــنْ عَبْــدِ اللَّــهِ بْــنِ عُمَــرَ رَضِــيَ اللَّــهُ عَنْهُمَــا قَــالَ قَــالَ رَسُــولُ اللَّــهِ صَــلَّى اللَّــهُ عَلَيْــهِ وَسَــلَّمَ الشَّــهْرُ تِسْــعٌ وَعِشْــرُونَ فَــإِذَا رَأَيْتُــمْ الْهِلَــالَ فَصُــومُوا وَإِذَا رَأَيْتُمُــوهُ فَــأَفْطِرُوا فَــإِنْ غُمَّ عَلَيْكُــمْ فَاقْــدِرُوا لَــهُ رواه مســلم رقــم الحــديث1798

மாதம் இருபத்தி ஒன்பது நாள்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. எனவே, பிறையைப் பார்த்தால் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள். இன்னும் அதை நீங்கள் பார்த்தால் நோன்பைத் துறந்து கொள்ளுங்கள். உங்களுக்கு மூடப்பட்டிருந்தால் அதை கணக்கிட்டுக் கொள்ளுங்கள் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**
**நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1798**

عَنْ ابْنِ عَبَّاسٍ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ أَتَــانِي جِبْرِيــلُ عَلَيْهِ السَّلَام فَقَالَ الشَّهْرُ تِسْعٌ وَعِشْرُونَ يَوْمًا رواه النسائي2104

''என்னிடம் ஜிப்ரீல்(அலை) வந்து இந்த மாதம் 29 நாள்கள் எனக் கூறினார்கள்'' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு அப்பாஸ்(ரலி)**
**நூல்: நஸாயீ, ஹதீஸ் எண்: 2104**

## நாளின் ஆரம்பம்

நாளின் ஆரம்பம் இரவு பனிரெண்டு மணிக்குத்தான் என பொதுவாக அனைத்துத் தரப்பு மக்களும் நம்புகிறார்கள். மக்ரிப் நேரத்தில்தான் நாள் ஆரம்பிக்கிறது என முஸ்லிம்கள் நம்புகிறார்கள். ஃபஜ்ர் நேரத்தில்தான் நாள் ஆரம்பிக்கிறது என முஸ்லிம்களில் சிலர் கூறுகிறார்கள். இவற்றில் எது சரியானது என்பதைக் காணவேண்டும்.

இரவு பனிரெண்டு மணிக்குத்தான் நாள் ஆரம்பிக்கிறது என்பதற்கு இஸ்லாமிய ஆதாரங்களோ இதர வேதங்களின் ஆதாரங்களோ, அறிவியல் ஆதாரங்களோ இல்லை. அன்று உலகை தன் கைக்குள் வைத்திருந்த பிரிட்டன், இதை மிகச் சூழ்ச்சியாகச் செய்து கொண்டது.

நாள் மக்ரிப் நேரத்தில்தான் ஆரம்பிக்கிறது என்பதற்கு திருக்குர்ஆனிலோ ஹதீஸிலோ எந்த ஆதாரமும் இல்லை. பலவீனமான ஹதீஸையும் சில வரலாற்றுச் சம்பவங்களையும் வைத்துக் கொண்டு நாள் மக்ரிப் நேரத்தில்தான் ஆரம்பிக்கிறது என தவறாக விளங்கியுள்ளார்கள். அவர்கள் எடுத்து வைக்கும் ஆதாரம் மற்றும் வாதங்களை முதலில் பார்ப்போம்.

“நபிகள் நாயகம் காலம் முதல் இன்று வரை முஸ்லிம் சமுதாயத்தில் மக்ரிப்தான் நாளின் துவக்கம் என்பது கருத்துவேறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.”

ஒரு செயலை சமுதாயம் தொடர்ந்து செய்து வருவதால் அது இஸ்லாமிய பார்வையில் இறைவன் அல்லது இறைத்தூதர் அளித்த ஆதாரமாகிவிடாது. மார்க்கம் என்ற பெயரில் எந்தச் செயல் செய்தாலும் அதற்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸில் ஆதாரம் இருக்க வேண்டும். ஆதாரமில்லாமல் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மறுக்கப்பட்டதாகும். எனவே இதை ஆதாரமாக எடுக்கவே முடியாது.

### அவர்கள் முன்வைத்துள்ள வாதம்: 1

லைலத்துல் கத்ர் இரவு பற்றி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் யார் விளக்கம் கேட்பது என்று பேசிக்கொண்டோம். இது ரமளான் மாதம் 21 ஆம் நாள் காலையில் நடந்தது. நான் புறப்பட்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுடன் மக்ரிப் தொழுகையில் பங்கு கொண்டேன். லைலத்தல் கத்ர் இரவு பற்றி கேட்டு வர என்னை பனூ ஸலமா கூட்டத்தினர்

அனுப்பியதைத் தெரிவித்தேன். இது எத்தனையாவது இரவு என்று நபி(ஸல்) கேட்டனர். 22 ஆம் இரவு என்று நான் குறிப்பிட்டேன். இதுதான் அந்த இரவு என்று நபிகள் நாயகம்(ஸல்) கூறினார்கள். பின்னர் திரும்பி வந்து அடுத்த இரவும் எனக் கூறி 23 ஆம் இரவைக் குறிப்பிட்டனர்.

**நூல்: அபூ தாவூத் 1171**

அப்துல்லாஹ் பின் உனைஸ்(ரலி), 21 ஆம் நாள் காலையில் புறப்பட்டு மக்ரிபை அடைகிறார். நாளின் ஆரம்பம் சுப்ஹுதான் என்றால் அன்றைய மக்ரிபை 21 ஆம் நாள் மக்ரிப் என்று கூறவேண்டும். ஆனால், 22 ஆம் நாள் மக்ரிப் என்று கூறுகிறார். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் அதை அங்கீகரிக்கிறார்கள். இதிலிருந்தது மக்ரிப்தான் நாளின் துவக்கம் என்பதை சந்தேகமற அறியலாம்.

**விமர்சனம்:**

حَدَّثَنَا أَحْمَدُ بْنُ حَفْصِ بْنِ عَبْدِ اللَّهِ السُّلَمِيُّ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ طَهْمَانَ عَنْ عَبَّادِ بْنِ إِسْحَقَ عَنْ مُحَمَّدِ بْنِ مُسْلِمٍ الزُّهْرِيِّ عَنْ ضَمْرَةَ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ أُنَيْسٍ عَنْ أَبِيهِ قَالَ كُنْتُ فِي مَجْلِسِ بَنِي سَلَمَةَ وَأَنَا أَصْغَرُهُمْ فَقَالُوا مَنْ يَسْأَلُ لَنَا رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنْ لَيْلَةِ الْقَدْرِ وَذَلِكَ صَبِيحَةَ إِحْدَى وَعِشْرِينَ مِنْ رَمَضَانَ فَخَرَجْتُ فَوَافَيْتُ مَعَ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ صَلَاةَ الْمَغْرِبِ ثُمَّ قُمْتُ بِبَابِ بَيْتِهِ فَمَرَّ بِي فَقَالَ ادْخُلْ فَدَخَلْتُ فَأُتِيَ بِعَشَائِهِ فَرَآنِي أَكُفُّ عَنْهُ مِنْ قِلَّتِهِ فَلَمَّا فَرَغَ قَالَ نَاوِلْنِي نَعْلِي فَقَامَ وَقُمْتُ مَعَهُ فَقَالَ كَأَنَّ لَكَ حَاجَةً قُلْتُ أَجَلْ أَرْسَلَنِي إِلَيْكَ رَهْطٌ مِنْ بَنِي سَلَمَةَ يَسْأَلُونَكَ عَنْ لَيْلَةِ الْقَدْرِ فَقَالَ كَمْ اللَّيْلَةُ فَقُلْتُ اثْنَتَانِ وَعِشْرُونَ قَالَ هِيَ اللَّيْلَةُ ثُمَّ رَجَعَ فَقَالَ أَوْ الْقَابِلَةُ يُرِيدُ لَيْلَةَ ثَلَاثٍ وَعِشْرِينَ

அவர்கள் கூறும் ஹதீஸின் அரபு வாசகம் மேலே தரப் பட்டுள்ளது. இதில் இடம்பெறும் அப்பாத் இப்னு இஸ்ஹாக் என்பவர் குறித்து பல விமர்சனங்கள் உள்ளன.

1. இமாம் புகாரீ: இவரின் மனனச் சக்தியை யாரும் நம்புவ தில்லை. இவருக்கு அடுத்து வரும் அறிவிப்பாளர்கள் இவருக்கு மாற்றமானதைத் தெரிவித்தால் இவரின் கருத்தை எடுக்கக் கூடாது. மதீனாவாசிகளிடம் இவர் குறித்து நான் கேட்டதற்கு யாரும் அவரை சிறப்பாகச் சொல்லவில்லை. இவருக்கென்று மூஸா அஸ்ஸம்யீ தவிர வேறு யாரும் இவருக்கு மாணவர்கள் இருப்பதாக அறியப்படவில்லை என இஸ்ஹாக் இப்னு இப்ராஹீம் கூறினார். மூஸா அஸ்ஸம்யீ மூலம் சில செய்திகள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அதில் நிறைய குழப்பங்கள் இருக்கின்றன.

2. அத் தாரு குத்னீ: இவரை ளயீஃப் எனக்குறிப்பிடுகிறார். இவர் கத்ரிய்யாக் கொள்கையுடையவர் என்றும் சுட்டப் பட்டுள்ளார்.

3. அத் தஹபி பில் காஷிஃப்: இவர் கத்ரிய்யா கொள்கை உடையவர்; ஆனால் இவர் பலமானவர்தான் என அபூ தாவூத் குறிப்பிடுகிறார். சிலர் இவரை ளயீஃப் ஆனவர் - பலவீனமானவர் எனக்குறிப்பிடுகிறார்கள். இவருடைய ஞாபகத் திறனில் நம்பிக்கை வைப்பதில்லை என இமாம் புகாரீ குறிப்பிடுகிறார்.

4. அலீ இப்னு அல் முதீனீ: இவர் கத்ரிய்யா கொள்கைக்காரர்; இவரிடமிருந்து மதீனாவாசிகள் யாரும் ஹதீஸ் பெற்றதில்லை.

5. அந்நஸாயீ: பிரச்சினை இல்லை; இவர் குறித்து யஹ்யா அல் கத்தான் எந்தக் கருத்தும் கூறவில்லை.

6. அஹ்மத் இப்னு அப்தில்லாஹ் அல் அஜலீ: இவர் ஹதீஸ் களை எழுதுவார். ஆனால் அவர் உறுதியானவர் அல்லர்.

7. இப்னு ஹஜர்: இவர் ளயீஃப் பலவீனமானவர்; இவரிடம் கத்ரிய்யா கொள்கைக் காணப்படுகிறது.

இவ்வளவு பிரச்சினைகளைத் தாங்கிய ஒரு பலவீனமான ஹதீஸைத்தான் ஆதாரமாக முன் வைக்கிறார்கள். எடுத்து வைக்கிறார்கள். நாளின் ஆரம்பம் எவ்வளவு முக்கியமானது? அதில் இவ்வாறு பலவீனர் இடம் பெற்றுள்ள சம்பவத்தைக் கொடுக்கலாமா? எனவே இதை ஆதாரமாக எடுக்கமுடியாது.

ஒரு வாதத்திற்கு இந்த ஹதீஸ் சரியானது என வைத்துக் கொண்டாலும், அப்துல்லாஹ் இப்னு உனைஸ்(ரலி) பனூ ஸலமா கூட்டத்திடம் பேசிய 21 ஆம் நாளின் மாலையே நபி(ஸல்) அவர்களைச் சந்தித்தார் என்பதை உறுதி செய்ய முடியாது. அவர் மறுநாள் நபி(ஸல்) அவர்களைச் சந்தித்திருக் கலாம். அது மட்டுமல்லாமல் இந்த ஹதீஸில் இடம்பெற்றுள்ள **'லைலதுன்'** என்னும் வாத்தைக்கு நாள் என்று பொருள் இரவு என்ற பொருள் அல்ல. எனவே லைலத்துன் என்பதற்கு நாள் என மொழிபெயர்த்துப் பாருங்கள் எல்லாம் தெளிவாகிவிடும்.

### வாதம்: 2

திங்கள் கிழமை இரவு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்காக தண்ணீரில் பேரீட்சம் பழத்தை நாங்கள் ஊறவைப்போம். அதை திங்கள் கிழமையும், செவ்வாய்கிழமை அஸர் வரையும் அருந்துவார்கள். **நூல்: முஸ்லிம் 3740**

நாளின் துவக்கம் சுப்ஹு என்றால் திங்கள் இரவு ஊற வைத்ததை செவ்வாய் அன்றுதான் அருந்த முடியும் திங்கள் அன்று அருந்த முடியாது. திங்கள் அன்று ஊறவைத்ததை திங்கள் கிழமை ஊறவைத்ததை திங்கள் கிழமை அருந்து வார்கள் என்ற சொற்தொடரிலிருந்து நாளின் துவக்கம் சுப்ஹு அல்ல என்பதை அறியலாம்.

நாளின் ஆரம்பம் மக்ரிப் என நபி(ஸல்) குறிப்பிட்டதாகவோ அங்கீகரித்ததாகவோ எந்த வாசகமும் மேற்கண்ட ஹதீஸில் இடம்பெறவில்லை. நபி(ஸல்) அவர்களின் செயல்பாட்டை இப்னு அப்பாஸ்(ரலி) விளக்குவதாகவும் இங்கு வாசகம் இல்லை. ஷுஅபா என்பவர் கூறுவதாகத்தான் வாசகம் இருக்கிறது. ஷுஅபா ஹிஜ்ரி 160 ல் இறந்தவர். அவர் நபி(ஸல்) அவர்களை குடிக்கும்போது பார்த்தாரா? அந்த ஹதீஸின் வாசகம் இங்கு தரப்படுகிறது பாருங்கள்.

**حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ بَشَّارٍ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ يَحْيَى الْبَهْرَانِيِّ قَالَ ذَكَرُوا النَّبِيذَ عِنْدَ ابْنِ عَبَّاسٍ فَقَالَ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يُنْتَبَذُ لَهُ فِي سِقَاءٍ قَالَ شُعْبَةُ مِنْ لَيْلَةِ الِاثْنَيْنِ فَيَشْرَبُهُ يَوْمَ الِاثْنَيْنِ وَالثُّلَاثَاءِ إِلَى الْعَصْرِ فَإِنْ فَضَلَ مِنْهُ شَيْءٌ سَقَاهُ الْخَادِمَ أَوْ صَبَّهُ**

அப்படியே இப்னு அப்பாஸ் இந்த வாசகத்தைக் கூறியிருந்

தாலும் அதில் நபி(ஸல்) அவர்களின் எந்த வார்த்தையும் இடம்பெறவில்லை. இப்னு அப்பாஸ் இப்படிக் குறிப்பிடுவதில் ஒன்றும் ஆச்சரியம் இருக்கமுடியாது. காரணம், யூதர்கள் மதீனாவில் பெருமளவு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள்தான் நாளை மக்ரிப்பிலிருந்து ஆரம்பித்து வந்தார்கள். இன்றும் யூதர்கள்தான் மக்ரிபிலிருந்துதான் நாளை ஆரம்பிக்கிறார்கள். அந்த வழக்கப்படி வார்த்தைகள் புழக்கத்தில் இருந்தன.

அப்படியே திங்கள் செவ்வாய் என்பதை ஏற்றுக் கொண்டாலும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல **'லைலத்துன்'** என்பது இரவு அல்ல. நாள்தான் என்பதை அறியவேண்டும். அப்படியானால், திங்கள் கிழமை நாளில் ஊறவைத்து திங்கள் கிழமை நாளிலும் செவ்வாய் கிழமை நாளிலும் குடித்தார்கள் என்றுதான் விளங்கவேண்டும்.

ஸஹாபாக்கள் சொன்னதும் செய்ததும் மார்க்கம் ஆகாது என கூறிவருகிறவர்கள் அவர்கள் செயல்களையே மார்க்க ஆதாரமாக முன்வைக்கிறார்கள். இதை எவ்வாறு ஆதாரமாக எடுக்கமுடியும் என்பதை அவர்களே யோசிக்கட்டும்.

அவர்களின் வாதத்தில் ஒரு பொய்யான வார்த்தை கலந்து உள்ளதையும் கவனிக்கவேண்டும். நாளின் ஆரம்பம் ஃபஜ்ர் என்றுதான் நாங்கள் சொல்கிறோமே தவிர வாதத்தில் கூறப்படுவதுபோல் சுப்ஹு எனச் சொல்லவில்லை. ஏனெனில் சூரியன் உதிக்கும் நேரமும் சுப்ஹு எனப்படும்.

### வாதம்: 3

حَدَّثَنَا إِسْمَاعِيلُ قَالَ حَدَّثَنِي مَالِكٌ عَنْ يَزِيدَ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ الْهَادِ عَنْ مُحَمَّدِ بْنِ إِبْرَاهِيمَ بْنِ الْحَارِثِ التَّيْمِيِّ عَنْ أَبِي سَلَمَةَ بْنِ عَبْدِ الرَّحْمَنِ عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ يَعْتَكِفُ فِي الْعَشْرِ الْأَوْسَطِ مِنْ رَمَضَانَ فَاعْتَكَفَ عَامًا حَتَّى إِذَا كَانَ لَيْلَةَ إِحْدَى وَعِشْرِينَ وَهِيَ اللَّيْلَةُ الَّتِي يَخْرُجُ مِنْ صَبِيحَتِهَا مِنْ اعْتِكَافِهِ قَالَ مَنْ كَانَ اعْتَكَفَ مَعِي فَلْيَعْتَكِفْ الْعَشْرَ الْأَوَاخِرَ وَقَدْ أُرِيتُ هَذِهِ اللَّيْلَةَ ثُمَّ أُنْسِيتُهَا وَقَدْ رَأَيْتُنِي أَسْجُدُ فِي مَاءٍ وَطِينٍ مِنْ صَبِيحَتِهَا فَالْتَمِسُوهَا فِي الْعَشْرِ الْأَوَاخِرِ وَالْتَمِسُوهَا فِي كُلِّ وِتْرٍ فَمَطَرَتْ السَّمَاءُ تِلْكَ اللَّيْلَةَ وَكَانَ الْمَسْجِدُ

عَلَى عَرِيشٍ فَوَكَفَ الْمَسْجِدُ فَبَصُرَتْ عَيْنَايَ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى جَبْهَتِهِ أَثَرُ الْمَاءِ وَالطِّينِ مِنْ صُبْحِ إِحْدَى وَعِشْرِينَ

இறைத்தூதர்(ஸல்) ரமளானில் நடுப்பத்து நாள்களில் இஃதிகாஃப் இருந்தார்கள். ஓர் ஆண்டு அவர்கள் இஃதிகாஃப் இருந்து இருபத்தி ஒன்றாவது நாளை அடைந்ததும். அந்நாளின் காலைதான் இஃதிகாபிலிருந்து வெளியேறினார்கள்.

‘‘என்னுடன் இஃதிகாஃப் இருந்தவர்கள் கடைசிப் பத்து நாள்களிலும் இஃதிகாஃப் இருக்கட்டும்! அந்த நாள் எனக்குக் காட்டப்பட்டது; பின்னர் அது எனக்கு மறக்கடிக்கப்பட்டு விட்டது! காலை நேரத்தில் ஈரமான மண்ணில் நான் ஸஜ்தா செய்யக் கண்டேன். எனவே, அதைக் கடைசிப் பத்து நாள்களில் தேடுங்கள். ஒவ்வொரு ஒற்றைப் படையிலும் அதைத் தேடுங்கள்!’ எனக் கூறினார்கள். அன்று மழை பொழிந்தது. அன்றைய பள்ளிவாசல் கூரை வேயப்பட்டதாய் இருந்தது. எனவே, பள்ளிவாசல் ஒழுகியது. இருபத் தொன்றாம் நாள் ஸுப்ஹுத் தொழுகையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நெற்றியிலே ஈரமான களிமண் படிந்திருந் ததை என்னுடைய இரண்டு கண்களும் பார்த்தன.

**அறிவித்தவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 2027**

மேற்கண்ட ஹதீஸை நாளின் ஆரம்பம் மக்ரிப் என்பதற்கு ஆதரமாக வைக்கின்றனர். இஃதிகாஃப் தொடர்பான எல்லா ஹதீஸ்களை ஒன்றிணைத்துப் பார்க்க வேண்டும் அப்போது தான் சரியான தெளிவு கிடைக்கும். இது தொடர்பான அதிகப்படியான விளக்கங்களைப்பெற முன்பக்கத்தில் உள்ள எங்கள் இணையதளங்களைக் காண்க.

நாளின் ஆரம்பம் மக்ரிப் என்றால் நபி(ஸல்) மக்ரிப்பில்தான் பள்ளிக்கு இஃதிகாஃப் இருக்கச் சென்றிருக்க வேண்டும். அவ்வாறே மக்ரிப்பில்தான் வெளியேறி இருக்கவேண்டும். ஆனால் இஃதிகாஃப் இருப்பதற்காக நபி(ஸல்) ஃபஜரில்தான் பள்ளிக்கு வந்தார்கள். அவ்வாறே இஃதிகாஃப் முடித்துவிட்டு ஃபஜ்ரில்தான் வெளியேறினார்கள். இதன் மூலம் நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் என்பது தெளிவாகிறது.

# நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் என்பதற்கு நாம் முன்வைக்கும் ஆதாரங்கள்.

## ஆதராாம்: 1

*அதிகாலையின் (ஃபஜ்ரின்) மீது சத்தியமாக! பத்து நாள்களின் மீது சத்தியமாக! இரட்டையின் மீதும், ஒற்றையின் மீதும் சத்தியமாக! செல்கிற இரவின் மீதும், சத்தியமாக! அறிவுடை யோருக்கு இதில் சத்தியம் இருக்கிறதல்லவா?*

**திருக்குர்ஆன் 89:1-5**

*மேற்கண்ட வசனங்களில் பத்து நாள்களின் மீது இறைவன் சத்தியம் செய்கிறான். அவை துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாள்கள் என பல விரிவுரைகளில் கூறப்பட்டுள்ளது. நபி(ஸல்) அவர்களும் தெளிவான விளக்கத்தை அளித்துள்ளார்கள்.*

**عن جابر رضي الله عنه: قال رسول الله صلى الله عليه وسلم: وَالْفَجْرِ وَلَيَـــالٍ عَشْرٍ ، قَالَ : عَشْرُ الأَضْحَى ، وَالْوِتْرُ يَوْمُ عَرَفَةَ ، وَالشَّـــفْعُ يَـــوْمُ النَّحْـــرِ**

**السنن الكبرى للنسائي رقم الحـــديث: 11222**

*“அதிகாலையின் மீதும், பத்து நாள்களின் மீதும் சத்தியமாக என்பதற்கு, பத்து என்றால் அல் அள்ஹா - துல் ஹஜ் மாதத்தின் பத்தாம் நாள், ஒற்றை என்றால் அரஃபா நாள், இரட்டை என்றால் அறுத்துப் பலியிடும் நாள்” என இறைத் தூதர்(ஸல்) கூறினார்கள்.*

**அறித்தவர்: ஜாபிர்(ரலி)    நூல்: சுனனம் அல் குப்ரா லிந் நஸாயீ**

*இந்த வசனங்களில் ஃபஜ்ரின் மீதும், பத்து நாள்களின் மீதும் அல்லாஹ் சத்தியம் செய்கிறான். ஃபஜ்ரைத் தொடர்ந்து வரும் இரவின் மீதும் அல்லாஹ் சத்தியம் செய்கிறான். அப்படி யானால் பகல்தான் முதல் அதைத் தொடர்ந்து செல்கிற இரவு இரண்டாவது என்பது தெளிவாகிறது. இதன்படி ஃபஜ்ர்தான் நாளின் ஆரம்பம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.*

## ஆதாரம்: 2

*சூரியன் சந்திரனை பிடிக்க முடியாது; இரவு பகலை முந்த முடியாது. இவ்வாறே ஒவ்வொன்றும் தன் சுழற்சிப் பாதையில்* (Orbits) *நீந்திச்செல்கின்றன.* **திருக்குர்ஆன் 36:40**

*சூரியன் சந்திரனை அடையமுடியாது என இங்கு கூறப்படு வதால் அவை இரண்டும் ஒரே சுழற்விப் பாதையில்* (Orbit)

செல்வதாக நினைத்தால் அது தவறாகும். சந்திரனுக்கென தனி சுழற்சி பாதை உள்ளது. எனவே, சூரியன் சந்திரனின் சுழற்சிப் பாதையில் வரவே முடியாது என்பதைத்தான் வசனத்தின் முதல் பகுதி கூறுகிறது. அதே நேரத்தில் பூமியின் சுழற்சிப் பாதை ஒன்றுதான். யூமி தன்னுடைய அச்சில் சுழல்வதால் பகல் இரவு ஏற்படுகிறது. எனவே, இங்கு இரவு முதலில் ஆரம்பமா? பகல் முதலில் ஆரம்பமா என்ற கேள்வி எழுகிறது. மேற்கண்ட வசனத்தில் அல்லாஹ் தெளிவாகச் சொல்கிறான். இரவு பகலை முந்தமுடியாது. அப்படியானால் பகல் முன்னால் சென்றுகொண்டிருக்கிறது; இரவு அதைத் தொடர்ந்து பின்னால் சென்றுகொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. எனவே, ஃபஜ்ர்தான் நாளின் ஆரம்பம் என்பது தெளிவு.

## ஆதாரம்: 3

*சூரியன் மீதும், அதன் ஒளியின் மீதும் சத்தியமாக! அதைத் தொடர்ந்து வரும் சந்திரனின் மீதும் சத்தியமாக! பகல் வெளியாகும்போது, அதன் மீதும் சத்தியமாக! இரவு மூடிக்கொள்ளும் போது. அதன் மீதும் சத்தியமாக!*

**திருக்குர்ஆன் 91:1-4**

மேற்கண்ட வசனங்களில் பகல் வெளியாகிறது இரவு அதை மூடிக்கொள்கிறது என அல்லாஹ் கூறுகிறான். வெளிப் பட்டிருப்பதுதான் ஆரம்பம் அதை மூடுவது இரண்டாவது என்பது இங்கே தெளிவாகிறது.

## ஆதாரம்: 4

*அல்ல, சந்திரன் மீதும் சத்தியமாக! பின்தொடரும் இரவின் மீதும் சத்தியமாக! வெளிச்சமாகும் விடியற்காலையின் மீது சத்தியமாக!* **திருக்குர்ஆன் 74:32-34**

இரவு பின்தொடர்கிறது என மேற்கண்ட வசனங்களில் அல்லாஹ் கூறுகிறான். எனவே இரவு என்றுமே பகலைத் தொடர்ந்து வரும் என்பதால் நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் என்பது ஐயமின்றி தெளிவாகிறது.

## ஆதாரம்: 5

*அவனே இரவைப் பகலால் மூடுகிறான். இவற்றில் சிந்திக்கும் மக்களுக்கு நிச்சயமாகப் பல சான்றுகள் உள்ளன.*

**திருக்குர்ஆன் 13:3**

...அவனே இரவால் பகலை மூடுகிறான். அது விரைவாக அதை (பகலை) பின்தொடர்கிறது. **திருக்குர்ஆன் 7:54**

மேற்கண்ட வசனத்தில் இரவால் பகலை மூடுவதாகவும். இரவு பகலைப் பின்தொடர்வதாகவும் இறைவன் கூறுகிறான். இரவு என்றும் இரண்டாவதுதான் என்பதும் அது பகலை முந்தவே முடியாது என்பதும் இதன் மூலம் மிகத் தெளிவாகிறது. இறைவன் நமக்கு இவ்வாறு மீண்டும் மீண்டும் ஃபஜ்ர்தான் நாளின் ஆரம்பம் என்பதை விளக்குகிறான்.

## ஆதாரம்: 6

அவனே விடியச் செய்பவன்; நீங்கள் அமைதிபெற அவனே இரவையும், காலக் கணக்கினை அறிவதற்காகச் சூரியனையும், நிலவையும் உண்டாக்கினான். இவை யாவும் வல்லமையில் மிகைத்த, அனைத்தையும் அறிந்தவனின் ஏற்பாடாகும்.

**திருக்குர்ஆன் 6:96**

மேற்கண்ட வசனத்தில் ஓய்வுபெற இரவை உண்டாக்கியுள்ள தாக இறைவன் கூறுகிறான். உழைத்துவிட்டு ஓய்வு பெறு வோமா? அல்லது ஓய்வு பெற்றுவிட்டு உழைப்போமா? உழைப்பு முதல் ஓய்வு இரண்டாவது. எனவே இங்கும் நமக்கு இரவு இரண்டாவது என்பது மிகத்தெளிவாகிறது. எனவே நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் இதில் சிறிதும் சந்தேகமில்லை.

## ஆதாரம்: 7

...அதிகாலை நேரம் என்னும் வெள்ளை நூலை (இரவு எனும்) கருப்பு நூலிலிருந்து தெளிவாகும்வரை உண்ணுங்கள்; பருகுங் கள். பின்னர், இரவு வரை நோன்பைப் பூர்த்தி யாக்குங்கள்!...

**திருக்குர்ஆன் 2:187**

மேற்கண்ட வசனத்தில் பகலின் ஆரம்பம் கூறப்பட்டுள்ளது. இதன் மூலமும் ஃபஜ்ர்தான் நாளின் ஆரம்பம் என்பது தெளிவு.

## ஆதாரம்: 8

நிச்சயமாக அதை (குர்ஆனை) கண்ணியமிக்க ஒரு நாளில் இறக்கினோம். கண்ணியமிக்க நாள் என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? கண்ணியமிக்க நாள் ஆயிரம் மாதங் களை விட மிகச் சிறந்ததாகும். அதில் வானவர்களும், ஜிப்ரயீலும் தம் இரட்சகனின் கட்டளையின் படி ஒவ்வொரு காரியத் துடனும் இறங்குகிறார்கள். அமைதி நிலவியிருக்கும்; அது (அன்றைய) அதிகாலை உதிக்கும் வரையில் இருக்கிறது.

**திருக்குர்ஆன் 97:1-5**

மேற்கண்ட அத்தியாயத்தில் லைலத்துல் கத்ர் என்னும் கண்ணியமிக்க நாளின் முடிவு சொல்லப்பட்டுள்ளது. அதன் முடிவு ஃபஜ்ர் - அதிகாலை நேரம் என சொல்லப்பட்டுள்ளது. நாளின் முடிவு ஃபஜ்ர் - அதிகாலை என்றால், நாளின் ஆரம்பம் எப்படி மக்ரிப்பாக இருக்க முடியும்? எனவே இந்த வசனத்தின் படியும் நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் என்பது ஐயத்திற்கு இடமின்றி தெளிவாகிறது.

## ஆதாரம்: 9

**عن عبد الله بن زمعة رضي الله عنـــــه...**

**وَذَكَرَ النِّسَاءَ فَقَالَ يَعْمِـــدُ أَحَـــدُكُمْ فَيَجْلِـــدُ امْرَأَتَـــهُ جَلْـــدَ الْعَبْـــدِ فَلَعَلَّـــهُ يُضَاجِعُهَا مِنْ آخِرِ يَوْمِـــهِ...**

**رواه البخاري رقم الحديث 4561**

...பெண்கள் குறித்து இறைத்தூதர்(ஸல்) குறிப்பிடுகையில்,

உங்களில் ஒருவர் திட்டமிட்டு தம் மனைவியை, அடிமையை அடிப்பது போல் அடிக்கிறார். பின்னர் அந்நாளின் ஒரு பகுதியான இறுதியில் - இரவில் - அவளுடன் (பாலுறவுக்காக) அவர் படுக்க நேரலாம்...

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு ஸம்ஆ(ரலி)**
**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, எண்: 4942**

மேற்கண்ட ஹதீஸில் **'மின் ஆகிரி யவ்மிஹீ'** என்ற வாசகத்தை நபி(ஸல்) பயன்படுத்தியுள்ளார்கள். இதற்கு அந்த நாளில் ஒரு பகுதியான இறுதியில் என்று பொருள். **'மின்'** என்னும் வார்த்தை ஒரு பகுதி என்ற பொருளில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. நாளின் கடைசிப் பகுதி இரவுதான் என்பது இங்கு தெளிவாகிறது. அப்படியானால் முதல் பகுதி பகல்; இரண்டாம் பகுதி இரவாகும். அதன் ஆரம்பப்பகுதி **'ஃபஜ்ர்'** ஆகும். எனவே **'ஃபஜ்ர்'**தான் நாளின் ஆரம்பம் என்பது தெளிவாகிறது. சூரியன் மறைவதற்கு முன்னதாக எல்லா ஆண்களும் மனைவியுடன் படுத்து மகிழ்வதில்லை.

மேற்கண்ட ஹதீஸ் புகாரீயின் மற்றொரு அறிவிப்பிலும், தாரமீயில் 2123 ஹதீஸாகவும் இடம்பெற்றுள்ளது.

## ஆதாரம்: 10

தொழுகைகளையும், நடுத்தொழுகையையும் பேணுங்கள். அல்லாஹ்வின் முன்பு உள்ளச்சத்துடன் நில்லுங்கள்.

**திருக்குர்ஆன் 2:238**

ஐவேளைத் தொழுகைகளில் நடுத்தொழுகையைப் பேண வேண்டும் என இறைவன் கூறுகிறான். நடுத்தொழுகை எது என்பதற்கு விளக்கமாக பல ஹதீஸ்கள் அது அஸர் தொழுகை தான் எனக் கூறுகின்றன. அஸர் தொழுகை நடுத்தொழுகை என்றால் முதல் தொழுகை ஃபஜ்ர்தான். ஃபஜ்ர் தொழுகை முதல் என்றால் நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் என்பதை விளங்கவேண்டும்.

''நம்மை நடுத் தொழுகையைத் தொழவிடாமல் சூரியன் மறையும் வரை எதிரிகள் தாமதப்படுத்திவிட்டார்கள். அல்லாஹ் அவர்களின் புதை குழிகளையும் 'வீடுகளையும்' அல்லது அவர்களின் 'வயிறுகளையும்' நெருப்பால் நிரப்பு வானாக'' என இறைத்தூதர்(ஸல்)கூறினார்கள்.

**அறிவித்தவர்: அலீ(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 4533**

நடுத்தொழுகை அஸர் தொழுகைதான் என்பதற்கு இப்படி நேரடியாக பல ஹதீஸ்கள் இருக்கின்றன. நபித்தோழர்கள் மற்றும் நபித்தோழியர்கள் பலரும் அறிவித்துள்ளார்கள். இந்த ஹதீஸ் முதவாத்திர் அதாவது ஆதாரத்தின் உச்சமாக அமைந்துள்ளது. இப்படி இருக்க வளைத்து திரித்து நடுத் தொழுகை என்பதற்கு இது பொருளல்ல என வாதிடுபவர்களின் வாதங்கள் மிகவும் பொய்யானது என்பதை விளங்கவேண்டும்.

## ஆதாரம்: 11

**عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا قَالَتْ كَانَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَعْتَكِفُ فِي الْعَشْرِ الْأَوَاخِرِ مِنْ رَمَضَانَ فَكُنْتُ أَضْرِبُ لَهُ خِبَاءً فَيُصَلِّي الصُّبْحَ ثُمَّ يَدْخُلُهُ.**

**رواه البخاري رقم الحديث 2033**

இறைத்தூதர்(ஸல்) ரமளானின் கடைசிப் பத்து நாள்களில் இஃதிகாஃப் இருப்பார்கள். நான் அவர்களுக்காக (பள்ளியில்)

ஒரு கூடாரத்தை அமைப்பேன். ஸுப்ஹுத் தொழுதுவிட்டு அதற்குள் நுழைந்து விடுவார்கள்…

**அறிவித்தவர்: ஆயிஷா(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்:2033**

நாளின் ஆரம்பம் மக்ரிப்தான் என்றால் நபி(ஸல்) ஏன் ஃபஜ்ர் தொழுதுவிட்டு இஃதிகாஃப் இருக்கச் சொன்றார்கள். முதல் நாளில் மக்ரிப் தொழுதுவிட்டுத்தானே இஃதிகாஃப் இருக்கச் சென்றிருக்கவேண்டும். ஓர் இரவை அவர்கள் ஏன் இழந்தார்கள். எனவே நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் என்பது மிகத் தெளிவாகிறது.

## ஆதாரம்: 12

இறைத்தூதர்(ஸல்) மேடை மீது இருக்கும்போது, “இரவுத் தொழுகை பற்றி என்ன கூறுகிறீர்கள்?” என ஒருவர் கேட்டார்.

‘‘இரண்டிரண்டாகத் தொழ வேண்டும். அதிகாலைப் பொழுதை அடைந்துவிடுவார் என அஞ்சினால் ஒரு ரக்அத் தொழலாம். அவர் தொழுதது அவருக்கு வித்ராக அமையும். உங்களின் கடைசித் தொழுகையாக வித்ரை ஆக்கிக் கொள்ளுங்கள்!” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 472**

‘‘இரவுகளின் கடைசித் தொழுகையாக வித்ரை ஆக்கிக் கொள்ளுங்கள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 998**

மேற்கண்ட ஹதீஸ்களில் வித்ரை கடைசித் தொழுகையாக ஆக்கிக்கொள்ளுங்கள் என நபி(ஸல்) கூறி, நாளின் முடிவு ஃபஜ்ருக்கு முந்தைய நேரம் என்பதையும் நாளின் ஆரம்பம் ஃபஜ்ர் என்பதையும் மிகத் தெளிவாக அறிவித்துவிட்டார்கள்.

சிலர் இரவின் கடைசித் தொழுகைதான் வித்ர், இதை நாளின் கடைசித் தொழுகையாக எடுக்கக்கூடாது என வாதிடு கின்றனர். அவர்கள் பின்வரும் ஹதீஸைக் காண வேண்டும்.

**عن طلحة ابن عبيد الله رضـــــي الله...**

**قَالَ رَسُوْلُ الله صَلَّى الله عَلَيْهِ وَسَـــلَّمَ خَمْـــسُ صَـــلَوَاتٍ فِـــي**

## الْيَـــوْمِ وَاللَّيْلَـــةِ...

## رواه البخاري رقم الحديث46

..."பகலிலும் இரவிலும் ஐவேளைத் தொழுகைகள் இருக்கின்றன" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்...

***அறிவித்தவர்: தல்ஹா இப்னு உபைதுல்லாஹ்(ரலி)***

***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 46***

ஐவேளைத் தொழுகைகளை நபி(ஸல்) பகல் இரவு என இரண்டாகப் பிரித்துச் சொல்லவில்லை. மாறாக பகல் மற்றும் இரவு சேர்த்து ஐவேளைத் தொழுகை என்றுதான் குறிப் பிட்டுள்ளார்கள். எனவே வித்ர் கடைசித் தொழுகை என்பது பகல் மற்றும் இரவு சேர்த்துத்தான். என்பதை விளங்க வேண்டும்.

குறிப்பு: இந்த ஹதீஸில் **அல் யவ்ம் வல் லைலஹ்** என்று வாசகத்திற்கு பகல் மற்றும் இரவு என மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இங்கு **லைலஹ்** என்பதற்கு இரவு என்று பொருள். அதாவது **யவ்ம்** என்ற வார்த்தையுடன் **லைலஹ்** என்ற வார்த்தை சேர்ந்து வரும்போது இரவு என்றும் **லைலஹ்** என்ற வார்த்தை தனியாக வரும்போது நாள் என்றும் பொருள் என்பதை விளங்க வேண்டும். **யவ்ம்** என்ற வார்த்தை தனியாக வந்தால் பகல் மற்றும் இரவு இணைந்தது. பகலை மட்டும் குறிப்பிடுவதற்கு **நஹார்** என்ற வார்த்தை பயன்படுத்தப்படும்.

### ஆதாரம்: 13

இன்னும் ஆதாரங்கள் வேண்டும் என்றால் கொடுத்துக் கொண்டே போகலாம். இந்த அளவிற்கு ஆதாரங்கள் இருந்தும்கூட நாளின் ஆரம்பம் மக்ரிப்தான் என வாதிடுதல் நாம் மேற்குறிப்பிட்டுள்ள திருக்குர்ஆனின் வசனங்கள் மற்றும் ஹதீஸ்கள் அனைத்தையும் மறுப்பதாகிவிடும். யூதர்கள் தான் நாளை மக்ரிப் நேரத்திலிருந்து ஆரம்பித்துவருகிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

**عَنْ رِبْعِيِّ بْنِ حِرَاشٍ عَنْ رَجُلٍ مِـــنْ أَصْـــحَابِ النَّبِـــيِّ صَـــلَّى اللَّـــهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اخْتَلَفَ النَّاسُ فِـــي آخِـــرِ يَـــوْمٍ مِـــنْ رَمَضَـــانَ فَقَـــدِمَ أَعْرَابِيَّـــانِ فَشَـــهِدَا عِنْـــدَ النَّبِـــيِّ صَـــلَّى اللَّـــهُ عَلَيْـــهِ وَسَـــلَّمَ بِاللَّـــهِ**

لَأَهَلَّا الْهِلَالَ أَمْسِ عَشِيَّةً فَأَمَرَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ النَّاسَ أَنْ يُفْطِرُوا. رواه ابو داؤد1992

*ரமளானுடைய கடைசி நாளில் (இது கடைசி நாளா இல்லையா என்பதில்) மக்கள் கருத்துவேறுபட்டு இருந்தார்கள். அப்போது நபி(ஸல்) அவர்களிடம் இரண்டு கிராமவாசிகள் முன்வந்து நேற்று இரவு நாங்கள் பிறை பார்த்ததாக அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து சாட்சியளித்தார்கள். எனவே நோன்பை விட்டுவிடுமாறு நபி(ஸல்) மக்களுக்கு கட்டளையிட்டார்கள்.*

***அறிவித்தவர்: ரிப்யீ இப்னு ஹிராஷ்***

***நூல்: அபூ தாவூத் 1992***

மேற்கண்ட ஹதீஸை நிதானமாக யோசிக்கவேண்டும். நபி(ஸல்) அவர்களிடம் சுப்ஹு நேரத்தில் ஃபஜ்ர் தொழுகைக் குப் பின்னர் இரண்டு பேர் வந்து நேற்று இரவு நாங்கள் பிறைபார்த்தோம் எனக் கூறுகிறார்கள். நாளின் ஆரம்பம் மக்ரிப்தான் என்றால் அவர்கள் இருவரையும் அப்படிக் கூறியதற்காக நபி(ஸல்) கண்டித்திருக்க வேண்டும். தமக்கு முன்னால் இப்படி தவறாக பேசியவர்களை நபி(ஸல்) கண்டிக்காமல் விட்டுவிடுவதுதான் வழக்கமா? இல்லை என்றால் இங்கு ஏன் அவர்களைக் கண்டிக்காமல் விட்டுவைத் தார்கள். காரணம் நாளின் ஆரம்பம் ஃபஜ்ர்தான் என்பது மீண்டும் தெளிவாகிறது.

## லைலஹ் என்றால் என்ன பொருள்?

லைலஹ் என்பதற்கு இரவு என்றும் இரவு மட்டும்தான் என்றும் தவறான விளக்கங்கள் தரப்படுகின்றன. இதன் பொருளை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

**‘லைலஹ்’** என்ற வார்த்தைக்கு பகல் மற்றும் இரவு இணைந்த நாள் என்று பொருள். இந்த வார்த்தை **யவ்ம்** என்ற வார்த்தையுடன் **அல் யவ்ம் வல் லைலஹ்** என இணைத்து எழுதப்பட்டால் பகல் மற்றும் இரவு என்று பொருள். **யவ்ம்** என்ற வார்த்தை தனித்து எழுதப்பட்டால் பகல் மற்றும் இரவு இணைந்துள்ளதுதான் நாள் என்று பொருள். பகலை மட்டும் குறிப்பிடுவதற்கு **நஹார்** என்ற வார்த்தையும், இரவை மட்டும் குறிப்பதற்கு **லைல்** என்ற வார்த்தையும் பயன்படுத்தப்படும்.

எனவே **லைலஹ்** என வார்த்தைக்கு இரவு என அர்த்தம் கொடுக்காமல் நாள் என்றே அர்த்தம் கொடுக்க வேண்டும் இதற்கான ஆதாரங்கள் தரப்படுகின்றன.

## ஆதாரம்: 1

**أنه سمع عن ابن عمر رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم الشَّهْرُ تِسْعٌ وَعِشْرُونَ لَيْلَةً لَا تَصُومُوا حَتَّى تَرَوْهُ وَلَا تُفْطِرُوا حَتَّى تَرَوْهُ إِلَّا أَنْ يُغَمَّ عَلَيْكُمْ فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَاقْدِرُوا لَهُ رواه مسلم رقم الحديث 1800**

"மாதம் 29 நாள்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. எனவே உங்களுக்கு அது மறைக்கப்பட்டிருந்தால் தவிர, அதைக் காணாமல் நோன்பு நோற்காதீர்கள்; இன்னும் அதைக் காணாமல் நோன்பைத் துறக்காதீர்கள். உங்களுக்கு மறைக்கப் பட்டிருந்தால் அதைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்" என்று இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**
**நூல்: முஸ்லிம் 1800**

மேற்கண்ட ஹதீஸில் **'லைலஹ்'** என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் பகல் மற்றும் இரவை உள்ளடக்கிய ஒரு நாளைத்தான் குறிக்கிறது. இதை இரவு என மொழிபெயர்க்கக்கூடாது.

## ஆதாரம்: 2

இறைவனிடம் ஜகரிய்யா(அலை) குழந்தை வேண்டியதற்கு இறைவன் அவர்களுக்கு குழந்தை தருவதாக வாக்களித்தான். அப்போது அவர்கள் இறைவனுடன் உரையாடிய சம்பவம் இங்கு தரப்படுகிறது.

"என் இரட்சகனே! என் மனைவியோ மலடியாகவும், நானோ முதுமையின் தள்ளாத பருவத்தையும் அடைந்திருக்கும் நிலையில் எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாவான்?" எனக் கேட்டார்.

"அவ்வாறே (நடக்கும்) எனக் கூறினான். இது எனக்கு மிகவும் சுலபமானதே! முன்னர் நீர் ஒரு பொருளாகவும் இல்லா திருந்த நிலையில் நானே உம்மைப் படைத்தேன்" என இரட்சகன் கூறினான்.

*“என் இரட்சகனே! நீ எனக்கு ஓர் அத்தாட்சியை ஏற்படுத்து வாயாக” என வேண்டினார்.*

*“நீர் நலமாய் இருக்கும் நிலையிலேயே மூன்று நாள்கள் நீர் மக்களுடன் பேச முடியாமல் இருப்பீர். அதுவே உமக்கு அத்தாட்சியாகும்” என (இறைவன்) கூறினான்.*

***திருக்குர்ஆன் 19:8-10***

*மேற்கண்ட வசனங்களில், நீர் நலமாய் இருக்கும் நிலை யிலேயே மூன்று நாள்கள் நீர் மக்களுடன் பேச முடியாமல் இருப்பீர் என்னும் வாசகத்தில்* ***‘ஸலாஸ லயாலின்’*** *என பயன்படுத்தப்பட்டுள்ளது.* ***லயாலின்*** *என்பது* ***லைலஹ்*** *என்னும் சொல்லின் பன்மைச் சொல் ஆகும். இதற்கு பகல் மற்றும் இரவு இணைந்த நாள் என்று பொருள். சில மொழிபெயர்ப்புகளில் இதற்கு இரவு என தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அன்றைய காலங்களில் அவர்கள் இரவு நேரங்களில் மக்களுடன் பேசாமல் இருப்பது ஒன்றும் ஆச்சரியமான அத்தாட்சியாக இருக்காது. உடல் ஆரோக் கியமாக இருந்தும் பகல் இரவு என மூன்று நாள்களும் பேசாமலிருப்பதுதான் உண்மையில் ஆச்சரியமானதாகவும் அத்தாட்சியாகவும் இருக்கும்.*

*மேற்குறிப்பிட்ட வார்த்தைக்கு நாள் என்பதுதான் பொருள் என்பதை மற்றோர் இடத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.*

*‘‘மூன்று நாள்களுக்குச் சைகை மூலமாக அன்றி பேசாது இருப்பதே உமக்கு அடையாளமாகும். உம்முடைய இரட்சகனை நீர் அதிகமதிகம் நினைவுகூர்ந்து, காலையிலும், மாலையிலும் துதிப்பீராக!” என (இறைவன்) கூறினான்.*

***திருக்குர்ஆன் 3:41***

*இந்த வசனத்தில்* ***‘ஸலாஸத அய்யாம்’*** *என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு நாள்தான் பொருள் என அனைவரும் ஒப்புக்கொள்வோம். இதற்கு பகல் மட்டும்தான் பொருள் எனக் கருதமுடியாது. மேலும் காலையிலும் மாலையிலும் துதிப்பீராக என அல்லாஹ் கூறுவதிலிருந்து காலைக்குப் பின்தான் மாலை வரும் என்பது தெளிவாகிறது. அதாவது பகலுக்குப் பின் இரவு.*

## *ஆதாரம்: 3*

*மூஸாவுக்கு நாற்பது நாள்களை வாக்களித்தோம். (அவர் சென்ற) பின்னர் நீங்கள் அநீதியாளர்களாகக் காளைக்கன்றை*

(கடவுளென) எடுத்துக் கொண்டீர்கள். **திருக்குர்ஆன் 2:51**

மேற்கண்ட வசனத்தில் **அர்பயீன லைலஹ்** நாற்பது நாள்கள் என்ற வாசகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நாற்பது நாள்கள் அல்ல, நாற்பது இரவுகளே என வாதிட முடியாது. அவர்களை இறைவன் தூர் மலைக்கு நாற்பது நாள்கள் அழைத்துச் சென்றானா அல்லது நாற்பது இரவுகள் மட்டுமா? நாற்பது இரவுகள் மட்டும்தான் என்பதை வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும் கூட சரியாக இருக்காது. ஏனெனில், நாற்பது இரவுகள் மட்டும் அவர்கள் தூர் மலைக்கு சென்றிருந் தால் பகலில் தம் மக்களுடன் இருந்திருக்கவேண்டும். அப்படி மக்களுடன் இருக்கும்போது மக்கள் காளைக் கன்றை வணங்கி இருக்கவும் மாட்டார்கள். இன்னும் ஏராளமான ஆதாரங்கள் ஹதீஸ்களிலும் இருக்கின்றன.

## எந்த நாள் அரஃபா ?

ஹாஜிகள் அனைவரும் அரஃபா மைதானத்தில் ஒன்று கூடும் நாள்தான் அரஃபாவா அல்லது துல் ஹஜ் மாதம் ஒன்பதாம் தேதி அரஃபாவா என்பதில் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. எந்த நாள் அரஃபா என்பதை நாம் அறியவேண்டும்.

சந்திரக் காலண்டரின் அடிப்படையில் மாதத்தை ஆரம் பிப்பதும் நாள்களைக் கணக்கிடுவதும் சரிதான். எல்லா அமல்களையும் இதன் அடிப்படையில் அமைத்துக் கொள் வதுதான் சரியான மார்க்கம். ஆனால் அரஃபா நோன்பு ஹாஜிகள் அரஃபா மைதானத்தில் ஒன்று கூடும் நாளில்தான் வைக்கவேண்டும். துல் ஹஜ் ஒன்பதாம் நாளாக இருந்தாலும் அன்று ஹாஜிகள் அரஃபாவில் ஒன்றுகூடவில்லை என்றால் அன்று நோன்பு நோற்கக்கூடாது என சிலர் வாதிடுகிறார்கள். அரஃபா நாள் எந்த நாள் என்பதை நாம் இப்போது பார்ப்போம்.

அதிகாலையின் (ஃபஜ்ரின்) மீது சத்தியமாக! பத்து நாள்களின் மீது சத்தியமாக! இரட்டையின் மீதும், ஒற்றையின் மீதும் சத்தியமாக! செல்கிற இரவின் மீதும், சத்தியமாக! அறிவுடையோருக்கு இதில் சத்தியம் இருக்கிறதல்லவா?

**திருக்குர்ஆன் 89:1-5**

மேற்கண்ட வசனங்களில் பத்து நாள்களின் மீது இறைவன் சத்தியம் செய்கிறான். நபி(ஸல்) அவர்கள் இதற்கு தெளிவான விளக்கத்தை அளித்து உள்ளார்கள்.

**عن جابر رضي الله عنه: قال رسول الله صلى الله عليه وسلم: وَالْفَجْرِ وَلَيَالٍ عَشْرٍ ، قَالَ : عَشْرُ الأَضْحَى ، وَالْوِتْرُ يَوْمُ عَرَفَةَ ، وَالشَّفْعُ يَوْمُ النَّحْرِ**

**السنن الكبرى للنسائي رقم الحديث: 11222**

*“அதிகாலையின் மீதும், பத்து நாள்களின் மீதும் சத்தியமாக என்பதற்கு, பத்து என்றால் அல் அள்ஹா - துல் ஹஜ் மாதத்தின் பத்தாம் நாள், ஒற்றை என்றால் அரஃபா நாள், இரட்டை என்றால் அறுத்துப் பலியிடும் நாள்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறித்தவர்: ஜாபிர்(ரலி) நூல்: சுனன் அல் குப்ரா லிந் நஸாயீ***

*மேற்கண்ட வசனங்கள் மற்றும் ஹதீஸ் தெளிவாகக் கூறு கின்றன. துல் ஹஜ் மாதம் 9 ஆம் நாள்தான் அரஃபா என்று. இந்த அடிப்படையில் துல் ஹஜ்மாதம் எட்டாம் நாள் அல்லது பத்தாம் நாள் அரஃபா என அறிவிக்கப்பட்டிருந்து அன்று ஹாஜிகள் அரஃபாவில் ஒன்று கூடினால் அது அரஃபாவாக கணக்கிடமுடியாது. ஏனெனில் தவறான நாளில் அவர்கள் ஒன்று கூடி இருக்கிறார்கள். எனவே எந்த நாள் அரஃபா தினமோ அதாவது துல் ஹஜ் மாதம் 9 ஆம் தேதியோ அன்று தான் நாம் நோன்பு நோற்கவேண்டும். அதற்கடுத்த நாள் பெருநாள் கொண்டாட வேண்டும்.*

*2:189 வசனத்தில் அல்லாஹ், ஹஜ்ஜையும் பிறைதான் அறிவிக்கும் எனக் கூறுகிறான். இதன்படி பார்த்தால் சரியாக சந்திரனின் 9 ஆம் படித்தரத்தில்தான் அரஃபா தினம் இருக்க வேண்டும். இதற்கு மாற்றமாக யார் அறிவித்தாலும், ஏன் சவூதி அரசாங்கம் என இன்று அழைக்கப்படும் ஹிஜாஸ் ஆட்சி யாளர்கள் அறிவித்தாலும் அவர்கள் இதற்கு அல்லாஹ்விடம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.*

*அப்படியானால் இன்றைய நாள்வரை தவறான நாளில் ஹஜ் செய்தவர்களின் நிலைதான் என்ன? அவர்களின் ஹஜ் கூடுமா கூடாதா என்ற ஒரு கேள்வியை சிலர் முன் வைக்கிறார்கள்.*

*இதுபோலதான் மூஸா(அலை) அவர்களிடம், “அப்படியானால், முன்சென்ற தலைமுறைகளின் நிலைமை என்ன?” என அவன் கேட்டான் (திருக்குர்ஆன் 20:51,52) என கேள்வி வைக்கப்பட்டது.*

*‘‘இது குறித்த ஞானம் என் இரட்சகனிடம் பதிவேட்டில் இருக்கிறது. என் இரட்சகன் தவறவும் மாட்டான்; மறக்கவும்*

மாட்டான்" என (மூஸா) கூறினார். (திருக்குர்ஆன் 20:52)

நன்மை கிடைக்கும் விஷயங்களிலும் இறைவனால் தண்டிக்கப் படும் விஷயங்களிலும் நாம் நம்முடைய தீர்ப்பைச் சொல்லக் கூடாது என்பதை மேற்கண்ட வசனம் தெரிவிக்கிறது.

நம்மைப் பற்றித் தவறான எண்ணத்தை மக்களிடம் உருவாக்கும் நோக்கத்தில்தான் இது மாதிரி கேள்விகளை பொதுவாக சிலர் முன்வைக்கிறார்கள். மூஸா(அலை) அவர்களிடம் ஃபிர்அவ்ன் இதுமாதிரியான நோக்கத்தில்தான் கேள்வி கேட்டான். இதுபோன்ற கேள்வியை இன்று யார் கேட்டாலும் அவர்களுக்கும் இதுதான் பதிலாகும்.

அது கூடுமா கூடாதா என்பதை அல்லாஹ் அறிவான். அதில் தீர்ப்புச் சொல்லியே ஆகவேண்டும் என இறைவன் நமக்கு ஏவவில்லை. அதில் இறைவன் தீர்ப்பளிப்பான்.

சர்வதேச சந்திரக் காலண்டரை நாம் அனைவரும் ஒப்புக் கொள்ளும் ஒரு நாளில் இதுபோன்ற பிரச்சினைகள் நிச்சயம் இருக்காது. அன்று நாம் இதே போன்று ஒரு கேள்வியை முன்வைக்கலாம். அதாவது, இன்று உலக முழுக்க ஒரே நாளில் அரஃபா தினத்தில் நோன்பு நோற்கிறோமே இதற்கு முந்தைய காலங்களில் வித்தியாசமாக நோன்பு நோற்றவர்களின் ஹஜ் செய்தவர்களின் நிலை என்ன என்று கேட்கலாம். ஆனால் அப்படி ஒரு கேள்வியை நாம் முன்வைக்க மாட்டோம். ஏனெனில் அதற்கான தீர்ப்பை இறைவன் தன் கையில் வைத் துள்ளான். அதை நாம் மறுமையில் பெற்றுக் கொள்ளலாம். இப்போது உடனடியாக நாம் அதற்குத் தீர்ப்புத் தேடி அலைய வேண்டியதில்லை.

எனவே உலகத்திற்கு என்று அரஃபா தினமோ அன்றுதான் நாம் அரஃபா நோன்பு நோற்க வேண்டும் அதற்கு அடுத்த நாள் பெருநாள் கொண்டாடவேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் அரஃபா தினத்தை அவரவர்களாகத் தீர்மானிக்க முடியாது இறைவன் அதை வானம் மற்றும் பூமியைப்படைத்த நாளிலிருந்தே தீர்மானித்து வைத்துள்ளான்.

عَنْ أَبِي بَكْرَةَ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ الزَّمَانَ قَدْ اسْتَدَارَ كَهَيْئَتِهِ يَوْمَ خَلَقَ اللَّهُ السَّمَوَاتِ

**وَالْـأَرْضَ السَّـنَةُ اثْنَـا عَشَـرَ شَـهْرًا مِنْهَـا أَرْبَعَـةٌ حُـرُمٌ ثَلَـاثٌ مُتَوَالِيَـاتٌ ذُو الْقَعْـدَةِ وَذُو الْحِجَّـةِ وَالْمُحَـرَّمُ وَرَجَـبُ مُضَـرَ الَّـذِي بَيْنَ جُمَادَى وَشَـعْبَانَ رواه البخـاري رقـم الحـديث 4662**

*''அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் இருந்த (பழைய) நிலைக்கே காலம் திரும்பிவிட்டது. ஓர் ஆண்டு என்பது பன்னிரண்டு மாதங்கள் ஆகும். அவற்றில் நான்கு மாதங்கள் (போரிடுதல் விலக்கப்பட்ட) புனித மாதங்களாகும். (அந்த நான்கு மாதங்களில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வருகின்றவையாகும். அவை ஃதுல்கஅதா, ஃதுல்ஹஜ், முஹர்ரம் மற்றும் ஜுமாதஸ் ஸானீக்கும் ஷஅபானுக்கும் இடையிலுள்ள முளர் குலத்து 'ரஜப்' மாதம் ஆகும்'' என ('ஹஜ்ஜத்துல் வதாவில்' உரையாற்றியபோது) இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*

***அறிவித்தவர்: அபூ பக்ரா(ரலி)***
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 4662***

*மேற்கண்ட ஹதீஸில் நாம் ஒரு விஷயத்தை ஆய்வு செய்தோமானால் அல்லாஹ் இந்த உலகத்தைப் படைத்த நாளுக்கு அது திரும்பிவிட்டது என நபி(ஸல்) கூறியுள்ளார் கள். அதில் வருடத்திற்கு 12 மாதங்கள் எப்படி இருக்க வேண்டும் என அமைத்துக் கொடுத்துள்ளதையும் காண முடிகிறது. கணக்கிடுதலில் முன்பு இருந்த தவறுகளைச் சரிசெய்தார்கள்.*

*இறைத்தூதர்(ஸல்) ஓர் ஒட்டகத்தின் மீது அமர்ந்திருந் தார்கள். ஒருவர் அதன் கடிவாளத்தைப் பிடித்திருந்தபோது,*

*''இது எந்த நாள்?' எனக் கேட்டார்கள். அந்த நாளுக்கு இன்னொரு பெயர் சூட்டுவார்களோ எனக் கருதி நாங்கள் மௌனமாக இருந்தோம்.*

*"இது நஹ்ருடைய (துல்ஹஜ் மாதம் பத்தாம்) நாளல்லவா?" என்றார்கள்.*

*நாங்கள், "ஆம்" என்றோம்.*

*"எந்த மாதம்?" எனக் கேட்டார்கள்.*

*அந்த மாதத்துக்கு இன்னொரு பெயர் சூட்டுவார்களோ எனக் கருதி நாங்கள் மௌனமாக இருந்தோம்.*

“இது துல்ஹஜ் மாதமல்லவா?” எனக்கேட்டார்கள்.

நாங்கள், “ஆம்!” என்றோம்.

இந்த ஊரில், இந்த மாதத்தில், இன்றைய தினம் எவ்வளவு புனிதமானதோ, அதுபோன்று, உங்களின் உயிர்களும், உடைமைகளும் புனிதம் வாய்ந்தவை. இங்கே வந்திருப்பவர் வராதவருக்கு இச்செய்தியைக் கூறட்டும்; ஏனெனில், வந்திருப்பவர் தன்னை விட நன்கு புரிந்து கொள்ளும் ஒருவருக்கு அச்செய்தியை எடுத்துச் சொல்லக் கூடும்” என்றார்கள்.

**அறிவித்தவர்: அபூ பக்ரா(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 67**

நபி(ஸல்) அரஃபாவில் இருந்த துல் ஹஜ் மாதத்தின் முதல் நாள் Conjunction நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாளாக இருந்தது. இது எந்த நாள்? இது எந்த மாதம் என நபி(ஸல்) கேள்வி எழுப்பி நன்றாகப் பதிவு செய்தார்கள்.

குறிப்பிட்ட அறிஞர்கள், நபர்கள், முன்னோர்கள் மட்டும் தான் சிந்திக்க வேண்டும் மற்றவர்கள் சிந்திக்கக்கூடாது என்பது தவறு; எந்தக் காலத்திலும் நன்றாகச் சிந்திக்கக் கூடயவர்கள் இருக்கலாம் என்ற இன்னொரு செய்தியும் மேற்கண்ட ஹதீஸ் தெளிவாகக் கொடுக்கிறது.

## விசிபிலிட்டி கிரிட்டீரியா - கணக்கின் மூலம் பார்க்கிற முறைகள்

பிறையைப் புறக்கண்ணால் கண்டால் அதற்கு அடுத்த நாள் முதல் நாள் என ஒரு சாரார் மாதங்களை ஆரம்பிக்கிறார்கள்.

பிறையை 29 ஆம் நாள் புறக்கண்ணால் பார்க்கவேண்டும். அது தெரியவில்லை என்றால் மாதத்தை 30 நாள்களாக பூர்த்தி செய்யவேண்டும் என ஒரு சாரார் கூறுகிறார்கள்.

ஓர் ஊரில் புறக்கண்ணால் பிறைபார்க்கப்பட்டால் அதை அந்த ஊர்காரர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளவேண்டும். மற்றவர்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என ஒரு சாரார் கூறுகிறார்கள்.

ஓர் ஊரில் பிறை பார்க்கப்பட்டால் அங்கிருந்து குறிப்பிட்ட கி.மீ. தூரத்தில் இருக்கும் மக்கள் மட்டும் அந்தத் தகவலை எடுத்துக் கொள்ளலாம்.

சூரியன் மறைந்த பின்னர் சில நிமிடங்கள் கழித்து பிறை மறைந்தால் அது கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அதை எடுத்துக் கொள்ளலாம்.

மக்கா நகரில் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பு சந்திரன் அஸ்தமித்து அது கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அதை எடுத்துக் கொள்ளலாம் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

சூரியன் சந்திரன் பூமி நேர்கோட்டிற்கு வரும் நிகழ்வு (The Geocentric Conjunction occurs before Sunset) சவூதி அரபியாவின் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு சில நிமிடங்கள் தாமதமாக சந்திர அஸ்தமனம் (The Moon sets after the Sun) ஏற்பட்டால் அதற்கு அடுத்த நாள் சந்திர மாதத்தின் முதல் நாள் என ஒரு சாரார் கூறுகிறார்கள்.

சவூதி அரபியா என்று ரமளான் மற்றும் ஹஜ் அறிவிக்கிறதோ அன்றுதான் உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் ரமளான் மற்றும் ஹஜ் எனக் கூறுகிறார்கள்.

சந்திரனின் தேய்ந்து வளரும் நிலைகளை அறிந்து மாதங்களை கணக்கிட வேண்டும் என ஒரு சாரார் கூறுகிறார்கள்.

தங்கள் நாட்டில் ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பு சூரியன் சந்திரன் பூமி நேர்கோட்டில் வரும் நிகழ்வு அல்லது அமாவாசை (Geocentric Conjunction occurs before Dawn) நிகழ்ந்தால் அந்த நாளை மாதத்தின் முதல் நாள் என முடிவு செய்யவேண்டும் எனக் கூறுகின்றனர்.

இப்படி பல்வேறு கருத்துக்கள் உள்ளவர்களுக்கு இடையில் விசிபிலிட்டி கிரிடீரியா என்னும் ஒரு பிரிவும் தற்போது உருவாகி இணையதளங்களில் வருகிறது.

இவர்கள் புறக்கண்ணால் பிறையைப் பார்ப்பவர்களும் அல்லர். முறையாகக் கணக்கிடுபவர்களும் அல்லர். கண்ணால் பார்ப்பதற்கான வாய்ப்பு இருக்கும் இடங்களை பதிவு செய்து அறிவிப்பவர்கள். ஒவ்வொரு மாதமும் பிறை பிறந்துவிட்டதை ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளவோ ஏற்றுக் கொள்ளுமாறு மக்களை ஏவவோ மறுக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் ஒரு சரியான தீர்வை இவர்கள் சொல்வதில்லை.

இவர்களின் கணக்குப்படி உலகம் மூன்றுக்கும் மேற்பட்ட பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. இவர்களின் கருத்துப்படி

மூன்று நாள்கள் ஆன பின்னரும் சில இடங்களில் பிறை தெரிவதற்கான வாய்ப்பே இருப்பதில்லை. அதை அவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால், அதற்கு அவர்கள் எந்தத் தீர்வும் சொல்வதில்லை. இவர்களின் கருத்துப்படி உலகத்தில் மூன்று நாள்கள் நான்கு நாள்கள் என வித்தியாசம் உள்ள பகுதிகள் எப்போதுமே இருக்கும். இந்த அடிப்படையில் காலண்டர் அமைப்பதாக இருந்தால் உலகத்தில் ஒரு நாளைக் குறிப்பதற்கு குறைந்தபட்சமாக நான்கு காலண்டர்கள் தேவைப்படுகின்றன. அவர்கள் நான்கு நிலைகளில் பிறையைக் கணக்கிட்டு அறிகிறார்கள்.

1. பிறை பிறந்துவிட்டது. ஆனால் அன்று பிறையைப் பார்க்கமுடியாது. இவ்வாறு சில பகுதிகள் உள்ளன.

2. ஆப்டிக்கல் - உபகரனங்களின் மூலம் பிறையைப் பார்த்தல்.

3. தொலைநோக்கி மூலமாகப் பிறையைப் பார்த்தல்.

4. புறக்கண்ணால் பிறையைப் பார்த்தல்.

இவர்களின் இந்த நிலைபாடு நபி(ஸல்) காட்டித்தந்த முறைக்கு மாற்றமாகவே இருக்கிறது.

உலகத்தில் நான்கு வெவ்வேறு பகுதிகளில் பிறையைக் கண்ணால் பார்த்துத்தான் மாதத்தை அந்தந்த பகுதி மக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று நபி(ஸல்) கட்டளையிடவே இல்லை. இது முதல் பிறை இது இரண்டாம் பிறை என மக்கள் வாதிட்டபோது கூட அது நீங்கள் பார்த்த நாளுக்குரிய பிறைதான் என நபி(ஸல்) கூறினார்கள். அல்லாஹ் ஏற்படுத்தி யுள்ள மன்ஸில் என்றும் மாறாது நாம்தான் அதை மாற்றமாகப் பார்க்கிறோம் என்பதை உணர்த்தினார்கள். எனவே, இங்கு அது முதல் பிறை; அங்கு நாளைதான் முதல் பிறை; அதற்கடுத்து இருக்கும் இடத்திற்கு நாளைய மறுநாள்தான் முதல் பிறை என தீர்மானித்தல் முறையல்ல என்பதை விளங்கவேண்டும்.

HCI

عَنْ أَبِي الْبَخْتَرِيِّ قَالَ خَرَجْنَا لِلْعُمْرَةِ فَلَمَّا نَزَلْنَا بِبَطْنِ نَخْلَةَ قَالَ تَرَاءَيْنَا الْهِلَالَ فَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ ثَلَاثٍ وَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ لَيْلَتَيْنِ قَالَ فَلَقِينَا ابْنَ عَبَّاسٍ فَقُلْنَا إِنَّا رَأَيْنَا الْهِلَالَ فَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ ثَلَاثٍ وَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ لَيْلَتَيْنِ فَقَالَ أَيَّ لَيْلَةٍ رَأَيْتُمُوهُ قَالَ

فَقُلْنَا لَيْلَةَ كَذَا وَكَذَا فَقَالَ إِنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ اللَّهَ مَدَّهُ لِلرُّؤْيَةِ فَهُوَ لِلَيْلَةٍ رَأَيْتُمُوهُ

رواه مسلم رقم الحديث 1820

*நாங்கள் உம்ராவுக்காக புறப்பட்டபோது பத்னு நக்லா என்னும் இடத்தில் இறங்கினோம். எங்களுக்கு பிறை தென்பட்டது. எங்களில் சிலர் அது* ***இப்னு ஸலாஸ்*** *- மூன்றாம் நாள் பிறை என்றனர். எங்களில் இன்னும் சிலர் அது* ***இப்னு லைலதய்ன்*** *- இரண்டாம் நாள் பிறை என்று கூறினர். நாங்கள் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களைச் சந்தித்து, நாங்கள் பிறை பார்த்தோம் எங்களில் சிலர், அது* ***இப்னு ஸலாஸ்*** *- மூன்றாம் நாள் பிறை என்றனர். இன்னும் எங்களில் சிலர் அது* ***இப்னு லைலதய்ன்*** *- இரண்டாம் நாள் பிறை எனக் கூறினர் என்பதைத் தெரிவித்தோம். நீங்கள் எந்த நாளில் அதைப்பார்த்தீர்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) கேட்டார்கள். நாங்கள் அதை இன்ன இன்ன கிழமையில் பார்த்தோம் எனக் கூறினோம். அதற்கு அவர்கள், நிச்சயமாக அதைப்பார்ப்பதற்காக அல்லாஹ் நீட்டிருக்கிறான். நீங்கள் அதை எந்தக் கிழமையில் பார்த்தீர் களோ அது அதற்குரியதுதான் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள் என தெரிவித்தார்கள்.*

***அறிவித்தவர்: அபுல் பக்தரீ***

***நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1820***

## விஞ்ஞான யுகத்தில் இத்தா தேவையா ?

*“சந்திர மாதக் கணக்கை ஏற்கமறுப்பவர்கள் வித்தியாசமான ஒரு வாதத்தை முன்வைக்கின்றனர். அதாவது இத்தா இருக்கும் பெண்களுக்கு மூன்று மாதவிடாய் சுத்தமாகும் காலம் இத்தா அல்லது மூன்று மாதங்கள் இத்தா என்ற சட்டம் இஸ்லாத்தில் இருக்கிறது. இது அவர்களுக்கு நடத்தப் படும் கருவறைச் சோதனைதானே. இன்று விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. ஒரு பெண் கருவுற்றிருக்கிறாளா இல்லையா என்பதை அறிவதற்கு இப்படி கஷ்டப்பட்டு காத்திருக்க வேண்டிய அவசியமில்லையே. எனவே மருத்துவ விஞ்ஞானப் படி சிறுநீர் சோதனையின் மூலமோ, ஸ்கேன் மூலமோ பரிசோதித்து கருவறைச் சோதனையை முடித்துக் கொள்ளலாம் தானே இதை மட்டும் ஏன் நீங்கள் செய்யத் துணியவில்லை?” எனக் கேட்கின்றனர்.*

மேலும், உங்கள் பெண்களில், ஒருவரின் மீது மாதவிடாயின் நம்பிக்கை இழந்து நீங்கள் சந்தேகப்பட்டால், அப்பெண் களுக்கும், மாதவிடாய் ஏற்படாத பெண்களுக்கும் 'இத்தா' மூன்று மாதங்களாகும். தவிர கருவுற்ற பெண்களுக்கு அவர்கள் பிரசவிக்கும் வரையாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுவோரின் காரியத்தை அவன் எளிதாக்கிவைக்கிறான்.

**திருக்குர்ஆன் 65:4**

முதலில் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். அகீதா - கொள்கையில், இபாதத் - வணக்கவழிபாட்டில், ஹலால், ஹராம் ஆகியவற்றில் கை வைக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. எனவே அந்தத் துணிச்சல் எங்களுக்கும் இல்லை. நாங்கள் ஒருபோதும் இவற்றில் மாற்றம் செய்யவும் மாட் டோம். மாற்றம் செய்பவர்களை இனங்காட்டாமல் விடவும் மாட்டோம். நாங்கள் சொல்வது, இறைவன் குறிப்பிட்டுள்ள ஆண்டுகளை அறியும் விஷயத்தில் நாம் கடைபிடித்து வரும் வஸீலா சரி இல்லை என்பதுதான். நாங்கள் ஏதோ வணக் கத்தை மாற்றுவதாக தவறாக எண்ணுகிறார்கள். வணக்கத்தை மாற்றுவது எங்கள் வேலையல்ல.

இத்தாவைப் பொறுத்தவரை அது ஒரு வணக்கமாகும். அல்லாஹ் கூறும் வணக்கத்தில் நாம் மாற்றம் செய்ய முடியாது. நாம் நினைப்பது போல அது ஒன்றும் கருவறைச் சோதனை மட்டும் அல்ல. கருவறைச் சோதனை என்றால் மாதவிடாய் வரும் பெண்களுக்கு ஒரு மாதவிடாய் போதும் என்ற சட்டம் இருந்திருக்க வேண்டும். அவர்களுக்கு அதே மூன்று மாத விடாய் காலம் சுத்தமாகும் வரைதான் இத்தா என்பதைக் கவனிக்க வேண்டும். அது மட்டுமலலாமல் இதற்கு நபி(ஸல்) அவர்களும் தெளிவான விளக்கத்தை அளித்துள் ளார்கள். அதை பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

அபூ சுஃப்யான்(ரலி) இறந்த செய்தி சிரியாவிலிருந்து வந்த மூன்றாம் நாள் (அவரின் மகள்) உம்மு ஹபீபா(ரலி) மஞ்சள் நிற வாசனை திரவியத்தை வரவழைத்து தம் கன்னங்களிலும் முழங்கைகளிலும் தடவினார். மேலும், 'அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பியுள்ள ஒரு பெண் தன் கணவன் இறந் தாலே தவிர வேறு யார் இறந்தாலும் மூன்று நாள்களுக்கு மேல் துக்கம் கடைப்பிடிக்கக் கூடாது; கணவன் இறந்தால் மட்டும் நான்கு மாதமும் பத்து நாள்களும் துக்கம் கடைப் பிடிக்க வேண்டும்" என இறைத்தூதர்(ஸல்) கூறியதை நான்

கேள்விப்பட்டிராவிட்டால் இது எனக்குத் தேவையற்றது தான்" எனக் கூறினார். **அறிவித்தவர்: ஜைனப்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1280**

# சந்திரக் காலண்டரின் கணக்கீடு

## நாளைக் கணக்கிடுதல்

வட்டமான, பந்துபோல உருண்டையான ஒவ்வொரு பொருளும் 0-360 டிகிரியில் கணக்கிடப்படும். இதை நாம் அளப்பதற்கு அது சுழல வேண்டும். உதாரணத்திற்கு ஒரு சைக்கிள் சக்கரம் ஒரு முறை சுற்றிவிட்டது என்பதை நாம் கணக்கிடவேண்டும் என்றால் அதில் ஓர் இடத்தில் அடையாளம் இடவேண்டும். அதன் வால்டியூப்பை நாம் அடையாளமாக வைத்துக் கொள்வோம். ஆனால், அந்த அடையாளத்தை மட்டும் வைத்துக் கொண்டு சக்கரம் ஒருமுறை சுற்றிவிட்டதை நம்மால் கணக்கிட முடியாது. ஏனெனில், அடையாளம் இடப்பட்ட இடமும் சேர்ந்தே சுற்றிவரும்.

எனவே, அந்தச் சக்கரத்தைத் தொடாத ஒரு குறியீட்டை நாம் ஏற்படுத்த வேண்டும். சைக்கிளின் சாவித் துவாரத்தை நாம் குறியீடாக வைத்துக் கொள்வோம். சக்கரத்தில் நாம் அடையாளமிட்டுள்ள வால்டியூப்பையும், அதற்கு வெளியில் சுற்றாத சாவி துவாரக் குறியீட்டையும் நேர் கோட்டில் வைத்துத்தான் சுற்றை நாம் ஆரம்பிக்க வேண்டும். இப்போது நாம் சக்கரத்தைச் சுற்றிவிடுகிறோம். அது சுற்றிவந்து மறுபடியும் வால்டியூப்பும் சாவித்துவாரமும் நேர்கோட்டிற்கு வந்து நிற்கிறது. இதைத்தான் நாம் ஒரு சுற்றாக கணக்கிடுகிறோம்.

இதே அடிப்படையில்தான் கடிகார முற்களும் சுழல்கின்றன. 12 மணிக்கு எல்லாமே நேர்கோட்டில் வருகின்றன.

பூமி உருண்டையானது. அது சுழல்கிறது. அதன் ஒரு சுற்றை நாம் கணக்கிட வேண்டும் என்றால் என்ன செய்வது? இப்போது நமக்கு ஒரு கேள்வி எழும். அதாவது, சைக்கிள் சக்கரத்தின் சுற்றை அளப்பதற்கு அதற்குள்ளும் வெளியிலும் இரண்டு அடையாளங்களை நாம் ஏற்படுத்தியிருந்தோம். அவற்றை வைத்துத்தான் அதன் சுற்றை அளந்தோம். இப்போது பூமியின் சுற்றை அளப்பதற்கு என்ன அடையாளம் இருக்கிறது? அதன் சுற்றை எப்படி அளப்பது?

பூமியின் சுற்றை அளந்து அதை அறிவதற்காக அதன் ஒரு

பகுதியில் கட்டாயமாக அடையாளம் இடவேண்டும். அதற்கு வெளியில் அதனுடன் சேர்ந்து சுழலாத ஒரு பொருளை அடையாள மாக கட்டாயம் ஏற்படுத்த வேண்டும். பூமிக்கு வெளியில் நமக்கு ஓர் அடையாளம் இருக்கிறது. நாள்தோறும் நாம் அதைப் பார்த்துவருகிறோம். அதுதான் சூரியன். பூமி சுற்றி வரும்போதெல்லாம் சூரியன் நம்மைச் சந்திக்கிறது. இதைத் தான் சூரிய உதயம், உச்சம், அஸ்தமனம் என்கிறோம்.

இப்போது நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். பூமி உருண்டை யானது. இதன் நிலப்பரப்பின் எல்லாப் பகுதிகளிலும் மக்கள் வாழ்ந்துவருகிறார்கள். பூமியின் ஒரு சுற்றைக் கணக்கிடுவதற்கு ஒவ்வொரு பகுதியில் வசிக்கும் மக்களும் தங்கள் இஷ்டத்திற்கு தனித்தனியாக பூமியில் ஒரு குறியீட்டை ஏற்படுத்திக் கொள்ளலாமா? அல்லது எல்லோருக்கும் பொதுவாக பூமியின் ஒரு பகுதியை மட்டும் குறியீடாக அமைக்க வேண்டுமா?

எல்லோருக்கும் பொதுவாக பூமியின் ஒரு பகுதியில் ஒரு குறியீடு இருப்பதுதான் சரியானது. அப்படியிருந்தால்தான் பூமியின் சுழற்சியை நம்மால் சரியாக கணக்கிட்டு வரமுடியும். தனித்தனியான குறியீடுகள் அமைக்கப்பட்டால் பெரும் பெரும் குழப்பங்கள் நிகழும். யாரும் எதையும் சரியாகப் பதிவு செய்ய முடியாது. அப்படியே பதிவு செய்து வைத்தாலும் 0-360டிகிரிக்கும் 360 குறியீடு என்ற விகிதத்தில்தான் குறியீடுகள் இருக்கும். இப்படி நாம் அமைத்துக் கொண்டால் யார் எப் போது, எங்கு, என்ன செய்தார்? அல்லது என்ன செய்யப் போகிறார் என்பதை ஒருபோதும் யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

பூமியின் சுழற்சியை நாம் ஏன் கணக்கிடவேண்டும்? இதில் நமக்கு என்ன அக்கரை? முதலில் நாம் இதைத் தெரிந்திருக்க வேண்டும்.

நாம் வாழும் காலத்தை கணக்கிடுவதற்கும், உலக வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகளை மக்கள் பதிவு செய்து வைத்துக் கொள் வதற்கும், நடக்கவிருப்பவற்றைத் திட்டமிடுவதற்கும் பூமியின் சுழற்சியை கணக்கிட்டே ஆகவேண்டிய கட்டாயம் மனித சமுதாயத்திற்கு இருக்கிறது.

சரி இப்போது நாம் பூமியைக் கணக்கிடத் தயாராகி விட் டோம். பூமியில் அந்தக் குறியீட்டை நாம் எங்கே போடுவது? இந்த விஷயத்தில் நமக்கு யார் வழிகாட்டுவது? நாம் இதற்கு

ஒரு வழியைத் தேடிப்பார்க்கிறோம். பூமியில் குறியீடாக நாம் அமைக்கும் இடம் எப்படிப்பட்ட இடமாக இருக்க வேண்டும்? அந்த இடத்தில் என்னவெல்லாம் நிகழவேண்டும்?

அது 0டிகிரியும் 360டிகிரியும் சேருமிடமாகும். அதாவது எங்கு நாம் சுற்றை ஆரம்பித்தோமோ அங்குதான் அந்தச் சுற்று முடியும் இடமாகும். இப்படி பூமி தன்னுடைய ஒரு சுற்றை ஆரம்பித்து முடிப்பதுதான் நம்முடைய நாளின் அளவீடாகும். இப்போது நாம் இங்கு என்ன நடக்கிறது என்பதை நன்றாகக் கவனிக்க வேண்டும்.

குறியீடு உள்ள அந்த இடம் கிழக்கும் மேற்கும் சந்திக்கும் இடமாக இருக்க வேண்டும்.

இங்கு இரண்டு கிழமைகளும் இரண்டு தேதிகளும் இருக்க வேண்டும்.

ஜும்ஆ தொழுகையும் லுஹர் தொழுகையும் மாறும் இடமாக இருக்க வேண்டும்.

கிப்லா திசை மாறும் பகுதியாக இருக்க வேண்டும்.

சூரியன் உச்சியில் இருக்கும் ஒரே பகலில் கிழக்குப் பகுதி மக்கள் பழைய தேதியிலும் கிழமையிலும், மேற்குப் பகுதி மக்கள் புதிய தேதியிலும் கிழமையிலும் இருப்பார்கள். மேற்குப் பகுதி மக்கள்தான் தேதியையும் கிழமையையும் முதலில் தொடங்குபவர்கள். இங்கு இரண்டு பகுதி மக்களும் அருகே அருகே வசிப்பவர்கள்.

உதாரணத்திற்கு, மேற்குப் பகுதி மக்கள் ரமளான் மாதத்தின் முதல் தேதிக்குள் வெள்ளிக் கிழமை இருந்தால், அதே நேரத்தில் கிழக்குப் பகுதி மக்கள் ஷஅபான் மாதத்தின் கடைசித் தேதிக்குள் வியாழக்கிழமை இருப்பார்கள்.

இறைவன் நம்மை கஷ்டப்படுத்தவில்லை; அருள் புரிந்து விட்டான். ஏற்கனவே அதற்கான ஒரு பகுதியை இறைவன் நிர்ணயித்தே வைத்திருக்கிறான்.

இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு அவன் வசப்படுத்திக் கொடுத்தான். நட்சத்திரங்களும் அவன் கட்டளைப்படியே வசப்படுத்தப் பட்டுள்ளன. ஆய்ந்தறியக் கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதிலும் சான்றுகள் உள்ளன.

**திருக்குர்ஆன் 16:12**

*சூரியனையும் சந்திரனையும் தம் வழிகளில் (முறையாகச்) செல்லுமாறு அவனே உங்களுக்காக வசப்படுத்திக் கொடுத்தான். அவனே இரவையும் பகலையும் உங்களுக்காக வசப்படுத்திக் கொடுத்தான்.* **திருக்குர்ஆன் 14:33**

*சூரியனும் சந்திரனும் கணக்கின்படியே உள்ளன.*

**திருக்குர்ஆன் 55:5**

*சூரியன்தான் நமக்கு பூமியைத் தொடாத ஒரு குறியீடாகும் என்பதை இறைவன் நமக்கு இங்கு தெளிவுபடுத்திவிட்டான். பின் வரும் வசனமும் நமக்குச் சான்றாக இருக்கிறது.*

*இரவையும், பகலையும் நாம் இரண்டு அத்தாட்சிகளாய் ஆக்கினோம். பின்னர் இரவின் அத்தாட்சியை மங்கச் செய்தோம். உங்களின் இரட்சகனிடமிருந்து நீங்கள் அருளைத் தேடிக் கொள்வதற்காகவும் ஆண்டுகளின் எண்ணிக்கை மற்றும் கணக்கை நீங்கள் அறிவதற்காகவும், பகலின் அத்தாட்சியைப் பார்ப்பதற்குரியதாகவும் ஆக்கினோம்.*

*ஒவ்வொரு பொருளையும் தெளிவாக விவரித்தோம்.*

**திருக்குர்ஆன் 17:12**

*பூமியின் சுற்றை அளப்பதற்கு அதில் ஓர் அடையாளம் இருப்பதை இறைவன் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகிறான்.*

*இரண்டு கிழக்கு திசைகளுக்கும் இரட் சகன்; இரண்டு மேற்கு திசைகளுக்கும் இரட்சகன்.*

**திருக்குர்ஆன் 55:17**

*ஒரு நாளை அளவீடு செய்வதற்கு அல்லாஹ் நிர்ணயித்துள்ள அந்த இடம் இப்போது எங்கே இருக்கிறது? அதை எப்படித் தேடிப்பார்ப்பது?*

*இதைத் தேடிப்பார்ப்பதற்கு ஒரு முன்னோக்கும் திசை வேண்டும். அப்படி ஒரு திசை இருந்தால்தான் அதை மையமாக வைத்து அங்கிருந்து பின்னால் வந்து பின் பகுதி சேருமிடத்தை ஒரு குறியீடாக அமைக்கமுடியும். அந்த இடம்தான் இரண்டு கிழக்கு இரண்டு மேற்காக இருக்கமுடியும். இப்போது நாம் அந்த முன்னோக்கும் திசை எது என்பதைத் தேடுவோம்.*

*இரண்டு மேற்கு மற்றும் இரண்டு கிழக்கு திசைகளை நாம் எப்படிக் கண்டு பிடிப்பது? தற்போதுள்ள கிருத்துவக்*

*காலண்டருக்கு 0டிகிரியாக (பிரைம் மெரிடியன்) கிரீன்விச்சை வைத்துள்ளார்கள். அதே போல் யூதர்கள் மெரிடியன் ஆஃப் ஜெருசலத்தை 0டிகிரியாக வைத்துள்ளார்கள். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு முன்னோக்கும் திசை இருந்தது. இந்த அடிப்படையில் நமக்கு நாமே ஒரு முன்னோக்கும் திசையை ஏற்படுத்திக் கொள்ளலாமா? அல்லது உலக மக்களை கவனத்தில் கொண்டு எல்லோருக்கும் பொதுவாக ஒரு தீர்வைக் காணலாமா? நமக்கு இதில் யார் வழிகாட்டுவது எனத் தேடிக் கொண்டிருக் கையில் திருக்குர்ஆனின் 2:143 வசனம் நமக்கு வழிகாட்டுகிறது.*

*இப்போது அந்த இடம் எங்கே இருக்கிறது என நாம் பூமியில் தேடிப்பார்ப்போம்.*

*நமக்கு மீண்டும் இறைவன் தெளிவுபடுத்துகிறான். முன்னோக் கும் திசை ஒன்றை இறைவன் நமக்கு ஏற்படுத்தியுள்ளான். அந்தத் திசையை முன்னோக்க வேண்டும் என கட்டளை யிட்டுள்ளான்.*

*நீங்கள் மற்றவர்களுக்கு சாட்சியாளர்களாகவும், தூதர் உங்களுக்கு சாட்சியாளராகவும் இருப்பதற்காகவே, நாம் உங்களை நடுநிலையான சமுதாயமாய் ஆக்கியுள்ளோம்.*

*தூதரைப் பின்பற்றுவோர் யார்? தம் இரண்டு குதிங்கால் களின் மீது பின்னே திரும்பிச் செல்வோர் யார் என்பதை நன்றாக அறிவதற்காகவே கிப்லாவை அமைத்தோம்...*

***திருக்குர்ஆன் 2:143***

*இவ்வசனம் நமக்கு முன்னோக்கும் திசையை அறிவிக்கிறது. முன்னோக்கும் திசை ஒன்று உண்டு என்றால் அந்தத் திசையை பின்னால் ஒரு முடிவு எல்லை வேண்டும். அதாவது, கிழக்குப் பகுதியில் வசிப்பவர்கள் மக்காவில் உள்ள கஅபத் துல்லாஹ்வை மேற்கு திசையில் முன்னோக்குகிறார்கள். மேற்குப் பகுதியில் வசிக்கும் மக்கள் கிழக்கு திசையில் முன்னோக்குகிறார்கள்.*

**عَنْ نَافِعٍ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ قَالَ مَا بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ قِبْلَةٌ إِذَا تُوُجِّهَ قِبَلَ الْبَيْتِ.**

**رواه مؤطا مالك رقم الحديث 413**

"கஅபாவை நோக்கி முகத்தைத் திருப்பும்போது கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் கஅபா இருக்கிறது" என உமர்(ரலி) கூறினார்கள்.

**அறிவித்தவர்: நாஃபிவு** **நூல்: முஅத்தா மாலிக் 413**

கிழக்கும் மேற்கும் சந்திக்கும் அந்த இரண்டு திசையில் மக்களின் குதிங்கால் (முதுகுப்பகுதி) நேருக்குநேர் ஓர் இடத்தில் இணைய வேண்டும். கஅபாவில் நாம் தொழும்போது நம்முடைய முகமும் நமக்கு எதிரே நிற்பவரின் முகமும் நேருக்கு நேர் சந்திக்கிறது. இவ்வாறுதான் குதிங்கால்களின் அந்த சந்திப்பும் நிகழ்கிறது. குதிங்கால்கள் சந்திக்கும் அந்த இடம்தான் நாளை அளவிடும் இடமாகும். அந்த இடத்தைத்தான் இறைவன் மேற்கண்ட 55:17 வசனத்தில் கூறுகிறான்.

இது முஸ்லிம் சமுதாயத்திற்கு மட்டும் உள்ளதா. அல்லது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதா என்பதை நாம் மீண்டும் மீண்டும் தேடிப்பார்த்தோம். இல்லை இது முஸ்லிம் களுக்கு மட்டும் இல்லை. உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. அதைத் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முன்பு அனுப்பப் பட்ட இறைத்தூதர்கள் ஒவ்வொரு பகுதி மற்றும் மொழிக்குத் தான் தூதர்களாய் இருந்தார்கள். ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை இறைவன் ஒட்டுமொத்த உலகத் திற்கும் உலகம் அழியும் நாள் வரைக்கும் தூதராக அனுப்பி உள்ளான்.

தூதரே! நாம் உம்மை மனிதகுலம் முழுமைக்கும் நற்செய்தி கூறுபவராகவும் அச்சுறுத்தி எச்சரிப்பவராகவே அனுப்பி யுள்ளோம். ஆனால், மனிதர்களில் பெரும்பாலோர் அறியாமல் உள்ளனர். **திருக்குர்ஆன் 34:28**

பூமியில் கிழக்கும் மேற்கும் சந்திக்கும் ஒரு பகுதியில் இரண்டு நாடுகள் அருகே அருகே அமைந்துள்ளன. அவர்கள் ஒரே பகலில் ஆனால் இருவரும் வெவ்வேறு கிழமையிலும் தேதி யிலும் இருக்கிறார்கள்.

ஃபிஜி **(Fiji Iland)** என்னும் தீவில் மக்கள் வசித்து வருகிறார்கள். அதன் தலை நகரம் சுவா **(Suva)** இது கஅபாவிலிருந்து +9 மணிநேரத்தில் உள்ளது. கஅபாவில் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுவதற்கு 9மணிநேரத்திற்கு முன்னதாகவே

இவர்கள் வெள்ளிக்கிழமை ஜுஉம்ஆ தொழவேண்டும். இவர்கள் மேற்கு நோக்கித் தொழவேண்டும். இந்த நாடுதான் உலகில் நாளை முதலில் ஆரம்பிக்கிறது.

இந்நாட்டு மக்கள் ஜுஉம்ஆ தொழும் இதே நேரத்தில் இவர் களுக்கு அருகில் இருக்கும் சமோவா (Samova) இதன் தலைநகர் அபியா (Apia) நாட்டு மக்கள் வியாழக்கிழமையில் லுஹர் தொழுகையை கிழக்கு நோக்கி தொழவேண்டும். இவர்கள் கஅபாவிலிருந்து -14 மணி நேரத்தில் இருக்கிறார்கள். அதாவது கஅபாவில் ஜுஉம்ஆ தொழுகை நடந்தப் பின்னர் அதே நாளுக்கான ஜுஉம்ஆ தொழுகையை இவர்கள் 14 மணி நேரம் கழித்துத் தொழுவார்கள்.

இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். கஅபாவிலிருந்து +9 மணிநேரத்தையும் கஅபாவிலிருந்து -14 மணிநேரத்தையும் கூட்டினால் 23 மணி நேரம்தான் வருகிறது. அப்படியானால் 24 மணி நேரத்தில் இன்னும் 1 மணி நேரம் எங்கே போனது? ஒன்றும் ஆகிவிடவில்லை. அது கடல் பகுதியில் இருப்பதால் நிலப்பரப்பில் கணக்கிடவில்லை. மேலும் இந்த இரண்டு இடங்களுக்கும் இடையே உள்ள தூரம் 1156கி.மீ. ஆகும். ஆனால் அவர்கள் இருவருக்கும் 23 மணி நேரம் வித்தியாசம் இருக்கிறது.

இதைத்தான் இரண்டு கிழக்கு இன்னும் இரண்டு மேற்கு என இறைவன் சொல்கிறான். இந்த இடம்தான் 0டிகிரியும் 360 டிகிரியும் இணையும் இடமாகும்.

இவ்வாறு பூமியின் ஒரு நாள் சுழற்சியை நாம் ஒரு கிழமைக்குக் கொடுக்கிறோம். வாரத்தில் ஏழு நாள்கள் இருக்கின்றன. வாரத்திற்கு பூமி ஏழுமுறை சுழல்கிறது.

புரிதலுக்காக இங்கு ஓர் உதாரணம் கொடுக்கப்படுகிறது.

கஅபாவில் ஹஜ்ருல் அஸ்வத் என்னும் கல் இருக்கும் பகுதி ஒன்று இருக்கிறது. அதன் மூலை கிழக்குப் பகுதியை நோக்கி இருக்கிறது. இம்மூலை ருக்னுல் ஹிந்த் எனவும் அழைக்கப்படும்.

அந்த மூலைதான் தவாஃப் - சுற்றை ஆரம்பிக்கும் இடமாகும். அதில் சுற்றை மேற்கிலிருந்து கிழக்காக சுற்றுகிறோம். இதேபோலதான் பூமியும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சுழல்கிறது. இதை ஆன்ட்டி கிளாக் வய்ஸ் - கடிகாரச் சுற்றுக்கு எதிர் சுற்று என்பார்கள்.

அங்கு தவாஃப் செய்வதற்காக எவ்வாறு ஏழு முறை நாம் சுற்றி வருகிறோமோ அவ்வாறு பூமி வாரத்திற்கு ஏழுமுறை சுழல் கிறது. கஅபாவினுள் எங்கிருந்து நுழைந்தாலும் ஹஜ்ருல் அஸ்வத் கல்லிருந்துதான் சுற்றைத் தொடங்கவேண்டும்.

ஒருமுறை தவாஃப் செய்துவிட்டு மறுபடியும் நாம் தவாஃப் செய்ய விரும்பினால் நம் இஷ்டத்திற்கு 8,9,20 என சுற்றுக் களைக் தொடரமுடியாது. 7சுற்றுக்களை உள்ளடக்கியது தான் ஒரு தவாஃப் எனப்படும். அவ்வாறே ஏழு முறை பூமி சுழல்வதுதான் ஒரு வாரம் எனப்படும். ஒரு வாரத்தை இடையில் முறித்துக் கொள்ளமுடியாது. இஸ்லாம் காட்டித் தந்த இதை அடிப்படையாக வைத்துத்தான் உலகில் இன்று நாள், வாரம் எனக் கணக்கிடப்படுகிறது. ஆனால், இந்த உண்மையை யாரும் வெளியில் சொல்வதில்லை.

## மாதத்தை எவ்வாறு கணக்கிடுதல்?

நாளின் அளவீடு மற்றும் வாரத்தின் அளவீடு குறித்து நாம் அறிந்து கொண்டோம். இப்படியே நாம் வாரங்களை மட்டும் கணக்கு வைத்துக் கொண்டே போனால் நம்மால் இயங்க முடியுமா? நம்முடைய ஒவ்வொரு நொடிப்பொழுதும் கணக் கிடப்பட வேண்டும். நம் செயல்பாடுகள் அறியப்பட வேண்டும். இதற்கு நாம் என்ன செய்யலாம்? வாரங்களை ஒன்றிணைக்கும் ஓர் அளவை நமக்கு வேண்டும். அந்த அளவையை நாம் மாதம் என அழைக்கிறோம். அந்த மாதத்தை நாம் எப்படி நிர்ணயிப்பது? இப்போது நாம் அதை நோக்கிச் செல்வோம்.

பூமி தன் அச்சில் சுழன்று கொண்டு சூரியனைச் சுற்றிவருகிறது. அதாவது தன்னைத்தானே பூமி சுற்றிக் கொண்டு சூரியனைச் சுற்றிவருகிறது. ஆக பூமிக்கு இரண்டு சுற்றுக்கள் இருக்கின்றன. அதன் ஒரு சுற்றை வைத்து நாம் நாளை அளவீடு செய்தோம்.

ஆண்டுகளை அளப்பதற்கு இன்று உலகில் பல நடைமுறைகள் உள்ளன.

கிர்கோரியன் காலண்டர்
யூதர்களின் காலண்டர்
இந்திய மொழிகளின் காலண்டர்கள்
சீனக் காலண்டர்
பாபிலோனியன் காலண்டர்
அரபு நாடுகளின் காலண்டர்கள்

இவை அனைத்தும் காலண்டர்கள். ஒவ்வொருவரும் ஒரு முறையைத் தமக்கென வைத்துக் கொண்டு மாதங்களையும் கணக்கிட்டு வருகிறார்கள். காலத்தை அளப்பதற்காக பூமி சூரியனைச் சுற்றிவரும் நாள்களைப் பிரித்து மாதங்களாகவும், அந்த மாதங்களை ஒன்றிணைத்து ஆண்டுகளாகவும் கணக்கிடுகிறார்கள். இவர்களின் இந்த முறையில் நிறையப் பிரச்சினைகள் உள்ளன. பல நாள்கள் இந்த உலகத்தைவிட்டு காணாமல் போனதுதான் அவர்களின் இந்தக் காலண்டர்கள் செய்த புண்ணியம். இதற்கான ஒரு தீர்வை இவர்கள் இன்றுவரை கொடுக்கவுமில்லை. இவர்கள் இந்த முறையைக் கையாளும் காலமெல்லாம் இவர்களால் இதற்கு தீர்வு கொடுக்கவும் முடியாது.

எப்படி என்றால், பூமி சூரியனைச் சுற்றிவருவதற்கு எடுத்துக் கொள்ளும் கால அளவு 365.2421 நாள்கள் ஆகும். இந்த நாள்களை இவர்கள் பனிரெண்டால் வகுத்து மாதங்களாய் ஆக்கிறார்கள். இப்படி இவர்கள் பனிரெண்டு மாதங்களாய் ஆக்குவதற்கு இதில் எந்த முகாந்திரமும் இல்லை. ஏனெனில், பூமி சூரியனைச் சுற்றிவருவதை பனிரெண்டாகப் பிரிப்பதற்கு எந்த குறியீடும் அளவும் இல்லை.

நாம் காலத்தை இழக்கக்கூடாது. இஸ்லாமிய அடிப்படையில் மனிதன் தன் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடிப்பொழுதிற்கும் பதில் சொல்லியாக வேண்டும். எனவே, இப்போது நாம் காலத்தை அறிந்து செயல்படும் திசையை நோக்கிச் செல்வோம்.

நம்முடைய இறைவன் நமக்கு இப்போதும் அருள்புரிந்திருக் கிறான். நமக்கு அவன் திருக்குர்ஆனை அளித்திருக்கிறான். எதுவாக இருந்தாலும் அதில் உரசிப்பார்த்த பின்னர்தான் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதற்கு இறைவன் சொல்லும் தீர்வு என்ன நாம் திருக்குர்ஆனைக் கேட்போம்.

வானங்களையும், பூமியையும் படைத்த நாளிலிருந்தே அல்லாஹ்விடம் அவனுடைய பதிவேட்டில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டே.... **திருக்குர்ஆன் 9:36**

நம்முடைய இறைவன் நமக்கு மாதங்களின் எண்ணிக்கை பனிரெண்டு என அறிவித்துவிட்டான். அப்படியானால் அவர்கள் பனிரெண்டு மாதங்களாகப் பிரித்திருப்பது சரியா? அந்த முறையை நாமும் ஏற்றுக் கொள்ளலாமா? நாம்

முஸ்லிகள் - இறைவனுக்கு மட்டும் கட்டுப்பட்டவர்கள். எதையும் ஆராயாமல் மார்க்கமாக எடுத்துக் கொள்ளும் துணிச்சல் நமக்கு இல்லை. இறைவனின் அதிகாரத்தில் நாம் கைவைக்கமாட்டோம்.

**عَنْ أَبِي بَكْرَةَ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ الزَّمَانَ قَدْ اسْتَدَارَ كَهَيْئَتِهِ يَوْمَ خَلَقَ اللَّهُ السَّمَوَاتِ وَالْأَرْضَ السَّنَةُ اثْنَا عَشَرَ شَهْرًا مِنْهَا أَرْبَعَةٌ حُرُمٌ ثَلَاثٌ مُتَوَالِيَاتٌ ذُو الْقَعْدَةِ وَذُو الْحِجَّةِ وَالْمُحَرَّمُ وَرَجَبُ مُضَرَ الَّذِي بَيْنَ جُمَادَى وَشَعْبَانَ رواه البخاري رقم الحديث 4662**

“அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் இருந்த (பழைய) நிலைக்கே காலம் திரும்பிவிட்டது. ஓர் ஆண்டு என்பது பன்னிரண்டு மாதங்கள் ஆகும். அவற்றில் நான்கு மாதங்கள் (போரிடுதல் விலக்கப்பட்ட) புனித மாதங்களாகும். (அந்த நான்கு மாதங்களில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வருகின்றவையாகும். அவை ஃதுல்கஅதா, ஃதுல்ஹஜ், முஹர்ரம் மற்றும் ஜுமாதஸ் ஸானீக்கும் ஷஅபானுக்கும் இடையிலுள்ள முளர் குலத்து ‘ரஜப்’ மாதம் ஆகும்” என (‘ஹஜ்ஜத்துல் வதாவில்’ உரையாற்றியபோது) இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

***அறிவித்தவர்: அபூ பக்ரா(ரலி)***
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 4662***

அவர்களைப் போல நாம் 365.2421 / 12 என நாள்களை நாம் வகுத்தால் மாதம் ஒன்றுக்கு 30.4368 நாள்களாக பிரிகிறது. இப்போது நாம் மீண்டும் அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் சென்று மாதங்களில் நாள்களின் எண்ணிக்கைக்கு ஏதேனும் வழி இருக்கிறதா எனத் தேடினோம். அதற்கு இறைத்தூதர்(ஸல்) பதில் கூறியுள்ளார்கள்.

**عن ابْنَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ إِنَّا أُمَّةٌ أُمِّيَّةٌ لَا نَكْتُبُ وَلَا نَحْسُبُ الشَّهْرُ هَكَذَا وَهَكَذَا يَعْنِي مَرَّةً تِسْعَةً وَعِشْرِينَ وَمَرَّةً ثَلَاثِينَ**

**رواه البخاري1913**

“மாதம் இப்படியும் இப்படியுமாய் இருக்கிறது. நாமோ உம்மி சமுதாயம்; (வானஇயற்பியல்படி) எழுதுவதையும், கணக்கிடு வதையும் நாம் அறிந்திருக்கவில்லை. அதாவது சில வேளை இருபத்தொன்பது நாள்களாகவும் சில வேளை முப்பது நாள்களாகவும் இருக்கிறது!” என நபி(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: இப்னு உமர்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 1913**

இப்போது நாம் விழித்துக் கொண்டோம் இஸ்லாமிய அடிப்படையில் மாதங்களின் நாள்கள் 29 அல்லது 30 ஆகத்தான் இருக்க வேண்டும். 29 க்குக் குறைவாகவோ 30க்கு அதிகமாகவோ இருக்கவே கூடாது.

அப்படியானால் இன்று நடைமுறையில் நாம் பின்பற்றிவரும் கிருத்துவக் காலண்டரில் மாதத்தின் நாள்கள் 28,29,30,31 என இருக்கிறதே; இதை நாம் பின்பற்றலாமா? காலண்டரும் இறைச்சட்டமாகும். இதை நாம் மீறினால் நம்முடைய நிலை என்ன? மீண்டும் இந்தக் கேள்வியை திருக்குர்ஆனிடம் வைத்தோம். அது தெளிவாக ஒரு பதிலைச் சொன்னது.

**அந்நஸீவு** - மாற்றுதல் - நிராகரிப்பையே அதிகப்படுத்துகிறது. இதன் மூலம் இறைமறுப்பாளர்களே வழி கெடுக்கப் படுகின்றனர். ஏனெனில், அல்லாஹ் தடுத்ததின் எண்ணிக் கையைப் பூர்த்தியாக்குவதற்காகவும், அல்லாஹ் தடுத்ததை விட்டுவிடுவதற்காகவும் ஓர் ஆண்டில் அதை ஆகுமாக்கிக் கொள்கின்றனர். மற்றோர் ஆண்டில் அதை தடுத்துக் கொள்கின்றனர். இன்னும் இறைமறுப்பாளர் கூட்டத்தை அல்லாஹ் நேர்வழி நடத்த மாட்டான். **திருக்குர்ஆன் 9:37**

அப்படியானால் நமக்குள்ள காலண்டர் எது? இந்தக் கேள்வி யை நாம் மீண்டும் திருக்குர்ஆனிடம் வைத்தோம். சுமார் 14 நூற்றாண்டுக்கு முன்னர் மக்களும் இதே கேள்வியை இறை வனிடம் முன்வைத்தார்களாம் திருக்குர்ஆன் சொன்னது.

பிறைகள் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். “அவை மக்களுக் குக் காலம் காட்டி **(Calendar)** ஆகவும், ஹஜ்ஜின் காலத்தை அறிவிப்பவையாகவும் இருக்கின்றன” எனக் கூறும்.

வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் பின்புறமாக வருவதில் புண்ணியமில்லை. மாறாக, இறைவனுக்கு அஞ்சுபவனே புண்ணியவான். எனவே, வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின்

வாசல்கள் வழியாகவே வாருங்கள்! இன்னும், நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சுங்கள்!

**திருக்குர்ஆன் 2:189**

இறைவனுக்கே எல்லாப் புகழும்! அவன் நமக்குத் தெளி வாக்கிவிட்டான். சந்திரனின் படித்தரங்கள்தான் ஆண்டுகளை அளக்கும் அளவை என நமக்கு அறிவித்துவிட்டான். சந்திரனின் தேய்ந்து வளரும் படித்தரங்கள்தாம் நாள்களின் எண்ணிக்கை. அது ஒருமுறை வளர்ந்து தேய்ந்தால் ஒரு மாதம் என்பதை நமக்கு இறைவன் மீண்டும் கூறுகிறான்.

சூரியனை ஒளி அளிப்பதாகவும், சந்திரனை ஒளியைப் பிரதிபலிப்பதாகவும் அவனே ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறியும் பொருட்டு அதற்கு (நிலவுக்கு) பல படித்தரங்களை உண்டாக் கினான். தக்க காரணங்கள் இன்றி இவற்றை அல்லாஹ் படைக்கவில்லை. அறிவுள்ள மக்களுக்குத் தன் அத்தாட்சிகளை விவரிக்கிறான். **திருக்குர்ஆன் 10:5**

ஆம், பூமி சூரியனைச் சுற்றிவரும் நாள்களைக் கணக்கிடாமல் சந்திரன் பூமியைச் சுற்றிவருவதைத்தான் கணக்கிடவேண்டும்.

நாம் முதலில் நாளை அளந்தோம்; பின்னர் வாரத்தின் நாள்களைக் கணக்கிட்டோம்; இப்போது மாதங்களின் நாள்களை கணக்கிடப்போகிறோம்.

நாம் மேலே பார்த்த திருக்குர்ஆனின் 10:5 வசனத்தில் பல ஆண்டுகளின் எண்ணிகையை நாம் எல்லாக் காலங்களிலும் அறிந்து கொள்வதற்காகவே சந்திரனுக்கு பல படித்தரங்களை ஏற்படுத்தியதாக இறைவன் கூறுகிறான். இன்னும் 55:5 வசனத் தில் சூரியனும் சந்திரனும் கணக்கின்படிதான் இருக்கின்றன எனக் கூறுகிறான். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு ஆய்வு செய்ய நாம் செல்வோம்.

இப்போது நமக்குத் தெரிகிறது; சந்திரன் பூமியைச் சுற்றி வருவதற்கு ஆகும் காலம் 29 நாள்களாகவும், சில வேளைகளில் 30 நாள்களாகவும் இருக்கின்றன. இதில் எந்த மாதத்தில் 29 நாள்கள் என்பதையும், எந்த மாதத்தில் 30 நாள்கள் என்பதையும் அறிந்து கொள்வதற்கு நாம் வைத்துள்ள அளவை என்ன? சந்திரனை அளக்கும் முறையை நமக்கு யார் கற்றுத் தருவது?

*பூமி தன் அச்சில் சுழலும்போது சூரியனை தினமும் குறிப் பிட்ட இடத்தில் மாற்றமில்லாத நிலையில் நாம் பார்த்து வருகிறோம். ஆனால் சந்திரனை நம்மால் தினமும் ஒரே நிலையில் பார்க்கமுடியவதில்லை. அதன் வளர்ச்சி விகிதத்தில் வித்தியாசத்தைக் காண்கிறோம். இது ஏன்? எவ்வாறு?*

*சந்திரனும் உருண்டை வடிவம் கொண்ட ஒரு துணைக் கோள். நாம் சந்திரனைப் பார்க்கும்போதெல்லாம் அதன் ஒரே பகுதியைத்தான் பார்க்கமுடிகிறது. மறு பகுதியை நம்மால் பாக்கமுடியாது. ஆனால், அந்த ஒரு பகுதியில் நாம் பார்ப்பது சூரியனிலிருந்து வரும் வெளிச்சத்தின் பிரதிபலிப்பைத்தான். ஆனால் அதையும் நம்மால் ஒரே மாதிரியாகப் பார்க்க முடிவதில்லை. இதைத்தான் 2:189 வசனம் நமக்கு தேதி எனக் குறிப்பிடுகிறது.*

*இப்போது நமக்கு ஒன்று தெரிந்தாக வேண்டும். அதாவது சந்திரனின் சுற்றிற்கான அளவீட்டை நாம் எங்கிருந்து தொடங்கி எங்கு முடிப்பது? இந்தக் கேள்வியையும் நாம் திருக்குர்ஆனிடம் வைத்தோம்.*

*இன்னும் சந்திரன் ஒளி மங்கி, சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்க்கப் பட்டு விடும்.* ***திருக்குர்ஆன் 75:8,9***

*சந்திரன் ஒளியை இழக்கும் ஒரு நேரத்தை மேற்கண்ட வசனம் குறிப்பிடுகிறது. இப்படி ஒரு நிகழ்வு நடப்பதை நாம் ஆய்வு செய்யும்போது, சூரியனைச் சந்திரன் மறைக்கும் ஒரு நிகழ்வை நாம் ஆண்டுதோறும் பார்த்து வருகிறோம். இதை நாம் சூரியகிரகணம் என அழைக்கிறோம். இந்த நேரத்தில் சந்திரன் ஒளியற்றிருப்பதை நாம் காண்கிறோம். ஒளியற்று இருக்கும் இந்த நிலை சந்திரனுக்கு அதன் ஒவ்வொரு சுற்றிலும் ஏற்படுகிறது. இது ஏற்படும்போது பூமி, சந்திர, சூரியன் ஒரே நேர்கோட்டில் வருகின்றன. இதை நாம் அமாவாசை* ***(New Moon)*** *என நாம் அழைக்கிறோம். ஹதீஸ்களில் குறிப்பிடப்படும் கபிய, உக்மிய, குப்பிய, கும்ம என்ற சந்திரனைப் பார்க்க முடியாத நிலையும் இதுதான் எனப் புரிய முடிகிறது.*

*சந்தினைக் கண்ணால் காணமுடியாத இந்த நிலையை நாம் 0 எனக் கணக்கிட்டு சந்திரனின் படித்தரங்களை எண்ண ஆரம்பித்தால் மாதம் 29 நாள்களைக் கொண்டதாய் இருந் தால் 28 படித்தரங்களை கண்ணால் காணமுடியும். மாதம் 30 நாள்களைக் கொண்டதாய் இருந்தால் 29 படித்தரங்களை*

HCI

கண்ணால் காணமுடியும் என்ற நிலைதான் இருக்கிறது. இதைத்தான் திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

*பழைய பேரீத்தங் குலையின் பாளையைப் போல் ஆகும் வரை சந்திரனுக்குப் பல படித்தரங்களை ஏற்படுத்தியிருக்கிறோம்.*

**திருக்குர்ஆன் 36:39**

பார்க்கமுடிகிற ஒவ்வொரு படித்தரத்தையும் மாதத்தின் நாள்களுக்குத் தேதியாகக் கணக்கிட்டு வந்தால் ஒரு மாதம் 28 நாள்களைக் கொண்டதாகவும், ஒரு மாதம் 29 நாள்களைக் கொண்டதாகவும் தான் இருக்கும். அப்படியானால் ஒரு நாளின் தேதி எங்கே மறைந்துபோனது? இன்று மக்கள் தடுமாறுவது இதில்தான். ஆக, சந்திரக் கணக்கில் மாதத்தின் நாள்களை 29 ஆகவும் 30 ஆகவும் நாம் எப்படி எடுத்துக் கொள்வது.

இங்கு மேற்குறிப்பிட்டுள்ள திருக்குர்ஆனின் வசனங்களை நாம் நன்றாக மறுபடியும் படிக்க வேண்டும். மாதத்தின் கடைசியில் சந்திரன் அறிவிக்கும் தன் ஒளியிழந்த நிலையை ஒரு நாளாக இறைவன் அறிவிக்கிறான். அதைத்தான் மாதத்தின் கடைசித் தேதி எனவும், 0 எனவும் நாம் குறிப்பிடுகிறோம்.

பூமி, சந்திரன், சூரியன் மூன்றும் நேர்கோட்டிற்கு வரும்போது சந்திரனின் ஒரு சுற்று முடிவடைந்து மறு சுற்று ஆரம்பமாகிறது. முதல் சுற்று முடிவடைவதும் மறு சுற்று ஆரம்பமாவதும் ஒரே நேரத்தில்தான் நடக்கிறது. அந்தப் பிறை பிறக்கும் இடத்தில் சூரியன் உச்சியில்தான் இருக்கும். மக்ரிப்பிலோ, இரவிலோ, ஃபஜ்ரிலோ பிறை பிறக்காது.

இதன் அடிப்படையில் நாம் மாதத்தை இப்போது ஆரம்பிப் போம். இங்கு ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். எதையுமே நாம் ஒன்று என்றோ முதல் என்றோ ஆரம்பிக்க முடியாது. ஏனெனில் ஒன்றுக்கு முன்பு முக்கால் இருக்கிறது; அதற்கு முன்பு அரை இருக்கிறது; அதற்கு முன்பு கால் இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம்.

உதாரணமாக, 1 நேரடியாக வந்துவிடுதில்லை 0.1 0.2 0.3 0.4 0.5 0.6 0.7 0.8 0.9 என்ற நிலைகளைக் கடந்துதான் 1 என்னும் எண் வருகிறது.

ஆக, நாம் ஒரு மாதத்தின் கடைசி நாளில் சூரியன் உச்சியில் இருக்கும் நேரத்தில் 29 மற்றும் 0 அல்லது 30 மற்றும் 0 என்ற

நிலையை அடைகிறோம். இந்நிலையை அடைந்துவிட்டால் அடுத்த மாதத்திற்கான புதிய சுற்று மட்டுமே ஆரம்பிக்கிறது. இதைவைத்துக் கொண்டு நாம் அப்போதே தேதியை மாற்ற முடியாது. காரணம் அன்றைய தேதி அன்றைய நாளுக்குரிய தாகும். அந்த நாளும் அந்த மாத்திற்கே உரியதாகும். இதைத் தான் நபி(ஸல்) பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

عَنْ أَبِي الْبَخْتَرِيِّ قَالَ خَرَجْنَا لِلْعُمْرَةِ فَلَمَّا نَزَلْنَا بِبَطْنِ نَخْلَةَ قَالَ تَرَاءَيْنَا الْهِلَالَ فَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ ثَلَاثٍ وَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ لَيْلَتَيْنِ قَالَ فَلَقِينَا ابْنَ عَبَّاسٍ فَقُلْنَا إِنَّا رَأَيْنَا الْهِلَالَ فَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ ثَلَاثٍ وَقَالَ بَعْضُ الْقَوْمِ هُوَ ابْنُ لَيْلَتَيْنِ فَقَالَ أَيَّ لَيْلَةٍ رَأَيْتُمُوهُ قَالَ فَقُلْنَا لَيْلَةَ كَذَا وَكَذَا فَقَالَ إِنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ اللَّهَ مَدَّهُ لِلرُّؤْيَةِ فَهُوَ لِلَيْلَةٍ رَأَيْتُمُوهُ

رواه مسلم رقم الحديث 1820

நாங்கள் உம்ராவுக்காக புறப்பட்டபோது பத்னு நக்லா என்னும் இடத்தில் இறங்கினோம். எங்களுக்கு பிறை தென்பட்டது. எங்களில் சிலர் அது **இப்னு ஸலாஸ்** - மூன்றாம் நாள் பிறை என்றனர். எங்களில் இன்னும் சிலர் அது **இப்னு லைலதய்ன்** - இரண்டாம் நாள் பிறை என்று கூறினர். நாங்கள் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களைச் சந்தித்து, நாங்கள் பிறை பார்த்தோம் எங்களில் சிலர், அது **இப்னு ஸலாஸ்** - மூன்றாம் நாள் பிறை என்றனர். இன்னும் எங்களில் சிலர் அது **இப்னு லைலதய்ன்** - இரண்டாம் நாள் பிறை எனக் கூறினர் என்பதைத் தெரிவித்தோம். நீங்கள் எந்த நாளில் அதைப் பார்த்தீர்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) கேட்டார்கள். நாங்கள் அதை இன்ன இன்ன கிழமையில் பார்த்தோம் எனக் கூறினோம். அதற்க அவர்கள், நிச்சயமாக அதைப்பார்ப்பதற் காக அல்லாஹ் நீட்டிருக்கிறான். நீங்கள் அதை எந்தக் கிழமையில் பார்த்தீர்களோ அது அதற்குரியதுதான் என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள் என தெரிவித்தார்கள்.

**அறிவித்தவர்: அபுல் பக்தரீ**

**நூல்: ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1820**

29 அல்லது 30 தேதிகளில் பிறை தென்பட்டாலும், அது இருப்பதை நாம் அறிந்து கொண்டாலும் அது அந்த மாதத்தின் கடைசி நாளுக்குரிய பிறைதானே தவிர வரும் மாதத்தின் முதல் நாளுக்கான பிறை அல்ல. இதை இன்னும் அழுத்தமாகவே நாம் சொல்ல விரும்புகிறோம்.

பூமி தன் அச்சில் ஒருமுறை சுழல்வதை ஒரு நாள் எனவும், ஏழு முறை சுழல்வதை ஒரு வாரம் என்றும், சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றிவரும் கால அளவை ஒரு மாதம் என்றும் சந்திரன் 12 முறை பூமியைச் சுற்றிவருவதை ஓர் ஆண்டு என்றும் அல்லாஹ் கணக்கை நமக்குப் போதித்துள்ளான். இதைத்தான் உலக மக்கள் அனைவருக்கும் நாள்காட்டி - காலண்டர் என அல்லாஹ் குறிப்பிடுகிறான். இந்த அடிப் படையில் மட்டும்தான் பல ஆண்டுகளின் கணக்கை நம்மால் துல்லியமாகக் கணக்கிட முடியும் என்றும் அல்லாஹ் சொல் கிறான். இந்தக் காலண்டருக்கு மாற்றமான எந்தக் காலண் டரையும் இறைநம்பிக்கையாளர்கள் ஏற்றுக் கொள்ளவே கூடாது என்றும் அல்லாஹ் சொல்கிறான்.

சூரியன் நமக்கு நாள் மாறுவதை முறையாக அதாவது கிழமையை அறிவிக்கிறது. அல்லாஹ் விதியாக்கியுள்ள சந்திரனின் படித்தரங்கள் மாறும் கிழமைகளுக்கு தேதியை அறிவிக்கின்றன. நாள் மாறுவதை தேதியைவைத்து கணக்கிட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் தேதியும் நாளும் ஒத்துப் போக வேண்டும். இதை சரி செய்வதற்குத்தான் அல்லாஹ் பிறையின் வடிவங்களை மாறிமாறி வரச்செய்கிறான். இந்த விதிப்படிதான் அல்லாஹ் உலகத்தை படைத்த நாளிலிருந்தே செயல்படுத்திவருகிறான்.

## பிறைபிறந்துவிட்டால் மாதத்தை எப்படி ஆரம்பிப்பது ?

ஹிஜ்ரி 1430 ஆம் ஆண்டு துல் கஅதா மாதத்தின் கடைசி நாள் 29 ஆகும். அன்று திங்கக்கிழமை (16.11.2009) ஆகும். அப்போது சர்வதேச நேரம் 19:14 ஆகும். துல் ஹஜ் மாதத்திற்கான புதிய சுற்றை சந்திரன் தொடங்குகிறது. இது தேய்பிறையிலிருந்து வளர்பிறையாக மாறும் பகுதியாகும். தென் அமெரிக்காவுக்கு தெற்கே இருக்கும் தென்பசிபிக் கடல் பகுதில் இந்த Conjunction நடக்கிறது. பிறை பிறக்கும்போது, அது பிறக்கும் இடத்தில் சூரியன் உச்சியில் இருக்கும் என்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

வழமையாக உலகில் முதல் நாளை முதன்முதலாகத் தொடங்கிவரும் ஃபிஜி ஹிஜ்ரி 1430 துல் ஹஜ் மாதத்தின் முதல் நாளைத் தொடங்குகிறது. உலகில் திங்கட்கிழமை பிறை பிறக்கும்போது அவர்கள் செவ்வாய்க்கிழமை காலை 07.05 மணியில் இருப்பார்கள். பிறை பிறந்த திங்கள்கிழமை 29 ஆம் நாள். அன்று புதிய பிறைபிறக்கிறது. பிறந்த பிறையை நாம் 0 எனக் குறிப்பிடுகிறோம். அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை மாதத்தின் 1 ஆம் நாள் ஆகும். 29 + 0 = 29, 0+1 = 1.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள திருக்குர்ஆனின் 55:17 வசனத்தின்படி உலகத்தில் இரண்டு கிழமை மற்றும் இரண்டு தேதிகள் எப்போதும் இருக்கின்றன.

ஹிஜ்ரி 1430 துல் ஹஜ் மாதத்தின் பிறை சர்வதேச தேதிக் கோட்டிற்கு கிழக்கே பிறந்துள்ளது. இதை தேதிக் கோட்டிற்கு மேற்கே உள்ளவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், பிறைபிறந்த இடத்தில் இருப்பவர்கள் திங்கக் கிழமையில் இருக்கிறார்கள். மேற்கு திசையில் இருப்பவர்கள் செய்வாய்கிழமையை அடைந்துவிட்டார்கள்.

ஒவ்வொருகிழமைக்கும் தேதியை அறிவிப்பது சந்திரனின் வேலையாகும். தேதியும் கிழமையும் மாறாமல் இருக்க வேண்டும். ஃபிஜி நாட்டினர் செவ்வாய்க்கிழமையில் நுழைந்து விட்டால் அந்த நாளுக்கான தேதியை சந்திரன் அறிவிக்க வேண்டும். சந்திரன் சரியாக தன் அறிவிப்பைச் செய்துவிட்டது.

இப்போது ஃபிஜி நாட்டினர் அந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் அப்படி ஏற்க மறுத்து விட்டால் கிழமையும் தேதியும் மாறிவிடும். அதாவது அவர்கள் அதை புதன் கிழமைதான் பின்பற்ற வேண்டும் என்றால் மறுபடியும் உலகத்தில் ஒரு தேதியில் இரண்டு கிழமைகள் என குழப்பம் ஏற்பட்டுவிடும். இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் சர்வதேச சந்திரக் காலண்டரைக் கொடுத்தாக வேண்டும். கண்ணால் பார்த்து அல்லது தகவல் கேட்டுத்தான் மாதத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றால் உலகத்தில் ஒரு பகுதி மக்கள் ஒரு நாள் இரண்டு நாள்கள் என இழந்து கொண்டே இருப்பார்கள்.

குறைகள் தாங்கிய, தவறாக இருக்கும், மனிதர்கள் ஏற்படுத்தி யுள்ள கிருத்துவக் காலண்டரை நாம் பின்பற்றி வருவதுதான் இப்போது நமக்கு பெரும்பிரச்சினையாய் இருக்கிறது.

நம்முடைய எல்லாக் காரியங்களையும் அந்தக் காலண்டரின் அடிப்படையில் செய்துவருவதால் சந்திரக் காலண்டர் எப்படி இருந்தால் என்ன என கண்டுகொள்ளாமல் விட்டு விட்டோம். சந்திரக் காலண்டரைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருந்தால் நிச்சயமாய் இதற்கு ஒரு தீர்வைச் சொல்லி இருப்போம். அதாவது கிழமை மாறினால் தேதி மாறும், தேதி மாறினால் கிழமை மாறும்; எனவே ஒரு கிழமைக்கு ஒருதேதிதான்; அதில் எந்தத் தவறும் நிகழவே கூடாது. இதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். ஒரு தேதிக்கு இரண்டு கிழமையும், இரண்டு கிழமைக்கு ஒரு தேதியும் என நாம் மாற்றியமைத்தால் மேசமான பெரும் பெரும் குழப்பங்கள் உண்டாகும் என்பதை அறியவேண்டும். இதை முஸ்லிம்கள் தவிர மற்ற மக்கள் நன்றாகப் புரிந்திருக்கிறார்கள். எனவேதான், கிர்கோரியன் காலண்டரில் பிப்ரவரி மாதத்தை 2000 ஆண்டில் மட்டும் 30 தேதிகளாக ஆக்க வேண்டும். அப்படி செய்தால்தான் காலண்டரில் ஏற்பட்டுள்ள தவறை சரிசெய்ய வேண்டும் எனக் கூறியதை உலக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இப்படி எல்லாம் பிரச்சினைகள் வரக்கூடாது என்பதற்காகத் தான் இறைவன் நமக்கு அழகிய தீர்வைக் கொடுத்துள்ளான். அதை பின்வரும் வசனம் நமக்குத் தெளிவு படுத்துகிறது.

பிறைகள் குறித்து உம்மிடம் கேட்கிறார்கள். “அவை மக்களுக்குக் காலம் காட்டி **(Calendar)** ஆகவும், ஹஜ்ஜின் காலத்தை அறிவிப்பவையாகவும் இருக்கின்றன” என (தூதரே) கூறும். வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் பின்புறமாக வருவதில் புண்ணியமில்லை. மாறாக, இறைவனுக்கு அஞ்சுப வனே புண்ணியவான். எனவே, வசிக்கும் இடங்களுக்குள் அவற்றின் வாசல்கள் வழியாகவே வாருங்கள்! இன்னும், நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சுங்கள்!

**திருக்குர்ஆன் 2:189**

சந்திரன் ஏன் எதற்கு என்பதை இங்கு இறைவன் தெளிவு படுத்துகிறான்.

சந்திரனின் படித்தரங்கள் காலண்டர் ஆகும்.

இதை வைத்துத்தான் காலத்தைக் கணக்கிட வேண்டும்.

வணக்கவழிபாடுகளை இதை வைத்துத்தான் அமைத்துக் கொள்ள வேண்டும்.

*பிறைபிறந்துவிட்டால் உலகத் தேதிக் கோட்டிற்கு கிழக்கே இருப்பவர்கள் தங்களின் கிழமையை மாதத்தின் முதல் நாளாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அதை அந்த மாதத்தின் கடைசி நாளாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், தேதிக் கோட்டிற்கு மேற்குப் பகுதியில் இருப்பவர்கள் முன்னே செல்வபவர்கள்; தங்களின் கிழமையை அடுத்த மாதத்தின் முதல் நாளாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் அல்லாஹ் 2:185 வசனத்தில் விளக்கமாகச் சொல்கிறான்.*

*மனிதர்களுக்கு (சீரிய) வழிகாட்டியாகவும், தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டதாகவும், (சத்தியம் மற்றும் அசத்தியத்தைப்) பிரித்து அறிவிப்பதாகவும் உள்ள குர்ஆன் ரமளான் மாதத்தில்தான் அருளப்பட்டது. எனவே,* ***உங்களில் அம்மாதத்தை அடைந்தவர்*** *நோன்பு நோற்கட்டும்...*

***திருக்குர்ஆன் 2:185***

*எனவே இந்த அடிப்படையில் செயல்படும்போது மட்டும் தான் குழப்பங்கள் தவிர்க்கப்படும். இறைவன் கூறியுள்ள இந்த முறைக்கு மாற்றமாக செயல்படும்போது குழப்பங்கள் நீடிக்கும் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.*

*பிறைபிறந்துவிட்டால் அடுத்த நிமிடமே நாம் நாளை ஆரம்பிக்க வேண்டியது தானே ஏன் தாமதப்படுத்த வேண்டும் என்ற கேள்வியை எழுப்புவோரும், அந்த நாளை யாருமே எண்ணிக்கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது பொறுத்திருந்து அதற்கு அடுத்த நாளைத்தான் முதல் நாளாக்க வேண்டும் என்று கூறுவோரும். ஃபஜ்ர் நேரத்திற்குள் வருபவர்கள் மட்டும்தான் எடுக்க வேண்டும் என்று கூறுபவர்கள் இங்கு மேலே தரப்பட்டுள்ள விளக்கத்தை ஒன்றுக்கு இரு முறைபடித்தறிந்தால் இன்ஷா அல்லாஹ் தெளிவு கிடைக்கும்.*

## தவறும் தலைவர்களும் தடுமாறும் மக்களும்

*திருக்குர்ஆன் மற்றும் நபி(ஸல்) காட்டித் தந்த முறைப்படி ஆட்சி செய்யக்கூடிய இஸ்லாமிய நாடு ஒன்றைக்கூட இன்றைய உலகில் காணமுடியவில்லை. முஸ்லிம் நாடுகளே இருக்கின்றன; அந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் இஸ்லாமிய சட்டங்களில் ஒரு பகுதியை மட்டுமே செயல்படுத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் முஸ்லிம் நாடுகளிலும்,*

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய நாடுகளிலும், முஸ்லிம்கள் சிறுபான்மையாகக் வாழக்கூடிய நாடுகளிலும் தனித்தனியாக இஸ்லாமிய இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த வகையில் இஸ்லாமிய சமுதாயத்தில் பிரிவினைக்குப்போதுமான வேலைகளை இவர்கள் செய்து வருகிறார்கள். இந்த அமைப்புகளின் பொறுப்பாளர்கள் இஸ்லாமிய சட்டங்களை எல்லாம் அப்படியே அமல் படுத்து வதாகக் கூறிவருகிறார்கள். ஆனால், இதை நம்பமுடியவில்லை.

ஒரு இயக்கத்தின் பொறுப்பாளர்கள் மற்றொரு இயக்கத் தோடு ஒன்றிணைந்து செயல்படுவதில்லை. ஒரே நாட்டில் இருக்கும் இஸ்லாமிய அமைப்புகள்கூட இஸ்லாத்திற்கு எதிரான பல்வேறு அச்சுறுத்தல்கள் இருப்பதை அறிந்த நிலையிலும் தங்களுக்குள் ஒற்றிணைந்து செயல்படுவதற்குத் தயாராக இல்லை. ஒருவரை ஒருவர் விசமர்சிப்பதிலும், தங் களையும் தங்களின் இந்த புண்ணிய பதவிகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக எதையும் செய்யத் துணிந்தவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் வாக்கு பாக்காகி விடுகிறது. நேற்றுவரை பேசிவந்ததை இன்று மறுக்கிறார்கள். இன்று பேசுவதை இவர்கள் நாளை மறுக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம். இவர்கள் தங்களின் இயக்கங்களை வளர்க்கப் பிறந்தவர்கள்; இஸ்லாத்தை வளர்க்கப் பிறந்தவர்கள் அல்லர். இவர்களின் இந்த நிலை பெரும் கவலையை அளிக்கிறது.

ஏனெனில், இது அவர்களை மட்டும் தாக்கும் நோயல்ல ஒட்டு மொத்த சமுதாயத்தையும் அழிவில் தள்ளும் புற்றுநோயாகும். இந்த நோய் சமீப காலமாக மக்களிடம் அதிவேகமாகப் பரவிவருகிறது. இதற்கு வைத்தியம் பார்க்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. அந்த வைத்தியம் இன்ஷா அல்லாஹ் இந்த சர்தேச ஹிஜ்ரா காலண்டரை அமைத்து அதன்படி அனைவரும் ஒன்றாகச் செயல்படுவதன் மூலமாகக் கூட நடக்கலாம். சர்வதேச இஸ்லாமிய சகோதரத்துவத்துக்கு இது வழிவகுக்கலாம்.

இயக்கங்களின் பொறுப்பாளர்களில் சிலருக்கு தங்களின் பொறுப்புக்களை உணரும் பண்புகூட இருப்பதில்லை. சுயநலமும், கர்வமும், சர்வதிகாரமும், பாரபட்சம் காட்டும் தன்மையும் மலிந்து காணப்படுகிறது. இவர்களில் சிலர் இன்று இறைச்சட்டங்களைக்கூட அடகுவைக்கவும் தயாராகி

இருக்கிறார்கள். சகல காரியங்களையும் செய்துமுடித்துவிட்டு நாங்களும் இஸ்லாமிய நிர்வாகிகள் எங்களுக்குக் கட்டுப்பட வேண்டும் எனத் துணிச்சலாகக் கட்டளையிடுகிறார்கள். இஸ்லாமிய பொறுப்பாளர்கள் என்றால் அவர்களும் சரியாக இருக்க வேண்டும், மக்களையும் சரியாக வழிநடத்த வேண்டும். அப்படி அவர்கள் சரியாக வழிநடத்தும்போது அந்த பொறுப்பாளர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு மக்கள் வாழவேண்டும். அந்தப்பொறுப்பாளர்கள் இஸ்லாமிய சட்டங்களில் தவறாக வழிகாட்டும்போதும் அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பது இஸ்லாம் இல்லை.

இறைச்சட்டங்களோடு விளையாடுபவர்களுக்குக் கட்டுப் பட்டால் அதற்குத் துணைபோன குற்றத்திற்கு ஆளாக நேரிடும். இறைவன் வித்துள்ள சந்திரக் கணக்கின்படி முஸ்லிம் சமுதாயம் செயல்படுவது கட்டாயமாகிறது. இது தவறும் போது இபாதத்துக்கள் - வணக்கவழிபாடுகள் தவறான கால கட்டங்களில் அமைந்துவிடுகின்றன. இந்த விஷயத்தில் முஸ்லிம் சமுாதயத்திடம் ஒன்றுபட்ட சிந்தனை வேண்டும். இயக்கப் பொறுப்பாளர்கள் தங்களுக்குக் கீழுள்ளவர்களை “இப்படித் தான் செயல்படவேண்டும்'' என வணக்கவழிபாடுகளில் நிர்ப்பந்திக்கக்கூடாது. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் சில நல்லவர்கள் இருப்பதையும் நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். இதை நாம் மறுப்பவர்கள் அல்லர்.

ஒரே தலைமை ஒரு ஜமாஅத்தான் இருக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இஸ்லாத்தில் இடமில்லை. ஆனால், தலைமைக்குக் கட்டுப்படுதல் என்பது நன்மையான விஷயங்களில்தான் கட்டுப்பாடே தவிர தீமையான மற்றும் தவறான வழிகாட்டுதல்களில் கட்டுப்பாடு ஒருபோதும் இல்லை என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். அது தொடர்பாக நபி(ஸல்) கூறியுள்ள செய்திகள் இன்றைய சூழலில் அவசியம் கருதி இங்கு தரப்படுகின்றன.

**عَنْ أَبِي ذَرٍّ قَالَ قَالَ لِي رَسُولُ اللَّهِ كَيْفَ أَنْتَ إِذَا كَانَتْ عَلَيْكَ أُمَرَاءُ يُؤَخِّرُونَ الصَّلَاةَ عَنْ وَقْتِهَا أَوْ يُمِيتُونَ الصَّلَاةَ عَنْ وَقْتِهَا قَالَ قُلْتُ فَمَا تَأْمُرُنِي قَالَ صَلِّ الصَّلَاةَ لِوَقْتِهَا فَإِنْ أَدْرَكْتَهَا مَعَهُمْ فَصَلِّ فَإِنَّهَا لَكَ نَافِلَةٌ وَلَمْ يَذْكُرْ خَلَفٌ عَنْ وَقْتِهَا.رواه مسلم رقم الحديث 1027**

தொழுகையை அதற்குரிய நேரத்தை விட்டும் தாமதப் படுத்து கிற அல்லது தொழுகையை அதற்குரிய நேரத்தை விட்டும் நாசமாக்குகிற தலைவர்கள் உம் மீது நியமிக்கப் பட்டால் நீ எப்படி இருப்பீர் என நபி(ஸல்) என்னிடம் கேட்டார்கள்.

**عَنْ عُبَادَةَ بْنِ الصَّامِتِ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّهَا سَتَكُونُ عَلَيْكُمْ بَعْدِي أُمَرَاءُ تَشْغَلُهُمْ أَشْيَاءُ عَنْ الصَّلَاةِ لِوَقْتِهَا حَتَّى يَذْهَبَ وَقْتُهَا فَصَلُّوا الصَّلَاةَ لِوَقْتِهَا فَقَالَ رَجُلٌ يَا رَسُولَ اللَّهِ أُصَلِّي مَعَهُمْ قَالَ نَعَمْ إِنْ شِئْتَ وَقَالَ سُفْيَانُ إِنْ أَدْرَكْتُهَا مَعَهُمْ أُصَلِّي مَعَهُمْ قَالَ نَعَمْ إِنْ شِئْتَ رواه أبو داؤد رقم الحديث 369**

நிச்சயமாக எனக்குப் பின்னால் சில தலைவர்கள் வருவார்கள். அவர்களின் பணிகள்அவர்களை தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவதை விட்டும் திருப்பிவிடும். எதுவரை என்றால் தொழுகையின் நேரமே போய்விடும். அப்போது நீங்கள் தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுதுவிடுங்கள். அப்போது, இறைத்தூதர் அவர்களே நான் அவர்களை அடைந்தால் அவர்களுடன் தொழுதுகொள்ளலாமா என ஒருவர் கேட்டார். அதற்கு ஆமாம் நீ விரும்பினால் தொழுது கொள் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: உபாதா இப்னு ஸாமித்(ரலி)**
**நூல்: அபூ தாவூத், ஹதீஸ் எண்: 369**

திருக்குர்ஆன் மற்றும் நபிவழிக்குப் புறம்பாகச் செயல்படத் தூண்டும் தலைவர்களுக்குக் கட்டுப்பட வேண்டியதில்லை என்பதை மேற்கண்ட ஹதீஸ்கள் கூறுகின்றன. அப்படியே கட்டுப்பட்டு நடந்தால் மறுமையில் ஏற்படும் நிலை குறித்து பின்வரும் வசனங்கள் தெளிவு படுத்துகின்றன.

"எங்களின் இரட்சகனே! நிச்சயமாக நாங்கள் எங்களின் தலைவர் களுக்கும், எங்களின் பெரியவர்களுக்கும் வழிப் பட்டோம்; அவர்கள் எங்களை வழி கெடுத்து விட்டார்கள்" என்றும் அவர்கள் கூறுவார்கள்.

"எங்களின் இரட்சகனே! அவர்களுக்கு இருமடங்கு தண் டனையைத் தருவாயாக! அவர்களைப் பெரும் சாபத் தாலும் சபிப்பாயாக" (என்றும் கூறுவர்). **திருக்குர்ஆன் 33:67, 68.**

عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ بَعَثَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ سَرِيَّةً وَأَمَّرَ عَلَيْهِمْ رَجُلًا مِنْ الْأَنْصَارِ وَأَمَرَهُمْ أَنْ يُطِيعُوهُ فَغَضِبَ عَلَيْهِمْ وَقَالَ أَلَيْسَ قَدْ أَمَرَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنْ تُطِيعُونِي قَالُوا بَلَى قَالَ قَدْ عَزَمْتُ عَلَيْكُمْ لَمَا جَمَعْتُمْ حَطَبًا وَأَوْقَدْتُمْ نَارًا ثُمَّ دَخَلْتُمْ فِيهَا فَجَمَعُوا حَطَبًا فَأَوْقَدُوا نَارًا فَلَمَّا هَمُّوا بِالدُّخُولِ فَقَامَ يَنْظُرُ بَعْضُهُمْ إِلَى بَعْضٍ قَالَ بَعْضُهُمْ إِنَّمَا تَبِعْنَا النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فِرَارًا مِنْ النَّارِ أَفَنَدْخُلُهَا فَبَيْنَمَا هُمْ كَذَلِكَ إِذْ خَمَدَتْ النَّارُ وَسَكَنَ غَضَبُهُ فَذُكِرَ لِلنَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ لَوْ دَخَلُوهَا مَا خَرَجُوا مِنْهَا أَبَدًا إِنَّمَا الطَّاعَةُ فِي الْمَعْرُوفِ

**رواه البخاري رقم الحديث 7145**

*இறைத்தூதர்(ஸல்) ஒரு படைப்பிரிவை அனுப்பி, அவர்களுக்கு அன்சாரிகளில் ஒருவரைத் தளபதியாக்கி, அவருக்குக் கட்டுப் பட்டு நடக்கும்படி படைவீரர்களுக்கு உத்தரவிட்டார்கள். அந்த அன்சாரி (ஒரு கட்டத்தில்) படைவீரர்களின் மீது கோபம் கொண்டார்.*

*"நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என இறைத் தூதர்(ஸல்) கட்டளையிடவில்லையா?' எனக் கேட்டார்.*

*அவர்கள், "ஆம்" என்றனர்.*

*"விறகைச் சேகரித்து நெருப்பை மூட்டி அதில் புகுந்து விடும் படி உங்களுக்கு நான் உத்தரவிடுகிறேன்" என அவர் கூறினார்.*

*அவ்வாறே அவர்கள் விறகைச் சேகரித்து நெருப்பை மூட்டினர். அதில் நுழைய நினைத்தபோது ஒருவரையொருவர் பார்த்த படி நின்று கொண்டனர். அவர்களில் ஒருவர்,*

*''(நரக) நெருப்பிலிருந்து தப்பிக்கத்தானே நாம் இறைத் தூதர்(ஸல்) அவர்களைப் பின்பற்றினோம்; அவ்வாறிருக்க, அதில் நாம் நுழைய வேண்டுமா?" எனக் கேட்டார்.*

*இதற்கிடையே நெருப்பும் அணைந்தது; அவரின் கோபமும் தணிந்தது. பிறகு இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் இச்செய்தி தெரிவிக்கப்பட்டபோது.*

*''அதில் மட்டும் அவர்கள் புகுந்திருந்தால் அதிலிருந்து ஒருபோதும் வெளியேறி இருக்கமாட்டார்கள்; கீழ்ப்படிதல்*

*என்பதெல்லாம் நன்மையில் தான்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.*
**அறிவித்தவர்: அலீ(ரலி)**
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 7145***

**عَنْ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْـــهِ وَسَـــلَّمَ قَـــالَ السَّـــمْعُ وَالطَّاعَةُ عَلَى الْمَرْءِ الْمُسْلِمِ فِيمَا أَحَبَّ وَكَرِهَ مَا لَمْ يُؤْمَرْ بِمَعْصِيَةٍ فَإِذَا أُمِرَ بِمَعْصِيَةٍ فَلَا سَمْعَ وَلَا طَاعَـــــةَ**

**رواه البخاري رقم الحديث 7144**

*"மாறு செய்யும்படி கட்டளையிடப்படாத வரை, ஒரு முஸ்லிம் தமக்கு விருப்பமான விஷயத்திலும் விருப்பமில்லாத விஷயத்திலும் செவியேற்பதும், கட்டுப்படுவதும் கடமையாகும். மாறு செய்யும்படி கட்டளையிடப்பட்டால் செவியேற்பதோ கட்டுப்படுவதோ கூடாது' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்"*
**அறிவித்தவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)**
***நூல்: ஸஹீஹ் அல் புகாரீ, ஹதீஸ் எண்: 7144***

*சர்வதேச வலிமை மிக்க ஒரு ஜமாஅத்தை உருவாக்குவதற்கு இந்தச் சமுதாயம் தயாராக வேண்டும். இன்று பிரிந்து கிடக்கும் ஜமாஅத்துக்களை ஒன்றிணைத்து அதற்காகப் பாடுபட வேண்டும். இறைவனுக்கும் இறைத்தூதருக்கும் முற்றிலும் கட்டுப்பட்டதாய் அந்த ஜமாஅத் இருக்க வேண்டும். எந்த அச்சுறுத்தலுக்கும் அடங்காமல் அக்கிரமத்தை அழிக்கும் வலிமையை அது பெற்றிருக்க வேண்டும். உலகில் அமைதியை ஏற்படுத்தி மனிதர்கள் அனைவரையும் மறுமையில் சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். சுயநலமற்றவர்கள், இலாபநோக்கு இல்லாதவர்கள், இறைவனுக்காக உயிரையும் தியாகம் செய்யும் பக்குவம் உடையவர்கள் அதன் பொறுப்பாளர்களாய் இருக்க வேண்டும். இப்படி ஒரு ஜமாஅத் உருவாகும்போதே இறையாட்சி இந்த மண்ணுலகில் மலரும்; அமைதி நிலவும். அதற்காக நாம் பகலும் இரவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக!*

*சத்தியத்தை எடுத்துரைக்கும் பொறுப்பை இந்நூலின் வாயிலாக எங்களால் முடிந்தளவு நாங்கள் செய்திருக்கிறோம். இதற்கு இறைவனையே சாட்சியாக்கி வைக்கிறோம். இந்த உண்மையை உணர்ந்து செயல்படும் பொறுப்பும், அதை*

பிறருக்கும் எடுத்துரைக்கும் பொறுப்பும் உங்களுக்கு நீங்கள் வாழும் காலமெல்லாம் இருக்கிறது. இதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். நம்முடைய எண்ணங்கள் செயல்பாடுகள் ஆகிய எல்லாவற்றுக்கும் இறைவனே போதுமானவன்.

**இன்னும், வெளிப்படையாக எடுத்துரைப்பதைத் தவிர எங்களின் மீது வேறில்லை.**

***திருக்குர்ஆன் 36:17***

HCI